# கடாட்சம்

## இலக்கியத் தடங்கள்



இலக்கியவித்தகர்
கனகசபை தேவகடாட்சம்

தொகுப்பு
அருமைநாதன் ஸதீஸ்குமார்

வெளியீடு
சம்பூர் தமிழ்க்கலாமன்றம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாட்சம்

## இலக்கியத் தடங்கள்

தொகுப்பு

**அருமைநாதன் ஸதீஸ்குமார்**

வெளியீடு
சம்பூர் தமிழ்க்கலாமன்றம்
திருகோணமலை
*2024*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | |
|---|---|
| பெயர்:- | "கடாட்சம்" - இலக்கியத் தடங்கள் |
| வகை :- | கட்டுரைத் தொகுப்பு |
| உரிமை :- | நூலாசிரியர் |
| ஆசிரியர் :- | அருமைநாதன் ஸதீஸ்குமார் |
| மொழி :- | தமிழ் |
| பக்கங்கள் :- | 92 |
| வெளியீடு :- | சம்பூர் தமிழ்க்கலாமன்றம், திருகோணமலை. |
| தொலைபேசி எண் :- | 0772247613 |
| அச்சுப்பதிப்பு :- | பென் விஷன் பிரிண்டர்ஸ் |
| | திருக்கோணமலை. 0769000035 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | நுழைவாயிலில் உங்களோடு | | 5 |
| | வெளியீட்டுரை | | 7 |
| | அறிமுகம் | | 8 |
| | இந்திய இலக்கிய நண்பர்களின் "குருதி மண்" வெளியீடு | | 15 |
| 1. | வாழ்த்துரை | - தமிழ்மணி அகளங்கன் | 16 |
| 2. | பண்பட்ட எழுத்தாளர் | - சி. தண்டாயுதபாணி | 18 |
| 3. | கலையுணர்வு கொண்ட பண்பாளன் | - க. யோகானந்தன் | 20 |
| 4. | தனிமரம் தோப்பாகாது. ஆனால் தன்னையும் ஒரு தோப்பாக மாற்றிக் கொண்டவர் | - ச. சற்குணசிங்கம் | 22 |
| 5. | முத்துறை ஆவலோன் | - சரா புவனேஸ்வரன் | 23 |
| 6. | நெஞ்சை நிமிர்த்திப் பேசும் புரட்சியாளன் | - க. அன்பழகன் | 24 |
| 7. | "தேவகடாக்ஷம் வெல்கவே" | - பி.பி. ஶ்ரீநிவாஸ் | 25 |
| 8. | அமரர் சி.குருநாதன் அவர்களுடனான பேட்டி | | 26 |
| 9. | வெப்புசாரத்தில் பிறந்த "பறக்காத பறவைகள்" | - அ. ஸதீஸ்குமார் | 28 |
| 10. | ஊடகத்துடனான நட்பு | - அ. அச்சுதன் | 30 |
| 11. | உகந்து உதவுகின்ற கொடை வள்ளல் | - ம. சச்சிதானந்தம் | 31 |
| 12. | எனது நண்பன் "தேவா" | - கெ. தர்மகுலராசா | 32 |
| 13. | கடாட்சம் ஒரு காரிய இயந்திரம் | - திருமலை நவம் | 35 |
| 14. | சிறந்த கதைசொல்லி | - ஆ. செல்வநாயகம் | 37 |
| 15. | தேவகடாட்சம் ஒரு கலைக்களஞ்சியம் | - க. துஸ்யந்தன் | 38 |
| 16. | நட்புடன் தொடரும் உறவு | - சுஜந்தினி யுவராஜா | 42 |
| 17. | அம்மான் கண் | - த. ஜீவராஜ் | 43 |
| 18. | இலக்கிய நயமிக்க பேச்சாளர் | - க. கோணேஸ்வரன் | 44 |
| 19. | சுவிசில் நான் கண்ட தேவகடாட்சம் ஐயா | - தி. முரளிநடேசன் | 45 |
| 20. | மண்ணின் மைந்தன் | - தி. பவித்திரன் | 48 |
| 21. | தோழமையுடன் உறவாடும் தேவகடாட்சம் ஐயா | - கனக தீபகாந்தன் | 49 |
| 22. | இன்றைய தலைமுறைகளின் வழிகாட்டி | - கோ. செந்தூரன் | 50 |
| 23. | தெட்சணகைலாய தேசத்தில் தொண்டாற்றக் கிடைத்தமை பெரும் பேறு | - பொன் சற்சிவானந்தம் | 51 |
| 24. | சுவிசில் தமிழ் ஆசானாகிய திரு.க. தேவகடாட்சம் | - இ. லோகேஸ்வரன் | 52 |
| 25. | சேவை மனப்பான்மையுடைய தேவகடாட்சம் ஐயா | - றொசில்டா | 54 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மல்லிகைத்தீவில் மலர்ந்த இலக்கியமே... - த. தவரூபன் 55
27. மக்கள் வாழ்க்கையை இலக்கியத்தின் ஊடாக வெளிப்படுத்தியவர் - ஓ. குலேந்திரன் 57
28. நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஒரு வளவாளர் - எஸ். ஆர். தனபாலசிங்கம் 64
29. தாளுண்ட... - வ. முரளிதரன் 66
30. பன்முக ஆளுமை கொண்ட தேவா - எம். எஸ். அமானுல்லா 69
31. தோழனின் சில நினைவுப் பதிவுகள் - குருநாதன் 72
32. பல்துறைக் கலைஞர், வித்தகர் கனகசபை தேவகடாட்சம் என்னும் பல்துறைசார் ஆளுமை - வி. குணபாலா 73
33. திருக்குறளும் தேவகடாட்சம் ஐயாவும் - அ. ஸதீஸ்குமார் 74
34. சமூகம் சார்ந்த இலக்கியப்பணியில் நண்பர் தேவகடாட்சம் - கே.எம். அமீர்டீன் 76
35. நான் கண்ட தேவகடாட்சம் - பசீர் 78
36. இலக்கியத்தினூடாகச் செப்பனிட்ட வழித்தடம் - சு.கணேசலிங்கம் 81

"காலக்கீறல்கள்" நூல் விமர்சனம் - மாவை வரோதயன் 84
"குமுறல்கள்" சிறுகதைத் தொகுதியை நயந்த தாமரைத்தீவான் 85
"குருதிமண்" நூல் விமர்சனத்திலிருந்து - காத்தான்குடி அனு 86
"மணப்பரிசு" தொகுப்புநூல் அறிமுகம் - அ. ஸதீஸ்குமார் 88

வெற்றிப்பரிசுகள், விருதுகள் ---------------------------------------- 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயிலில் உங்களோடு...

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. இதனுடைய விளக்கங்கள் பல. காலம் என்னும் நீரோட்டத்தில் அள்ளுண்டு போகும் மாந்தர்களில் ஒரு சிலரே எதிர்நீச்சலடித்து வெற்றியைச் சுவைத்து, அதன் இன்பத்தேனை தன்னைச் சார்ந்தவர்களுக்கும் அள்ளிக் கொடுக்கின்றனர். இன்னும் சிலரோ கால நீரோட்டத்தில் துரும்பைப் போல அலைக்கழிக்கப்பட்டாலும், அத்துன்ப துயரங்களையும் தன்னுள்ளே உள்வாங்கிக் கொண்டு, அதனையும் வெகுவாக இரசித்து, இன்பச் சுவையோடு அடுத்தவர்களுக்குத் தருகின்ற தன்மையுடையவர்களாக இருக்கின்றனர். இவ்விரு தரப்பினரின் தடங்கள் ஏனையோரின் முயற்சியுடனான செயலாக்கத்துக்கு படிக்கல்லாக அமைகின்றன என்பதில் மாற்றுக் கருத்து இருப்பதில்லை.

எனினும் சந்தர்ப்பவாத சூழ்நிலைகளாலும், போராட்டகாலத்து அழுக்காறினாலும் நாம் தொலைத்துவிட்ட எம் மூதாதையினரின் தடங்கள் அனேகமே. இருந்த போதிலும் காலத்திற்குக் காலம் பெருமை தருகின்றதும், நிலையான அடித்தளம் அமைக்கத் தேவையானதுமான தடங்களைப் பெரியோர்கள் பதித்து விட்டுத்தான் சென்றிருக்கின்றார்கள். இலக்கியமும் இதன்பாற் பட்டதே.

அந்தவகையில் மற்றுமோர் இலக்கியத்தடமாக மூத்த எழுத்தாளரும் வித்தகருமான கனகசபை தேவகடாட்சம் ஐயா அவர்கள் சார்ந்ததாக இந்த ஆவணப் பதிவு வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும். தான் சார்ந்த இனத்துக்கும், தாய்மொழிக்குமாகத் தன்னுடைய வாழ்நாட்களின் பெரும்பகுதியை செலவிட்டுக் கொண்டிருக்கும் திருவாளர் தேவகடாட்சம் அவர்களின் கடந்தகால, நிகழ்கால செயற்பாடுகளும், அவற்றினாற் கண்ட விளைவுகளும் இப்பதிவில் மிகைப்புகழ்ச்சியற்று எடுத்தாளப்பட்டுள்ளது எனக் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் கொட்டியாபுரப்பற்றிலே மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மல்லிகைத்தீவு என்னும் கிராமத்தில் 1953.10.12 அன்று பிறந்த திருவாளர் க. தேவகடாட்சம் அவர்கள் தன்னுடைய 70 வருட வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு பிரதேசங்களிலும், நாடுகளிலும் இலக்கியத்தைப் பணியாகச் செய்துள்ளார். அவை எம்மளவிலான இளைய சந்ததியினருக்கு சுட்டுப்பொருளாக அமைந்து, இன்பம் துய்த்துத் துணியவல்லது.

ஒரு எழுத்தாளருக்குரிய பங்களிப்பு, விமர்சனம், ஊக்குவிப்பு, மீள்நினைவூட்டல், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடயங்களைத் தான் சார்ந்த சமூகத்திற்குச் செய்கின்ற இவருடைய சுபாவம் என்னை வியப்பிலாழ்த்தும். ஒவ்வொரு தடவையும் சந்திக்கும் போது ஓரிரு மணித்தியாலங்களுக்கு மேல் உரையாடுவது வழக்கமான செயலாகிவிட்டது. அந்த எத்தனிப்பில் இவர் ஒரு வரலாற்று முதுசம் என்றால் மிகையல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறானதொரு சேவையாளருக்கு, பண்பாளருக்கு சம்பூர் தமிழ்க்கலாமன்ற வெளியீடாக இப்பதிப்பைத் தருவதில் நானும், எமது கலாமன்ற உறுப்பினர்களும் பெருமையடைகின்றோம். தாரதம்மியமறிந்து வெளியிடப்படும் இச்சிறுபதிப்பில் ஏதேனும் குறைகள் காணப்படின் அறியத்தருமாறு வேண்டி நிற்கின்றோம்.

இங்கு கூறப்பட்டுள்ள சம்பவங்களில் அனேகமானவை அச்சுப்பதிப்பில் வெளிவந்தவைகளாகும். மேலும் பல ஆக்கங்கள் (இலக்கிய நினைவுகள், வாழ்த்துகள்) என்னுடையதும், திருவாளர் தேவகடாட்சம் அவர்களினதும் இலக்கிய நண்பர்களாலும், சமூகப் பிரதிநிதிகளாலும் மகிழ்வோடு உவந்தளிக்கப்பட்டவைகளாகும். அந்தந்த ஆக்கங்களுக்கு அவர்களே உரிமையானவர்கள். மாற்றங்களெதுவும் என்னால் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறிக்கொள்கின்றேன். இவ்வாக்க இலக்கியவாதிகளுக்கு பெருநன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இவ்வாறானவர்களின் இலக்கியத்துக்கான ஒன்றுகூடல் எம் தமிழினத்தை கருத்தாடல்கள் மூலம் உய்விக்கும் என்பது திண்ணம்.

மேலும் பலவிதமான வேண்டுகோள்களின் பின்னர் இந்த நூல் வெளிவர தனது அனுமதியைத் தந்த, மூத்த எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சம் அவர்களுக்கும், அவர் குடும்பத்தாருக்கும் என்னுடைய நன்றி உரித்தாகட்டும். இந்த இலக்கியத்தடம் போல மேலும் பல இலக்கியவாதிகளின் தடங்களை ஆவணப்படுத்த வேண்டிய எண்ணத்தையும், செயலாற்றலையும் எண்குணத்தான் தாள்பணிந்து வேண்டி முடிக்கின்றேன்.

நன்றி

மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார்
தலைவர் - சம்பூர் தமிழ்க்கலாமன்றம்
மூதூர், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இலக்கியமும் இலக்கியவாதிகளும் காலத்தால் போற்றப்பட வேண்டிய ஒரே தளத்திலே பயணிக்கின்ற ஆக்கமும் ஆக்கப்படுபவனாகவும் இருக்கின்ற இரண்டு விடயங்கள். இந்த இலக்கியங்களின் செல்வாக்கு நமது சமூக இயங்கியலில் பல்வேறு பரிமாணங்களில் நம்மை வந்தடைகின்றன. இவ்வாறு வந்தடையும் அவை நம்மில் நம்மிடையே வாழுகின்றவர்களின் படைப்புகளாக வருகின்றபோது இன்னும் சிறப்பு வாய்ந்ததாய் இருக்கிறது என்றே சொல்லியாகவேண்டும்.

பொதுவாக காலத்தின் போக்கில் நாம் இலக்கிய வறுமைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இக்கட்டான சூழலில் காலம் நம்மை தள்ளிவிட்டுவிடுகிறது. அது நமக்கு பல புரிதல்களை உண்டுபண்ணிவிடுகிறது. அப்படியாக நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடமாகவே இன்னும் இருக்கிறது. படைப்பாளிகளின் மீதான கௌரவம் அதுவும் வாழும்போதே வாழ்த்துகின்ற பண்பு எனலாம். இந்த விடயத்தில் சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தினராகிய எமது அடைவு ஓரளவு சொல்லிக்கொள்ளக்கூடிய வகையிலையே இருந்து வந்திருக்கிறது.

குறிப்பாக எமது வருடாவருடம் இடம்பெறும் முத்தமிழ் விழாக்களில் இலக்கிய தளங்களில் செயற்படுகின்றவர்களையும் செயற்பட்டவர்களையும் விருதுகள் நினைவரங்கங்கள் என கௌரவித்து வந்திருக்கின்றோம். அதேபோல தமிழ் உலகிற்கு அருஞ்சாதனை செய்த விபுலானந்தர், ஆறுமுகநாவலர் போன்றவர்களுக்கு நினைவுருவச்சிலையினையும் சம்பூர் கிராமத்தில் நிறுவிப்பெருமையுற்றிருக்கிறோம்.

அந்த வரிசையில் இப்போது இன்னுமொரு புதிய வடிவமாக சமகால இலக்கியத்தளத்தில் பேச்சாளராக, சிறுகதையாளராக, தமிழ்தேசிய பற்றாளராக, சமூக செயற்பாட்டாளராக இப்படி பலதளங்களில் தனது பங்களிப்பை நல்கிவரும் பல்துறையாளரான எழுத்தாளர் தேவகடாட்சம் அவர்களை ஆவணப்படுத்தும் முயற்சியை சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தினராகிய நாம் முன்னெடுக்க விளைந்திருக்கின்றோம். இந்தப்பரப்பில் இன்னும் நமது மண்ணில் வேரூன்றி விளைந்து நிற்கின்ற எழுத்தாளர்களை ஆவணப்படுத்தவேண்டிய கடமையுடைவர்களாக இருக்கின்றோம் என்பதனையும் கூட பதிவுசெய்து கொள்கின்றோம். மிக காத்திரமான ஒரு எழுத்தாளரை அவரின் எழுத்துக்களை ஆவணப்படுத்துவதில் ஆரம்பிக்கும் இந்த முயற்சி இன்னும் பல இதழ்களை பிரசவிக்க உங்கள் ஒத்துழைப்புகளை வேண்டிநிற்பதோடு இவ் ஆவணமாக்கலில் கரம் கோர்த்த அத்தனை உறவுகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்னுமொரு பிரசவிப்பில் சந்திப்போம்.

சம்பூர் தமிழ்க்கலா மன்றம்.
மூதூர், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

## திருகோணமலை

திருகோணமலை, இலங்கைத்தீவின் கிழக்கு வாசல். பெயருக்கேற்றாற் போல அனேக மலைத் தொடர்களையும், குன்றுகளையும் கொண்டது. மிகநீளமான அழகிய கடற்கரையெங்கும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயற்கைக் காட்சிகள் ஏராளம். எழிலார்ந்த இயற்கைத் துறைமுகமும் இங்குண்டு. பலநாட்டவர்கள் வந்து தரிசித்துச் செல்வதுவும், வரலாற்றுக் காலத்துக்கும் முற்பட்டதெனக் கூறப்பட்டு வருகின்றதுமான திருக்கோணேச்சரம் என்னும் சிவப்பதி அமைந்துள்ள சுவாமி மலையும் இங்குள்ளது சிறப்பு. துறைமுகப்பட்டினமாகவும், ஆத்மிகத் தலமாகவும் இதன் புகழ் உலகெங்கினும் பரவியுள்ளது.

பண்டு தொட்டு எத்தனையோ போர்கள், கலவரங்கள், இடப்பெயர்வுகள், குடியேற்றங்கள், பரசமய ஆக்கிரமிப்புகள், சைவசமய வழிபாட்டுக்கான தடங்கல்கள் போன்ற இன்னோரன்ன இடர்பாடுகள் இன்றுவரையும் திருகோணமலையில் தொடர்ந்தே வருகின்றன. இருந்தபோதிலும் ஆத்மிகத்தின் உற்பத்தியும், உறைவிடமுமாக திருகோணமலை விளங்கி வருகின்றமையை பல பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

எங்குமில்லாதவாறு இங்கு காணப்படுகின்ற ஏராளமான இலக்கியப் படைப்புகள் திருக்கோணேச்சரம் சார்ந்தவைகளாகவே உள்ளன. இதன் காரணமாக முன்னரான காலங்களில் திருக்கோணேச்சரத்தை மையமாகக் கொண்டு ஓர் இலக்கியப் பாரம்பரியம் உருவாகியிருந்தது எனப் பல வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவ்வகையான இலக்கியங்களே திருகோணமலையினுடைய வரலாற்றை இட்டு நிரப்பக்கூடிய வகிபாகத்தைக் கொண்டு காணப்படுகின்றன என்பதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணரலாம். இது இன்றளவும் தொடர்ந்து கொண்டிருப்பது நம் கண்முன்னே தெளிவாகத் தெரிகின்றது. திருவாளர் தேவகடாட்சம் அவர்களின் இலக்கியப் படைப்புகளும் அதற்கு விதிவிலக்கல்லவே. இவரது சிறுகதைகளிலும் கட்டுரைகளிலும் திருக்கோணேச்சரம், கந்தளாய் போன்றவற்றின் வாலாற்றுப் பதிவுகள் பலவாறாக விரவிக் கிடக்கின்றன.

## கொட்டியாபுரப்பற்று - மூதூர்

திருகோணமலை பதினொரு பிரதேச செயலக நிருவாகப் பிரிப்புகளைக் கொண்டது. இவற்றுள் மூதூர் பிரதேச செயலகமும் உள்ளடக்கம். பண்டைய கொட்டியாபுரப்பற்று என்னும் பிரிவில் மூதூர், சேருவில, வெருகல் என்னும் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகள் காணப்படுகின்றன. கொட்டியாபுரப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து சேருவில உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பின்னர் சேருவில பிரிவில் இருந்து வெருகல் உ.அ.அ.பிரிவு (பிரதேச செயலகம்) உருவாக்கப்பட்டது. இன்று மூதூர் பிரிவில் 76 கிராமங்களும், வெருகல் பிரிவில் 37 கிராமங்களும், சேருவில பிரிவில் 26 கிராமங்களும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டியன் என்னும் நாகர்குல சிற்றரசனின் ஆட்சிக்குட்பட்ட இப்பகுதி "கொட்டியனூர்" என்று அழைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதுவே பின்னரான காலங்களில் கொட்டியாபுரப்பற்று என அழைக்கப்பட்டிருக்கலாம். (பற்று – பெருநிலப்பரப்பு, புரம் - குடியிருப்பு, ஊர்).

மூதூர் என்னும் பெயரானது "முத்தூர்" என்பதில் இருந்து மருவி வந்ததாகக் கூறுவர். பண்டைய காலங்களில் கங்கைக் கழிமுகப் பகுதிகளில் முத்துக்குளிக்கும் தொழில் இடம்பெற்று வந்துள்ளதாக வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தோடு ஒல்லாந்தர் காலத்தில் "மோதற" என்று அழைக்கப்பட்ட பகுதியே இன்று மூதூர் என்றாகியதாகவும் கூறுவதுண்டு. இவ்வாறான சிறப்புக்களையுடைய மூதூரில் நீர்நிலைகளாலும் வயல்வெளிகளாலும் சூழப்பெற்ற மருதநிலப் பகுதியான மல்லிகைத்தீவு என்னும் அழகிய கிராமத்தில் கனகசபை – தங்கரெத்தினம் தம்பதியினருக்கு 1953 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12 ஆந் திகதி திருவாளர் தேவகடாட்சம் அவர்கள் பிறந்தார். செல்வச்செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்து, தாயின் மிதமிஞ்சிய அரவணைப்பில் தனிக்காட்டு ராஜாவாக வளர்ந்து, எதற்கும் அஞ்சாத குணத்தோடு இன்னமும் கூறப்போனால் ஒரு தடிப்பான மனிதராக வலம்வந்தார் என்றே கூறவேண்டும்.

தனது கல்வியை மல்லிகைத்தீவு வித்தியாலயம், பெருந்தெரு மெதடிஸ்த மிசன் பாடசாலை, பொரளை உவெஸ்லி கல்லூரி, புனித சூசையப்பர் கல்லூரி போன்றவற்றில் பெற்று வளமான எதிர்காலத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

## விளையாட்டு

கரப்பந்தாட்டம் விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டு திறமை வாய்ந்தவராக விளங்கினார். அதற்கேற்றாற் போல நல்ல உயர்ந்த தோற்றமும் சுறுசுறுப்புமுடையவராகக் காணப்பட்டார். 1970 காலப்பகுதிகளில் திரு. சிங்காரவேலு மாஸ்டரின் ஒத்துழைப்புடன் அணிக்கு நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை தொடக்கி வைத்ததோடு மட்டுமல்லாது, அதில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள பல விளையாட்டுக் கழகங்களைப் பங்குபற்றவும் செய்தார். சிறந்த விளையாட்டு வீரரான அவரது "டாஷ்" அடியைக் காண்பதற்காக ஏராளமான இரசிகர் பட்டாளம் இவரைப் பின்தொடர்ந்த வரலாறுகளை இவரது நண்பர்கள் மீட்டிப் பார்த்து மகிழ்கின்றனர். அந்நாட்களில் மூதூர் பிரதேசக் கிராமங்களின் பிரதான விளையாட்டாக கரப்பந்தாட்டமே விளங்கியது. மட்டைப்பந்து (கிறிக்கெற்) விளையாடப்பட்டு வருகின்ற போதிலும் இன்றளவும் அதுவே நிலைப்பாடு. இவர் கொழும்பில் படித்த காலங்களில், "றக்பி" விளையாட்டு அணியிலும் இடம்பிடித்த திறமையாளர். இவ்விளமைக்கால விளையாட்டுப் பயிற்சியே இன்றுவரை மனதளவிலும் உடலளவிலும் மிகத் தைரியமாக வலம் வருவதற்குக் காரணமெனக் கூறலாம்.

## இலக்கியப்புல நுழைவு

கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதில் திறமை வாய்ந்த திருவாளர் தேவகடாட்சம் அவர்களை ஒரு நடமாடும் நூலகம் என்றும் வரலாற்று முதுசம் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். ஆத்மிகம் தொடங்கி வரலாறு, இல்லறத்து வாழ்வு எனச் சகலவற்றிலும் ஆழ்ந்த புலமையாளர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். கண்ணதாசனின் பாடல் வரிகளை எந்நேரமும் அலசுபவர் என்பதெல்லாம் அவரோடு உரையாடுவோர் அறிந்த விடயங்களாகும். அதுமட்டுமல்லாது திருவள்ளுவர் பெருமானின் குறள்வரிகளை வாழ்க்கை விடயங்களோடு ஒப்புநோக்கிக் கூறுகின்ற திறன் இயல்பாகவே வாய்ந்திருந்த தன்மை கண்டு வியந்ததுண்டு. இஃது போன்ற திறமையாளரை இக்காலத்தில் நாம் காண்பதரிது.

அச்சு ஊடகத்தில் வெளிவந்த தன்னுடைய முதல் ஆக்கமாக, "திருஞானசம்பந்தர் வீதியில் திருமுருகன் தரிசனம்" என்னும் கட்டுரையைக் கூறுகின்றார். இஃது திருகோணமலையிலுள்ள முத்துக்குமாரசுவாமி கோயிலுக்காக "சிவநெறி" முத்திங்கள் சஞ்சிகையில் (சித்திரை, வைகாசி, ஆனி 1992) வெளி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இச் சஞ்சிகைக்காக தன்னை எழுதத் தூண்டிய தனது நண்பரான திரு. செ. நவசோதிராசா என்பவரை இன்றளவும் நன்றி கூருவதானது, இவர் இலக்கியத்தின் மேல் வைத்த தூய இச்சையைக் காட்டுகிறது. யுத்த காலத்தில் தனக்கு ஏற்பட்ட நெருக்குவாரங்கள், அடாவடித்தனங்கள், அடக்குமுறைகள் போன்ற ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்களுக்கு, பேனா என்னும் ஆயுதத்தைத் தூக்க முனைந்தபோது எழுத்துக்கள் புறப்பட்டன. அவை தன்னை ஓர் எழுத்தாளன் ஆக்கியது என தனது கடந்தகாலங்களை மீட்டிப் பார்க்கின்றார். இவரது முதலாவது சிறுகதையான "மதில் மேல்" 1995ஆம் ஆண்டு தினமுரசு வாரமலர் பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

திருவாளர் க. தேவகடாட்சம் அவர்கள் அடிக்கடி என்னிடம் கூறும் வார்த்தை!

**"இலக்கியங்கள் அறம் சார்ந்து படைக்கப்பட வேண்டும்.**
**இலக்கியவாதி எனப்படுபவரும் அறம் சார்ந்து இயங்க வேண்டும்"**

அஃதில்லாவிடின் அவ்விலக்கியவாதியும், அவர் படைப்பும் நிலைத்திருக்காது என்பார். இஃது மிகமிக உண்மையான கருத்து என்பது எனதெண்ணம்.

இலக்கிய நிகழ்வுகளின் வளவாளராகவும், போட்டி நடுவராகவும், நூல் மதிப்பீட்டாளராகவும், சிறப்புரையாளராகவும் ஆற்றியுள்ள பணி போற்றத்தக்கது. அத்தோடு இந்நூலாசிரியனாகிய என்னுடைய "தென்திருமலை தேசம் பாகம்-3" இல் இவர் பற்றிய சுருக்கக் குறிப்பொன்றினை கொட்டியாபுரப்பற்று இலக்கியவாதிகள் என்னும் தலைப்பினுள் ஆவணப்படுத்தியுமுள்ளமை இந்நேரத்தில் நினைவு கூரத்தக்கது.

**அச்சு ஊடகங்களில் சிறுகதைகள், கட்டுரைகள்**

தினமுரசு வாரமலர், சங்கம், வீரகேசரி, நவமணி, தினக்குரல், சரிநிகர், கதிர், ஆதவன், சுடரொளி போன்ற பத்திரிகைகளிலும், ஞானம், இலங்கை விகடன்(2003), தாயகஒலி, சிறுகதை மஞ்சரி போன்ற சஞ்சிகைகளிலும், தமிழ்மொழித்தின சிறப்பு மலர் (1999), பெயர் (2002), சம்பூர் தமிழ்க்கலா மன்றத்தின் முத்தமிழ் விழா சிறப்பு மலர்கள் (2018,2020) போன்றவற்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், கட்டுரைகளையும் தொடர்ச்சியாக இன்றுவரை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதியுள்ளார். இவரது எழுத்துக்களின் தன்மையினை நூல் விமர்சகர்கள் கருத்தினால் மேலும் விளக்கமாக அறியலாம். இங்கு இவை விரிவஞ்சி தவிர்க்கப்படுகின்றது.

**கவிதைகள்**

சிறந்த சிறுகதை எழுத்தாளர், விமர்சகர், கட்டுரை வரைவதில் தேர்ந்தவர் எனப்புகழ் பெற்ற திருவாளர்.க.தேவகடாட்சம் அவர்கள் எழுதிய கவிதைகளும் அச்சேறியுள்ளமையைக் காணலாம். குறிப்பாக திருமலை சுந்தா அவர்களால் தனது தாயாரின் நினைவாக "அம்மா" என்னும் பெயரில் வெளியிடப்பட்ட பதினைந்து கவிதைகளுள் இவரது கவிதையும் அடங்கியுள்ளமை சிறப்பு.

மேலும் 1998-02-25 அன்று அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவில் கவிஞர் கந்தவனம் கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கவிதை அரங்கத்தில், இவரும் பிறப்புரிமை என்னும் தலைப்பில் கவிதை பாடியுள்ளார் என்றும், இவர் சுவிச்சலாந்தில் வாழ்ந்த காலத்தில் அங்கு நடைபெற்ற "நிஜத்தின் நிழல்" என்னும் கவிதை நூல் அறிமுக விழாவில் சிறப்புரையாற்றியிருந்தார் என்றும் அறியக் கூடியதாயுள்ளது. (இவை என்னால் தேடியறிந்து கொண்டவை மட்டுமே)

**சைவசமயப் பணிகள்**

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றும், "ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க" என்றும், சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தின் மீது உண்மையான பக்தி கொண்டவர். இளையோர்கள் கடவுள் பக்தி உடையவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் ஏனைய உயிர்கள் மீதும் அன்பாக இருக்க முடியும் என்ற கொள்கையில் உறுதியானவர். திருகோணமலை மாவட்டத்தில் நடைபெறும் பல அறநெறிப் பாடசாலைகளின் பால் தன்னுடைய சிந்தையைச் செலுத்தி, அவ்வகுப்புகள் தொடர்ச்சியாக சிறப்பான முறையில் நடைபெற வேண்டும் என்பதற்காக தன்னால் இயன்ற உத்விகளைச் செய்து வருகின்றார். அதற்காக கற்றல் உபகரணங்களை வழங்கியும், அன்னதான ஏற்பாடுகள் செய்தும் வருவது நாம் அறிந்த விடயங்களாகும்.

இவைகள், தான் தலைவராகவும் ஸ்தாபகராகவும் இருந்து வருகின்ற திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் சார்பாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவரது பயணங்கள் அண்மைக்காலத்தில் சூடைக்குடா, சந்தனவெட்டை அறநெறி மாணவர்களுக்கான உதவிகளாகவே பெருமளவு அமைந்துள்ளன. பல தடவைகள் அறநெறி வகுப்புகளை நடாத்தும் ஆசிரியர்களுக்கும் தகுதியான வளவாளர்களைக் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பயிற்சிக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றமையையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. மீள்புனரமைக்கப்பட்ட கன்னியா வெந்நீரூற்று சிவனாலய பரிபாலனசபையின் பொருளாளராக இருந்து காவல்துறை, சட்டம், இயங்குநிலை எனப் பலவிதமான குழப்ப நிலைகளுக்கு மத்தியிலும் நேர்மையான முறையில் இயங்கி, ஆடி அமாவாசை பிதிர்க்கடன் நிறைவேற்றும் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி, சமூகப் பணிகள்**

இதனுடைய மிகவுயர்ந்த பெறுமானத்தை உணர்ந்து தனது தலைமையிலான நிதியத்தின் சார்பாக பல மாவட்டங்களிலும், குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் ஏராளமான கிராமங்களிலும் (இலகுவாகவும், சிரமமில்லாமலும், நிம்மதியாகவும் செல்ல முடியாத கிராமங்களுக்கும்) தனது பாதங்களைப் பதித்து, தனது குழுவினருடன் மிகச் சிறப்பானதும், காலத்தால் போற்றக்கூடியதுமான சேவைகளை இனமத வேறுபாடுகளில்லாது செய்துகொண்டு வருகின்றார். இவைகளைப் பட்டியல்படுத்த முனைவோமாயின் அளவு கொள்ளாது. ஆகையால் இவற்றைத் தவிர்ப்போம். இதுபற்றி அறியவேண்டுமாயின் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்வந்த பத்திரிகைகளிலும், "தேவைக்குச் சேவை" என்னும் செய்தி மடலிலும் (23-03-2003) காணலாம்.

"இலக்கியத்துறை ஊடாக சமூகப் பணியைத் தான் தேர்ந்தெடுத்த போது, அம்முயற்சி தோல்வியில் முடிந்து விடுமோ என எண்ணியிருந்த வேளை, எனக்கு உத்வேகம் தந்து செவ்வனே முன்னெடுக்க வழிசமைத்துக் கொடுத்தவர்களில் முதன்மையானவர் குருநாதன் ஐயா என்றால் அதில் எந்தவித மிகைப்படுத்தலோ கூறுவதில் அச்சமோ வெட்கமோ இல்லையென துணிந்து கூறுவேன்." இவ்வாறு பத்திரிகை நிருபராகவிருந்த அமரர் சி. குருநாதன் ஐயா அவர்களுடனான தொடர்பு பற்றிக் குறிப்பிடுவது அவரது நன்றி மறவாக் குணத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது எனலாம்.

**வரலாற்றைப் பேணுதல்**

தமிழினம் மீதும், தமிழ் மொழியின் மீதும் மிகவும் பற்றுறுதி கொண்ட இவர் வாய்ச்சொல்லில் மட்டுமல்லாது, செயல்களிலும் ஒரு தூரநோக்குப் பார்வையைக் கொண்டவர். குறிப்பாக எமது வரலாற்றுத் தொன்மைகளைச் சிறப்பித்துக் காட்டுகின்ற திருக்கோணேச்சரம், அகத்தியதாபனம், கன்னியா, கந்தளாய் பகுதிகளின் வரலாற்றுச் செய்திகளை கதைகளாகவும், கட்டுரைகளாகவும் அச்சு ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

தன்னுடைய நிதியத்தினூடாகச் செய்கின்ற திட்டங்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தி கீழ்வருமாறு பெயரிட்டு நெறிப்படுத்தி வருகின்றார்.

1. அகத்தியம்
2. மாவலியாள்
3. இராவணேஸ்வரம்
4. கோணேஸ்வரம்

திருகோணமலையில் தமிழர் தொன்மையை சான்றுகள் கொண்டு நிறுவி, அதனை வெளிப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு ஆவணப்படுத்தி வழங்குவது தொடர்பான கூட்டம் 18-07-1999 இல் நடைபெற்றது. இதன்போது பண்டிதர் இ. வடிவேல் அவர்களைத் தலைவராகவும், திரு.க. தேவகடாட்சம் அவர்களைச் செயலாளராகவும் திரு. சுப்பிரமணியம் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு "திருக்கோணேஸ்வரா ஆய்வு மையம் உருவாக்கப்பட்டது. மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட இம்மையத்தின் செயற்பாடுகள் வெற்றியளிக்காமல் போனமை கவலைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்டம் தாண்டிய இலக்கிய நிகழ்வுகள்

மூத்த எழுத்தாளர் திரு.க. தேவகடாட்சம் அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் பல இலக்கிய நிகழ்வுகளிலும், சமய சமூக நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு ஒரு ஆரோக்கியமான கருத்தாடலை நிகழ்த்துவது நாம் அறிந்ததே. எந்தவொரு அரச உயர் அதிகாரிகளுக்கோ, அரச அல்லது போராளிப் படையதிகாரிகளுக்கோ தலை தாழ்த்தாது, பிழையென்று பட்டவைகளை முகத்துக்கு நேரே தெளிவாகக் கூறிவிடுவார். அதில் நண்பர், உறவினர், எதிரி என்ற வேறுபாடுகள் எதுவும் இருக்காது. இதன் காரணமாக அவர் சந்தித்த விளைவுகள் அனேகம். மற்றவர்களைப் போல தனக்கொரு குடும்பம் இருப்பதையே மறந்து விடுவார் என்பதை அவரது செயற்பாடுகள் தோற்றுவிப்பதுமுண்டு. ஆனாலும் இச்சூடு கண்ட பூனை அடிக்கடி அடுப்பங்கரையையே நாடியது அதன் பிறவிக்குணம் எனக் கருதவே இடமுண்டு.

ஏனெனில் எது நடப்பினும் தன்னினம் வாழ வழிகாண்பதிலேயே அவர் எண்ணங்கள் பயணப்பட்டுக் கொண்டிருப்பது வழமை. இதன் காரணமாகவே ஒரு சந்தர்ப்பத்தில் பலாத்காரமாக நாட்டைவிட்டுத் தூக்கியெறியப்பட்டார் என்பது கடந்தகால வரலாறு.

திருகோணமலை மாவட்டத்துக்கு அப்பாலும் அவரது ஏராளமான சமூக சேவைகள் இடம்பெற்றிருக்கின்ற போதிலும், குறிப்பாக இலக்கிய நிகழ்வுகளில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்றவிடங்களில் கலந்து கொண்டிருந்தார். சிறப்பான நிகழ்வாக இவரது குருதிமண் என்னும் சிறுகதைத் தொகுதியானது "வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்" நடாத்திய முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு - 47 இல் (09-03-2001 அன்று காலை 11 மணிக்கு) நூல் விமர்சனம் இடம்பெற்று அதைத் தொடர்ந்து ஆரோக்கியமான கருத்தாடலும் நிகழ்ந்ததாக அறியமுடிகின்றது. வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் திரு.த. விஜயசேகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

## ஐக்கியநாடுகள் சபையில் ஒலித்த குரல்

திருகோணமலை மாவட்டத்தின் தென்மேற்குப் புறமாகவுள்ள திருக்கரைசையம்பதி – கங்குவேலி அகத்தியதாபன சிவனாலயம் 2009-11-29 அன்று ஒருசில சுயநலங்கொண்ட பேரினவாதக் குழுவினரால் முற்றாக அடித்து உடைக்கப்பட்டது. இந்நிலையில் ஜெனிவாவில் நடைபெறவிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாட்டு அமர்வில் இதுபற்றி எடுத்துரைக்க நேரம் ஒதுக்கித் தருமாறு திருவாளர் க. தேவகடாட்சம் அவர்களின் தலைமையில் சில தமிழ்ப் புத்திஜீவிகள் அப்போதய ஐக்கியநாடுகள் சபையினுடைய மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராகவிருந்த நவநீதம்பிள்ளை அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இக்கோரிக்கையை கருத்தில் கொண்ட அவர் தனது செயலாளராகவிருந்த சொன் டப் (shaun tuff) மூலமாக மேற்கூறிய புத்திஜீவிகளை ஜெனிவாவுக்கு அழைத்திருந்தார். இதன்போது திரு.கனகசபை தேவகடாட்சம் (திருகோணமலை), திரு.புவிலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாகரன் (யாழ்ப்பாணம்), திரு.தியாகராசா முரளிநடேசன் (யாழ்ப்பாணம்), திரு.சித்திரவேல் நடேசலிங்கம் (திருகோணமலை) ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (வரலாற்றுச் சிறப்புமிக்க அகஸ்திய ஸ்தாபனம், த.தனுஷ்கர், 2023) இக்காலப்பகுதியில் திரு.க. தேவகடாட்சம் அவர்கள் சுவிச்சலாந்து நாட்டை வாழ்விடமாகக் கொண்டிருந்தார். எங்கு சென்றிருந்த போதிலும், அவர் தனது தாய்நிலத்தை எண்ணியபடியே வாழ்ந்திருந்தார் என்பது அவர் கலந்து கொண்ட நிகழ்வுகளாலும், சுவிஸ் நாட்டு நண்பர்கள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

## நட்புரிமை

எல்லோரிடமும் சகசமாக நட்புரிமை கொண்டு பழகிவருகின்ற இயல்புடையவர். இருந்தாலும் தன்னுடைய இளமைக்காலத்து நண்பனாகவும், உயிர்த் தோழனாகவும், உயிர்காத்த உன்னதமானவனாகக் கொள்வது அமரர் நஜீப் அப்துல் மஜீத் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் கிழக்குமாகாண முதலமைச்சரும்) அவர்களையேயாம்.


அந்த இரவுநேரம் அவர் தனது வீடுதேடி வந்து தன்னைக் காப்பாற்றாவிடில் தன்னை எப்போதோ புல் மூடியிருக்கும் என்று அடிக்கடி கூறுவார். அண்மையில் நஜீப் அவர்கள் மீளாத்துயில் கொண்ட செய்தி கேட்டு உடைந்தே போனார். சில நாட்கள் தன்னிலை தளம்பியிருந்ததும் நான் கண்டதே. அவர் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுபவராக இருந்த போதிலும், அவருடைய 31ஆம் நாளன்று ஏழை எளியவர்கள் இருக்குமிடம் சென்று, அவர்களுக்கு உணவளித்து இறைவனை வேண்டிய போது, அவர் நட்பின் தன்மை உரைக்கவியலாதது என்பதைப் புரிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய இலக்கிய நண்பர்கள் வெளியீடு செய்த "குருதி மண்" சிறுகதைத் தொகுப்பு

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கம், சென்னை அமைப்பின் தலைவர் கலைமாமணி டாக்டர் விக்கிரமன் அவர்கள் தலைமையில் திருகோணமலை எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சம் அவர்களின் "குருதி மண்" சிறுகதைத் தொகுதி வெளியீடு செய்யப்பட்டது. 25.04.2000 அன்று மாலை 6.00 மணிக்கு சென்னையிலுள்ள அண்ணாசாலை ஆனந்த் திரையரங்கத்தின், உமாபதி அரங்கில் இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.


கவிதை உறவு

திரு. கனகசபை - தேவகடாட்சம்

பாராட்டு விழாவும்

"குருதி மண்"

நாள் : 25.4.2000 ... மாலை 6 மணி

கலைமாமணி டாக்டர் விக்கிரமன்

திரு. கனகசபை தேவகடாட்சம்

திரு. வீ. இராமன் Centre Head APTECH COMPUTER EDUCATION Red Hills.

இதயகீதம் - அய்யாறு, அரக்கோணம் மோகன்

உலகறிந்த எழுத்தாளர் திரு. வல்லிக்கண்ணன் அவர்கள் நூலை வெளியிட்டு வைக்க, அதனைத் திரைப்பட நடிகர் திரு. ராஜேஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் திரையுலகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், இலக்கியச்சுடர் மூவேந்தர் முத்து, இதயகீதம்-அய்யாறு, அரக்கோணம் மோகன், ஆகியோரின் அழைப்பில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு நிகழ்வை திரு.கந்தையா நடேசபிள்ளை (மல்லிகைத்தீவு) அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றுமொரு நிகழ்வில் பிரபலமான பாடகர் ரீ.எம்.எஸ். சௌந்தரராஜன் அவர்கள் எழுத்தாளர் தேவகடாட்சம் அவர்களின் இலக்கியப் பணியை வாழ்த்தி பாராட்டுப்பத்திரம் வழங்கியதுடன் பொன்னாடை போர்த்தியும் சிறப்பு செய்திருந்தார்.

இதுமட்டுமல்லாமல், திருகோணமலையில் பள்ளத்தோட்டம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இக் "குருதிமண்" சிறுகதைத் தொகுதியின் நூல் அறிமுக விழா ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் 23-09-2000 அன்று மாலை 4.30 மணிக்கு திருமதி. புவனேஸ்வரி தண்டாயுதபாணி (உதவிக் கல்விப்பணிப்பாளர்) அவர்களின் தலைமையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை பங்காளனாய் என்றென்றும் வாழ்க!

**கலைமாமணி, கலாபூஷணம், தமிழ்மணி அகளங்கன்,**
**வவுனியா.**

வித்தகர் கனகசபை தேவகடாட்சம் அவர்கள், நான் சந்தித்த பழகிய மிக நல்ல மனிதர்களில் ஒருவர். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அமரர் சி.பற்குணம் அவர்களின் "நெஞ்சின் நெருடல்கள்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவுக்கு நூல் விமர்சகனாக நான் திருகோணமலைக்குச் சென்றிருந்த பொழுது (09-08-1997), இவரின் வீட்டில்தான் இரவு விருந்தாளியாய் என்பொழுது மகிழ்ச்சியாய் பயன்மிக்கதாய்க் கழிந்தது.

இவரதும் இவரது குடும்பத்தாரினதும் உபசரிப்பும் இவரோடான நீண்டநேர உரையாடலும் இவர்மேல் எனக்கு பெரும் விருப்பத்தை ஏற்படுத்தியது. தமிழ் மேலும், தமிழர் மேலும் மட்டுமின்றி மனிதர்மேலும், மானுடத்தின்மேலும் இவர் கொண்டிருந்த அக்கறையும் பற்றும் என்னை வியக்கவைத்தன. வவுனியாவிற்கு இவரைக் குடும்பத்தோடு அழைத்து வவுனியா இந்துமா மன்றத்தில் இவரை உரையாற்ற வைத்ததும் இரவு என்வீட்டு விருந்தினராக்கி மகிழ்ந்ததும் இன்னும் பசுமையான நிகழ்வுகளாக இருக்கின்றன.

சிறந்த சிறுகதை எழுத்தாளரான இவரின் கதை ஒன்றை நான் பல சிறுகதைப் பயிலரங்குகளிலும் சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வுகளிலும் கூறிவருகின்றேன். கணவனை இழந்த அழகிய இளம் பெண்ணொருத்தி இடம் பெயர்ந்து வந்து திருகோணமலையில் வாழ்கிறாள். அவள் வேலைக்குச் செல்லும் வழியில் நிற்கும் சில இளைஞர்கள் அவளின் ஆதரவற்ற நிலையைச் சாதகமாக்கி நாளாந்தம் அவளை வார்த்தைகளால் சீண்டுகிறார்கள். அவற்றைத் தாங்கமுடியாது வேதனைப்படும் அவள் ஒருகாரியம் செய்கிறாள்.

ஒரு நாள் பொட்டுவைத்து பூவைத்து நன்றாக அலங்காரம் செய்து சுமங்கலிப் பெண்போல மகிழ்ச்சியோடு வேலைக்குச் செல்கிறாள். இந்த இளைஞர்களைத் தாண்டும் போது தன்னோடு வந்த தோழிக்குச் சொல்வதுபோல் அந்த இளைஞர்களுக்குக் கேட்கக் கூடியதாக "அவர் உயிரோடதான் இருக்கிறாராமடி. அவையோடயாம்." என்கிறாள். மறுநாள் அந்த இடத்தில் எவரையும் காணமுடியவில்லை.

இப்படி நல்ல உச்சக் கட்டங்களைக் கொண்ட (Climax) பல சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். எம்.ஜி.ஆர் அவர்களின் பரம இரசிகனான இவர் அவர்போல ஏழைகள் மீது இரக்கங் கொண்டு பல நற்பணிகளைச் செய்துவருவதை யாவரும் அறிவர். தனது கிராமசேவை உத்தியோகத்தர் என்ற பதவியை சமூக அக்கறையோடு பயன்படுத்தி பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு சென்று திரும்பியபின் இவரின் எழுத்துப்பணி குறைந்து சமூகப்பணி அதிகரித்துள்ளமை எழுத்துத் துறைக்கு நட்டமே. எழுத்தையும் வாழ்வையும் ஒன்றாக்கி, சொல்லையும் செயலையும் மாறுபடாமல் காத்து துன்புற்றவர்களைக் கண்டால் தானும் துன்புற்றுத் துயர் துடைக்கும் உயர் பண்பாளராக விளங்கும் திரு.க.தேவகடாட்சம் அவர்களும் அவரது குடும்பத்தாரும் எல்லா நிலையிலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

விழாக் குழுவைப் பாராட்டுகிறேன். திரு. தேவகடாட்சம் அவர்கள் என்றும் ஏழை பங்காளனாக வாழவும் தமிழும், சமூகமும் இவரால் சிறப்புறவும் வாழ்த்துகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பட்ட எழுத்தாளர்

**திரு. சி.தண்டாயுதபாணி**
**முன்னாள் கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை அமைச்சர்,**
**கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.**

மனித குலத்தின் அவலங்களையும், பிரச்சனைகளையும் எழுதுகின்ற எழுத்தாளர்கள் பலரை இப்போது நாம் காண்கின்றோம். எமது நாட்டில் முப்பது வருடங்களாக தொடர்ந்த உள்நாட்டுப்போர் எமது மக்களின் அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு சமூகக் கட்டமைப்பு, வாழ்வியல் முதலான எல்லா விடயங்களிலும் பெருத்த பாதிப்புகளை ஏற்படுத்திவிட்டது. இந்தப் போரின் அழிவுகளையும், நெருக்குவாரங்களையும், அதன் விளைவுகளையும் கவிதை, சிறுகதை, நாவல் முதலான இலக்கிய வடிவங்களில் உணர்வுள்ள நல்ல எழுத்தாளர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். போரினால் நேரடியாக பாதிக்கப்பட்டிராத மக்களுக்கும் அந்தப் போரின் வலிகளை உணரச் செய்தது இந்த எழுத்தாளர்களின் படைப்புகள்தான்.

இந்த வகையில் நோக்கும்போது காத்திரமான ஒரு எழுத்துப் பணியைச் செய்த ஒரு இலக்கியகாரனாக திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்களைப் பார்க்க முடிகின்றது. இவரது படைப்புகளான "காலக்கீறல்கள்", "குமுறல்கள்", "குருதி மண்" ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் உள்ளடங்கிய ஒவ்வொரு சிறுகதையும் ஏதோ ஒரு சமூகப் பிரச்சனையை தொட்டுச் சொல்லும். சமூகச்சீரழிவுகளையும், தனிமனித உணர்வுகளின் சிதைவுகளையும் எடுத்துக்காட்டும். இனக் கலவரத்தினால் ஏற்பட்ட புதிய வாழ்வியல் நடைமுறைகளையும், இடப்பெயர்வின் அவலங்களையும் களமாகக் கொண்டு பல கதைகளை சொல்லியிருக்கின்றார். கல்வியின் அவசியத்தையும், மானுட தர்மங்களையும் வலியுறுத்திருப்பார்.

தனிமனித, சமூக அனர்த்தங்களிலிருந்து விடுபடும் மார்க்கங்களையும் கதை மாந்தர் ஊடாக நகர்த்துவார். இதுவே முக்கியமானது. விழுந்தவனை எழுப்பி விடவேண்டிய உந்துதலை அளிக்க வேண்டியது ஒரு எழுத்தாளனின் தர்மமாகும். தனது வெளியீடுகளினால் கிடைத்த வருமானம் முழுவதையும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உவந்தளித்தமை பாராட்டப்பட வேண்டியதாகும். போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நலன் குறித்த இவரது மேலான நோக்கை இது காட்டுகின்றது.

அரசியல், சமூகம், சமயம், பண்பாடு தொடர்பாக எமது மாவட்டத்தில் அவ்வப்போது எழும் நெருக்கடிகளின் போது அவை சார்ந்து செம்மையான கருத்துக்களை முன்வைப்பவராகவும் மக்களோடு இணைந்து செயற்படுபவராகவும். இவரை நான் கண்டிருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்பதாக, திருக்கோணமலை மாவட்டத்தில் தமிழ்க்கட்சிகள், அமைப்புக்கள் பிரிந்து நிற்காது ஓரணியாக தேர்தலை எதிர்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக தலைவர் இரா. சம்பந்தர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற குழுவில் நானும் திரு. தேவகடாட்சம் அவர்களும் இணைந்திருந்து பங்காற்றினோம் என்பதை இப்போது நினைவு கொள்கின்றேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பதாக, திருக்கோணமலையில் பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பலமாக முன்வைக்கப்பட்டபோது அது சம்பந்தமான கலந்துரையாடல்களில் திரு.க.தேவகடாட்சம் அவர்கள் காத்திரமாக பங்களித்தார் என்பதை நான் அறிவேன். ஓரிரு வருடங்களுக்கு முன்பதாக கன்னியா சிவன் கோவில் தொடர்பான ஒரு நெருக்கடியின்போது இவர் தனது சகநிர்வாகிகளுடன் நீதிமன்றம் வரை சென்று வந்ததையும் சமூகம் அறிந்திருக்கும்.

பண்பட்ட எழுத்தாளராகவும், சமூக, சமய செயற்பாட்டாளராகவும் விளங்கும் திரு, கனகசபை தேவகடாட்சம் அவர்களை வாழ்த்துவதோடு தொடர்ந்தும் அவர் தனது சமூக, சமய, இலக்கியப் பணிகளை முன்னெடுத்துச் செல்வார் என்று நம்புகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையுணர்வு கொண்ட பண்பாளன்

**சம்பூரணக்கவிஞர் க. யோகானந்தன்**
**சம்பூர், திருகோணமலை.**

இயற்கை எழில் நிறைந்தவயல்நிலங்களும் நீரோடைகளும் நிறைந்த மல்லிகைத்தீவு என்னும் ஊரில் கனகசபை தங்கரெத்தினம் தம்பதிகளின் ஓரே புதல்வன் தான் தேவகடாட்சம் அவர்கள்.சமூக அக்கறையும் இனத்துவமும் கொண்ட எழுத்தாளர் இவர். "காலக்கீறல்கள்", "குமுறல்கள்", "குருதிமண்" போன்ற மூன்று சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டு வைத்ததோடு, இதில் கிடைத்த நிதியினை முற்றுமுழுதாகபாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி உயர்வுக்காகப் பயன்படுத்தி பெருவெற்றி கண்டவர்.

இயல்பாக இசையின் மீது அதீதமான ஈடுபாடு கொண்ட இவர் சினிமாப் பாடல்களை அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்திருப்பவர். ரீ.எம் சௌந்தரராஜனின் பாடல்கள் மீதும், அவர் மீதும் தீராக் காதல் கொண்டவர். எம்.ஜி.ஆரின் தீவிரமான ரசிகனாக தன்னை மாற்றியதோடு, அவரின் படப்பாடலை பெரிதும் கேட்டு மகிழும் இயல்பு கொண்டவர். பொதுவாக பாடகர்கள் சொல்லைப் பிரித்துப் பாடுவார்கள். ரிஎம்எஸ் எழுத்தைப் பிரித்துப் பாடும் வல்லமை கொண்டவர். குறிப்பாக "நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்........" என்ற பாடலின் வரியில் வரும் "நான்" என்ற எழுத்தைப் பிரித்துப் பாடுவதைச் சொல்லி இரசிப்பார். கண்ணதாசன் வரிகளில் வரும் "அழகே உன் பின்னால் அன்னம் வரும்.... என்னும் வரிகளில் உள்ள கற்பனை நயத்தைச் சொல்லி மகிழ்வார்.

திருகோணமலையில் இருந்து கலைஞர்கள் பலரோடு நானும் யாழ்ப்பாணம் செல்லும் வாயப்புக் கிடைத்தது. அந்தநேரம் அண்ணன் தேவகடாட்சம் அவர்கள் எனது பக்கத்து இருக்கையில் அமர்ந்தபடி பயணம் செய்தார். இருவரும் பயணம் முடிவடையும் வரை இலக்கியங்களையும், சினிமாப் பாடல்களையும் பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். இயல்பாகவே நகைச்சுவை உணர்வு கொண்டவர். அனைவரையும் சிரிக்கச் செய்துவிடுவார்.

தமிழகம் சென்ற வேளையில் பல நடிகர்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் பற்றியும், அவர்களோடு பேசியதையும் எம்மோடு பகிர்ந்து கொள்வார். உயரத்தில் மட்டுமல்லாமல் உள்ளத்திலும் உயர்ந்தே நிற்கிறார். நாட்டில் ஏற்பட்ட போர்க் காலச் சூழல் இவரையும் விட்டு வைக்கவில்லை. புலம்பெயர்ந்து சுவிச்சர்லாந்து செல்லும் நிலையை அடைந்தார்.

மண்ணையும் மக்களையும் பிரிந்து சென்றதை எப்போதும் காலக்கொடுமையாகவே கருதுவார். தொடர்பற்றிருந்த எமக்கு அவரின் மீள்வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்தியது எனலாம். அவ்வப்போது உடல் உபாதைகளை அடைந்த போதும், அவர் தனது பணியிலிருந்து ஒருபோதுமே ஒதுங்கியிருப்பவரல்லர். மனிதர்களுக்கு மனவலிமை அவசியம் என்பார்கள். அந்த வலிமையை நான் பல தடவைகளில் கண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டோறியா தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம் போன்றவை நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் இவரது கதைகள் வெற்றி பெற்றிருக்கின்றன. மொழிப்புலமை மிக்க இவர் இலங்கை அரசியலை நிறையவே கற்றுத்தேறியுள்ளார். பல அரசியல்வாதிகளை விடை சொல்லமுடியாத கேள்விகளால் துளைத்தெடுத்தமை பற்றி நேரடியாகக் கண்டிருக்கிறேன். கிராமசேவகர் பதவி வகித்து இவர் செய்த பணிகளை திருகோணமலை மக்கள் அறிவர்.

இவர் பெரிதும் இரசிக்கும் பாடல்களைக் கேட்கும் போதெல்லாம் தேவகடாட்சம் அண்ணனின் ஞாபகமே வந்துபோகும். "பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம்" என்னும் அமைப்பினை உருவாக்கி தனது சொந்தப் பணத்திலே பல பணிகளைச் செய்து வருகின்றார்.

ஆறானது ஓடிச்செல்லும் போது தான் செல்லும் பாதையைத் தானே உருவாக்கிக் கொள்வது போல, மனிதர்களும் தாம் செல்லவுள்ள திசைகளை எப்பொழுதும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். அப்பொழுது தான் வெற்றி இலக்கை இலகுவாக அடைந்துவிட முடியும். இனமத பேதங்களற்ற முறையில் சகலரோடும் பழகி அன்பு பாராட்டிவரும் தேவகடாட்சம் அவர்கள் சமூக உறவுப் பாலமாக திகழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமரம் தோப்பகாது, ஆனால் தன்னையும் ஒரு தோப்பாக மாற்றிக் கொண்டவர்

**திரு. சண்முகம் சற்குணசிங்கம் (சமாதான நீதவான்)**
**பள்ளத்தோட்டம், திருகோணமலை.**

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்தில் இருக்கின்ற ஒரு கிராமமே மல்லிகைத்தீவு. இக்கிராமமானது வயல்களையும், வயல் சார்ந்த நிலங்களையும் கொண்ட ஓர் அழகிய விவசாயக் கிராமமாகும். இங்கு திரு.கனகசபை அவர்களுக்கும் திருமதி தங்கரெட்னம் அவர்களுக்கும் மகனாய் பிறந்தவர் தான் திரு. தேவகடாட்சம் ஐயா அவர்கள். இவர் இக்குடும்பத்திற்கு தனிப் புத்திரரே செல்வாக்கு மிக்க குடும்பத்தில் செல்லமாகவும், செல்வமாகவும் வளர்க்கப்பட்டார். தனது கல்வியை முடித்துக்கொண்ட பின் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒரு உத்தியோகத்தராக தனது தொழிலை ஆரம்பித்தவர் பின்னர் கிராமசேவையாளராக நியமனம் பெற்றார். இவர் கிராமசேவையாளராகப் பணியாற்றும் போது இலக்கியத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

"தனிமரம் தோப்பாகாது" ஆனால் பல தோப்புக்களைத் தனக்குள் உள்வாங்கி தன்னையும் ஒரு தோப்பாக மாற்றிக் கொண்டார். கிராமசேவை உத்தியோகத்தராகத் தனது பணிகளைச் செய்யும் போதே பத்திரிகைகளில் கதைகள் கட்டுரைகள், விமர்சனங்கள் ஏழுதுவதை ஆரம்பித்தார். தொடர்ந்து இன்றைய சமூகத்திற்குத் தேவைப்பட்ட பல கருத்துக்களை உள்ளடங்கிய கதைகளை எழுதி "காலக்கீறல்கள், குமுறல்கள், குருதிமண்" என்னும் புத்தகங்களாக வெளியிட்டார்.

இலக்கியத்தோடு மட்டுமல்லாமல், சமூகத்தோடு சமூகசேவை செயற்பாடுகளையும் மேற்கொண்டார். இதன் காரணமாகத் தான் எழுதி வெளியிட்ட வெளியீடு மூலமாக வந்த வருமானத்தை சமூக சேவைக்காகவே ஒதுக்கினார். அதன் ஒரு கட்டமாக கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் அமைந்துள்ள விழிப்புலனற்றோர் பாடசாலையாகிய தரிசனத்திற்கு அம்மாணவர்களின் நன்மை கருதி ஒரு தொகைப் பணமும் இவரால் வழங்கப்பட்டது.

அத்தோடு நிற்காமல் திருகோணமலையின் வடக்கு எல்லையான தென்னமரவாடியிலிருந்து, தெற்கு எல்லையான வெருகல் வரைக்கும் உள்ள பாடசாலைகளுக்கு பணமாகவும், கற்றல் உபகரணங்களாகவும் உதவிகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்தனை சேவைகளும் தனது கடின உழைப்பு மூலம் பெறப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டே வழங்கி வருகிறார். தொடர்ந்து தன்னை இலக்கியத்துக்காக அர்ப்பணித்தன் மூலம் 2001 ஆம் ஆண்டு "வித்தகர்விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இன்றுவரை இலக்கியத்துக்காகவும், சமூக சேவைக்காகவும் தன்னை அர்ப்பணித்துச் செயல்படும் திரு. கனகசபை தேவகடாட்சம் ஐயா அவர்களின் சேவையைப் பாராட்டுவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இவரின் சேவை தொடர்ந்து இடம்பெற எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துறை ஆவலோன்

Lion சரா.புவனேஸ்வரன்
முன்னாள் சிரேஸ்ட விரிவுரையாளர்,
முன்னாள் கௌரவ பொதுச் செயலாளர், தற்போதைய ஆலோசகர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
இயக்குநர் சயன்ஸ் அக்கடமி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மும்மொழி ஆற்றலோடு, முத்துறை ஆவலோடு மூச்சாக மேலெழுந்த மூதூரின் முழு மனிதன் தேவகடாட்சம் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் என இலங்கையில் பேசப்படும் மொழிகளோடு சர்வதேச மொழியையும் சரளமாகக் கற்றுத் தேர்ந்தவரே தேவகடாட்சம் அவர்கள். மணம் வீசும் மல்லிகைத்தீவில் மாந்தர்கள் குறைவானாலும் மதிப்பு மிக்க குடும்பத்தில் மகவாகப் பிறந்து மண்ணுக்கும், இனத்திற்கும் மதிப்பைத் தந்தவர்.

எழுத்தோடு, அரசியலைக் கற்று அதனூடு சமுகத்தை நேசித்து எண்ணற்ற பணிகளை என் முன்னே செய்ததை நான் அறிவேன். அதுவே நான் சொன்ன முத்துறை. நெருக்கடியான காலங்களில் மகவுகளைக் பெற்றவர்கள் மடிப்பிச்சைக்கே வழியில்லாமல் இருக்க கல்விக்கும் அதனோடு காலுக்கும் காப்புக் கொடுத்தவர். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பென்பதை செயலாகக் காட்டியவர்.

அழகிய பேச்சாளனாக யா(ஆ)ரையுமே நோகாதவனாக அரசசேவையில் அத்தனை பணிகளைச் செய்த எழுத்தாளர் தேவகடாட்சம் அவர்களின் நீண்டு செல்லும் எழுத்துப் பணிக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள். எழுதுவதென்பது எல்லோராலும் முடிவதில்லை. எல்லோரும் ஏதோ எழுதுகின்றார்கள். அதைப் படிப்பவர்களே எழுத்தாளர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். திரு. தேவகடாட்சம் அவ்வாறல்ல. எளிமையாக எல்லோரும் அறிந்தவற்றிற்கு ஊடாக, யதார்த்தமான நிதர்சனங்களை சுவாரஸ்யமாக கற்பனையை மிகையாக்காது எழுதும் கொடை பெற்றவர்.

மேலோங்கி வாழ்க அவரது பணி. நீண்ட ஆயுளோடு நிறைவான பத்திரகாளியின் அருளாசி எப்பொழுதும் அவருக்கு இருக்கும்.

வாழ்க பல்லாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நிமிர்த்தி பேசும் ஒரு புரட்சியாளன்

**திரு. க. அன்பழகன்**
**சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்,**
**திருகோணமலை.**

தேவகடாட்சம் அவர்கள் நான் அறிந்த வகையில் ஒரு கலை இலக்கியவாதி. பல்வேறு காலப்பகுதியில் அவருடைய இலக்கிய ஆளுமைகளை நான் தரிசித்ததுண்டு. பொதுவாக அவருடைய கவிதைகள் அவருடைய மன ஆழத்து எண்ணங்களையும், சிந்தனைகளையும் எடுத்து இயம்புவதாய் இருக்கும். போராட்டக் காலங்களில் தமிழ்மக்களுக்காக தைரியமாக குரல் கொடுத்தார். அதனால் அவர் தமது சொந்த கிராமம், மக்கள் சொந்த பந்தங்களை விட்டு புலம்பெயர்ந்து வாழ்ந்தார்.

தமிழ்மக்களின் உரிமைக்காகவும்,அவர்களின் சொந்த மண்ணுக்காகவும் நெஞ்சை நிமிர்த்தி பேசும் ஒரு புரட்சியாளன் என்றால் மிகையாகாது. பல்வேறு விழாக்களிலும் கூட்டங்களிலும் அவருடன் கலந்து கொண்ட அனுபவங்கள் எனக்கு உண்டு.

தேவகடாட்சம் என்றாலே ஒரு உரம் மிக்க, சுதந்திர தாகம் கொண்ட, ஈழமண்ணை நேசிக்கின்ற ஒரு மக்கள் சேவகனாகவே அவர் நம் கண்களுக்கு தெரிவார். அவரது ஒவ்வொரு எழுத்தும் எமது மண்ணையும் மக்களையும் எமது பண்பாட்டு பாரம்பரியங்களின் உன்னதத்தையும் பாடி நிற்பதாகவே அமையும். சிறிது காலம் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தமது சொந்த மண்ணையும், மக்களையும், உறவுகளையும் பற்றிய நீங்கா நினைவுகளுடன் அவர் வாழ்ந்தார் என்பதை நான் மல்லிகைத்தீவில் "மல்லிகை" என்னும் கலை மன்றம் அமைக்க அவர் அரும்பாடுபட்ட போது அறிந்து கொண்டேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பண்பா

## "தேவகடாக்ஷம் வெல்கவே"

டாக்டர் பி.பி. ஸ்ரீநிவாஸ் (பாடகர்)
இந்தியா.

*கலையின் **தே**னமுதை நிதமும் பழகுவோம்!*
*கலையின் **வ**சீகர குணத்தை உணருவோம்!*
*கலைதான் **கட**வுள் எனும் மெய் அறிவோம்!*
*கலையை வி **டா**மல் நற்பலன் பெறுவோம்!*
*கலையே ந **க்ஷ**த்திரங்களில் நிலவு!*
*கலையே ந **ம்** மனங்களை இணைத்திடும் உறவு!*
*கலையின் **வெ** ளிச்சம் எங்கும் படர்க!*
*கலைகளி **ல்** விளங்கும் ஈர்ப்பு தொடர்க!*
*கலையின் **க** ற்பகக் கிளைகள் வளர்க!*
*கலையின் **வே** ள்வி தரும் வளமை மலர்க!*

*(டிரைவின் ஹோட்டலில் இயற்றிச் சமர்ப்பித்தது. 18-09-2006.)*



தேவகடாட்சத்துக்கு
சென்னையில் பாராட்டு விழா
-திருகோணமலை நிருபர்-

ஈழத்தின் சிறுகதை எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சத்திற்கு பாராட்டு விழாவும் அவரது "குருதி மண்" சிறுகதை நூல் வெளியீடும் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் கலைமாமணி விக்கிரமன் தலைமையில் சென்னை உமாபதி அரங்கத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

திருகோணமலை மாவட்டம் - மூதூர்ப் பிரதேசம், மல்லிகைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கனகசபை தேவகடாட்சம். அவரது "குருதி மண்" சிறுகதைத் தொகுதியை எழுத்தாளர் வல்லிக்கண்ணன் வெளியிட்டு வைக்கிறார். முதல் பிரதியை திரைப்பட நடிகர் ராஜேஷ் பெறுகிறார். திரைப்பட இயக்குநர் விசு நூலாசிரியர் தேவகடாட்சத்திற்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிப்பார். பாரதிகாவலர் இராமமூர்த்தி, இளம்பாரி உ. கருணாகரன், முனைவர் அரு. கோபாலன், திருமதி கிரிஜா ராகவன், இளம்பிறை எம்.ஏ. ரஹ்மான் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவார்கள். ஏற்புரை: கனகசபை தேவகடாட்சம்.

புலம்பெயர்ந்தும் இலக்கியப் பூர்வ [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை நிருபர் அமரர் சி.குருநாதன் அவர்களுடனான பேட்டி

*"எனது சிறுகதைகள் வெறும் கதைகளல்ல*
*அவை எனது அனுபவத் தேக்கங்களே!*

*1990 வன்செயலில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவன். உளத்தாக்கங்களுக்கு ஆளான எனக்கு அவற்றை வெளிக்கொண்டுவர ஒரு வடிகால் தேவையாக இருந்தது. இன்றைய நிர்ப்பந்திக்கப்பட்ட அடிமை வாழ்வின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு எழுத்துத் துறையை ஆயுதமாகப் பயன்படுத்தத் தொடங்கினேன்." என்று கூறுகின்றார் தேவகடாட்சம்.*

*இவர் முதன்முதலாக எழுதிய சிறுகதையின் பெயர் "மதில் மேல்" என்பதாகும். இது 1995 ஆம் ஆண்டில் தினமுரசு வாரமலரில் வெளிவந்தது. முதலாவது கதைக்கு வாசகர்களிடமிருந்து கிடைத்த விமர்சனம், ஊக்கம் தொடர்ந்து சிறுகதைத் துறையில் ஈடுபட வைத்தது எனக் கூறுகின்றார்.*

*"சமூகத்தின் தலைவிதியையே எழுத்தால்*
*மாற்றியமைக்க முனையும் எழுத்தாளர்" — சி.குருநாதன்*

*ஐம்பது கதைகளுக்கு மேல் பத்திரிகைகளில் எழுதியுள்ள இவர் "அவைகள் வெறும் கதைகள் அல்ல, எனது அனுபவத் தேக்கங்களே" என்கிறார். முதலாவது சிறுகதைத் தொகுதியின் விற்பனையால் கிடைக்கும் வருமானத்தை விழிப்புலனற்றவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக வழங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டமைக்கான காரணம், அப்போது வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராக செ.பிரபாகரன் பணிபுரிந்து வந்தார். பட்டதாரியான அவர் இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்தியடைந்தவர். கலை, ஆங்கிலம், சங்கீதம் ஆகியவற்றில் மிகச் சிறந்த திறமை பெற்றிருந்த அவரை ஒருநாள் சந்தித்தேன்.*

*அவர் ஒரு விழிப்புலனற்றவர் என்பது என்னைச் சிந்திக்க வைத்தது. விழிப்புலனற்ற திறமைசாலிகள் மீது அனுதாபம் கொண்டிருந்த நான் அதனை மாற்றி, அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டேன் என்று கூறினார் தேவகடாட்சம்.*

*கிராமசேவை அதிகாரியாகப் பணிபுரியும் தேவகடாட்சத்தின் எண்ணம் நிறைவேற மட்டக்களப்பில் உள்ள "தரிசனம்" விழிப்புலனற்ற மாணவர்களின் பாடசாலை ஒழுங்கு செய்த கொடிவாரம் களம் அமைத்துக் கொடுத்தது. நானும் இன்னும் பலரும் விழிப்புலனற்ற மாணவர்களுக்கு அனுதாபிகளாக இல்லாது ஆதரவு வழங்குபவர்களாகி கொடி விற்பனைக்கு உதவினோம். அப்போது தான் எனது சிறுகதைகள் கொண்ட*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தொகுதியை வெளியிட்டு அதன் வருமானத்தை விழிப்புலனற்ற பாடசாலையின் வளர்ச்சிக்கு வழங்கும் எண்ணம் ஏற்பட்டது என்கிறார் தேவகடாட்சம்.

"காலக்கீறல்கள்" சிறுகதைத் தொகுதியின் விற்பனையால் கிடைத்த ஒரு லட்சம் ரூபாவை வைப்பிலிட்டு, அதன் வட்டிப்பணமான பத்தாயிரம் ரூபாவை மட்டக்களப்பு தரிசனம் விழிப்புலனற்றோருக்கு வழங்கியுள்ளார். இது தொடர்பான நிகழ்வு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் ஆறாவது ஆண்டு விழாவின்போது இடம்பெற்றது. பணத்தை பேராசிரியர் கா. சிவத்தம்பி மூலமாக பாடசாலை அதிபரிடம் தேவகடாட்சம் கையளித்தார். இப்பணம் இருபது விழிப்புலனற்ற மாணவர்களின் வங்கிப் புத்தகங்களில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இப்போது இரண்டாவது சிறுகதைத் தொகுதி "குமுறல்கள்" வெளிவந்துள்ளது. வன்செயல்களால் திருமலை மாவட்டத்தில் பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட கிராம மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது தவிக்கின்றனர். நானும் ஒரு பாதிக்கப்பட்ட கிராமவாசி. இதனால் மாணவர்களின் பாதிப்பை உணரக்கூடியதாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக ஒரு நிதியம் அமைக்கப்பட வேண்டும். என்ற எண்ணத்தை நானும் எனது நண்பர்களும் கொண்டிருந்தோம். அந்த நிதியம் அமைக்கப்படுவதற்காக "குமுறல்கள்" சிறுகதைத் தொகுதியின் வருமானத்தை வழங்க முடிவு செய்துள்ளேன். என்று கூறுகின்றார் தேவகடாட்சம்.

(ஞாயிறு தினக்குரல் 06.02.2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்புசாரத்தில் பிறந்த "பறக்காத பறவைகள்"

**மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார்**
**சம்பூர், திருகோணமலை.**

இடைவிடாத வாசிப்புப் பழக்கத்தைத் தன்னகத்தே கொண்ட திரு.க. தேவகடாட்சம் அவர்களின் முதல் சிறுகதை வெளியானதைத் தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்கள் பாராட்டு, அவமானம் என இரு பக்கங்களையும் காட்டியது. இவையே இவர் வீறுகொண்டெழுந்து இலக்கியம் படைக்கக் காரணங்களாயின.

எழுத்துலகிற்குள் நுழைந்த இவரது "மதில் மேல்" என்னும் சிறுகதையானது 1995ஆம் ஆண்டு தினமுரசு பத்திரிகையில் வெளியானது. திருகோணமலையில் இப்பத்திரிகையை ஒவ்வொரு வியாழக் கிழமையிலும் எதிர்பார்க்கலாம். அந்நாட்களில் இப்பத்திரிகையை எதிர்நோக்கிக் காத்திருப்போர் தொகை அதிகம். அந்நாட்களில் நானும் மகாபாரதத் தொடர், குறுக்கெழுத்துப்போட்டி நிரப்பி அனுப்புதல், இலக்கிய நயம் படித்தல், அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை தொடர் வாசித்தல், நடுப்பக்க சினிமாத் தகவல்கள், கொள்ளை ராணி போன்ற எல்லாப் பக்கங்களையும் வாசிக்க சம்பூரில் கடைசிப் பேருந்தை எதிர்பார்த்திருப்பது வழக்கம்.

இப்பத்திரிகையில் வெளிவந்த சிறுகதையைப் பலரிடமும் காட்டி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனக் கூறுகின்றார். இவ்வாறு பூரிப்படைந்து கொண்டிருந்த வேளையில், மறுநாள் திருகோணமலையின் மூத்த இலக்கியவாதி ஒருவரைச் சந்திக்க நேர்ந்த போது, பத்திரிகையில் வெளிவந்த அச்சிறுகதையை அவரிடமும் காட்டினார். அதை பார்த்ததும் அவர் "நீயும் ஒரு மனுசன் என்று பென் தூக்கிட்டாயா" என்று கூறி உதறிவிட்ட போது மிகவும் வேதனை அடைந்தேன். இவ்வுலகமே இருண்டது போல் எற்பட்டது. தலையின் மேலே பாரிய பாறாங்கல்லை வைத்து அமிழ்த்தியது போலத் தோன்றியது என்று தான் அடைந்த வேதனையைக் கூறினார். இச்சம்பவமானது திருகோணமலையிலிருந்து மூதூருக்குச் செல்லுகின்ற லோஞ்சில் (இயந்திரப்படகு) நிகழ்ந்தது.

கனத்த மனத்தோடு மூதூர் இறங்குதுறைய அடைந்த போது, அங்கே நின்று கொண்டிருந்த இவரது நண்பர் எழுத்தாளர் அமானுல்லா அவர்களைக் கண்டு நடந்த விடயத்தைக் கூறி ஆறுதலடைந்தார். அவரைத் தேற்றிய திருவாளர் அமானுல்லா அவர்கள் தனது நாட்குறிப்பு புத்தகத்தைத் திறந்து முகவரியொன்றை எழுதி இவரிடம் கொடுத்து, "சிறுகதைப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. கட்டாயம் நீங்கள் எழுதிப் பங்குபற்ற வேண்டும். இந்த முகவரிக்கு அனுப்பி விடுங்கள்" என்று அன்போடு கூறிச் சென்றுவிட்டார். தனக்கு நேர்ந்த அவமானத்தின் காரணமாக அன்றிரவு இவரால் தூங்கமுடியவில்லை. அந்த வெப்புசாரத்தில் இரவிரவாக அதிகாலை ஏழுமணி வரை நித்திரைக்குச் செல்லாது சிறுகதை ஒன்றை எழுதி முடித்தார். இல்லையில்லை செதுக்கினார் என்பதே பொருந்தும். இவ்வாறு உருவான "பறக்காத பறவைகள்" என்னும் சிறுகதைப் படைப்பை மறுநாளே விக்டோறியாத் தமிழ்ச்சங்கம், அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் முகவரிக்கு அனுப்பியும் விட்டார். பின்னாளில் இச்சிறுகதைக்கு இரண்டாமிடம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் இப்போட்டிக்கு முகவரி கொடுத்த எழுத்தாளர் அமானுல்லா அவர்களும் இதில் பங்குபற்றி மூன்றாமிடத்தைப் பெற்றிருந்தார். இவ்வாறான பண்பாளர்களின் நட்போடிருந்த காலமது. அத்தோடு தனது இந்தத் தூண்டுதலுக்குக் காரணமான அந்த மூத்த இலக்கியவாதிக்கும் இப்போட்டியில் ஏழாவது இடம் கிடைக்கப்பெற்றதாகவும் கூறுகின்றார்.

கிடைத்த இரண்டாமிட பரிசுத் தொகையான இருபத்தையாயிரம் ரூபாவைக் கொண்டு "காலக்கீறல்கள்" என்னும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். அக்காலத்தில் அரச சம்பளமாக நானூறு ரூபாய் கிடைப்பதையும் நினைவுபடுத்தி, அதன் பெறுமதித் தன்மையை உணரவைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் அவுஸ்திரேலியப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றவர்களுள் மூவர் மூதூரைச் சேர்ந்தவர்கள் என்பதனால், அவர்களைக் கௌரவிக்கும் முகமாக மூதூர் கலை இலக்கிய மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பாராட்டு நிகழ்வு அந் - நகர் பாடசாலையில் இடம்பெற்றது. இச்சம்பவம் இன்று வரை பசுமையாக உள்ளது என திருவாளர் க.தேவகடாட்சம் அவர்கள் கூறி மகிழ்கிறார். வெப்புசாரத்தில் பிறந்த "பறக்காத பறவைகள்" சிறுகதையைப் போலவே, இவருடைய சிறுகதைகளில் அனேகமானவை நடப்பு சம்பவங்களின் தாக்கத்தால் பிறந்தவைகளேயாகும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துடனான நட்பு

**கவிஞர் அ.அச்சுதன் (ஊடகவியலாளர்)**

**சேனையூர், திருகோணமலை.**

கிராமத்து வாழ்வை இரசித்து சுவைத்து ஒன்றித்து வாழ்ந்து கொண்டிருப்பவர். காலக்கீறல்கள், குமுறல்கள், குருதி மண் என்ற சிறுகதைப் படைப்புகளை நூல்கள் மூலம் படையல் செய்து, அதன் மூலம் கிடைத்த பணத்தினை பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காய் வழங்கி வரும் மூத்த எழுத்தாளர். எனது தந்தையின் நண்பர் கனகசபை தேவகடாட்சம் பற்றி சில பதிவுகளை பதிவு செய்வதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்கு அருமைநாதன் ஸதீஸ்குமாருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மல்லிகைத்தீவில் பிறந்து, பெரும்பகுதியை திருகோணமலை நகரில் கால் பதித்து, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், அறநெறிச் செயற்பாடுகளுக்கும் தன்னாலான செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் தேவகடாட்சம் ஐயா பத்திரிகையுடனும், ஊடகவியலாளர்களுடனும் மிகவும் நெருக்கமான தொடர்பை உறுதிப்படுத்தும் ஒருவர். அவருடைய சமூகசேவைச் செயற்பாடுகள் ஊடகத்தில் வரும்போது ஒவ்வொரு தடவையும் தொலைபேசி மூலம் நன்றி தெரிவிப்பார். உண்மையில் அது அவருடைய பண்பு. செய்தி பிரசுரம் பெறாமல் விட்டால் ஏன் வரவில்லை என்றும் வினா எழுப்புவார். ஆரம்பகாலத்தில் அவருடைய செயற்பாட்டு நிகழ்வுகள் பத்திரிகைகளில் கூடுதலாக வெளிவந்து இருக்கின்றன. அண்மைக்காலமாக பத்திரிகைகளின் பக்கங்கள் குறைக்கப்பட்டதால் அனைத்து செய்திகளையும் பிரசுரம் செய்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

தேவகடாட்சம் ஐயா தமிழ் இலக்கியத்தின் மீதும், தமிழ் மண் மீதும் மிகவும் பற்றுடையவர் என்பதை நான் அவருடன் கதைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அறியக்கூடியதாக இருக்கின்றது. திருகோணமலை மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் பற்றி அவர் கவலையுடன் பல தகவல்களைக் குறிப்பிடுவார். தமிழ் மக்களுக்காகச் செய்யவேண்டிய பல வேலைகளை அவர்கள் செய்யவில்லை என்பதுடன், இதனால் இன்று நாம் நமது பல விடயங்களை இழந்து இருக்கின்றோம் என்பார். ஆனால் மறைந்த பாராளுமன்ற உறப்பினர் தங்கத்துரை இருந்திருந்தால் இன்று இந்நிலை ஏற்பட்டிருக்காது என்று கூறி அவருடைய செயற்பாடுகளைப் பாராட்டியும் இருந்தார். உண்மையிலேயே அவருடைய ஆதங்கம் நியாயமாக இருந்ததைக் காணமுடிகின்றது. பிரதேச அரசியல்வாதிகள் செய்யமுடியாத பல விடயங்களை தேவகடாட்சம் ஐயா மக்களுடன் நின்று பணியாற்றுகின்றார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அவர் மாவட்டத்தின் பல கிராமங்களுக்குச் சென்று கல்விப்பணியாற்றி வருவதை அவதானிக்க முடிகின்றது.

எழுத்துத் துறையில் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ள தேவகடாட்சம் ஐயா, ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென தனி முத்திரை பதித்துள்ளார். இவருடைய சிறுகதைத் தொகுப்புகள் காலத்தின் பதிவுகளாகவும், சாட்சிகளாகவும் காணப்படுகின்றன.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்து உதவுகின்ற கொடை வள்ளல்

**சம்பூர் சச்சிதானந்தம்,**
**சம்பூர் தமிழ்கலாமன்றம்,**
**திருகோணமலை.**

அண்ணன் தமிழ்திரு. தேவகடாட்சம் அவர்கள், கொட்டியாபுரப்பற்றுப் பிரதேசத்தின் வயலும் வயல் சார்ந்து செந்நெல் விளையும் பிரதேசமாகிய மகாவலியாள் ஓடுகின்ற மல்லிகைதீவு எனும் அழகிய கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். கவிஞர், எழுத்தாளர், உரையாசிரியர், இலக்கிய விமர்சகர், என்ற பல ரூபங்களில் அறியப்படுபவர். இவற்றையெல்லாம் கடந்து சிறந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர், அத்தோடு ஏழைகளுக்கு உகந்து தன்னுடைய நிதியிலே உதவுகின்ற கொடை வள்ளல். தமிழ்த் தேசியத்தின்பால் அதீத அக்கறையும் உணர்வும் கொண்டவர்.

எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும் இலக்கியம் சார்ந்த நிகழ்வுகளில் அழைக்கின்ற பொழுது அதிலிருந்து கலந்து கொள்ள தவறுவதில்லை. தன்னுடைய கருத்துக்களை தங்கு தடை இன்றி எந்த பயமும் இன்றி, அது எதுவாக இருந்தாலும் வெளிப்படையாக பேசுகின்ற சிறந்த ஒரு பேச்சாளராகவும் திகழ்கின்றார்.

அவரை நாம் சம்பூரில் முத்தமிழ் விழா நடத்த ஆரம்பித்த 2018 இல் இருந்து இன்று வரை ஒவ்வொரு விழாவிற்கும் அழைத்து இருக்கின்றோம். அந்த ஒவ்வொரு விழாவிலும் தன்னுடைய சிறிய உரையை ஆற்றி இலக்கிய பங்களிப்பை எமக்கு செய்து வந்திருக்கின்றார்.

அந்த வகையில் அன்போடு தம்பி என்று அழைக்கின்ற ஒரு சிறந்த இலக்கியவாதியாக அவரை நான் பார்க்கின்றேன். அவருடைய எதிர்காலம் நல்ல ஆரோக்கியத்துடன் தொடர்ந்து இலக்கியப் பணியில் பயணிக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நண்பன் தேவா!

நிலாவெளியூர் கெஜ தர்மா
(கெஜரெத்தினம் தர்மகுலராசா)
நிலாவெளி, திருகோணமலை.

திரு.கனகசபை தேவகடாட்சம் அவர்கள் எனது நண்பன். இவ்வாறு சொல்வதைவிட, நெருங்கிய நண்பன், என்பதே சாலப்பொருந்தும். நண்பன் என்பதற்கும், நெருங்கிய நண்பன் என்பதற்குமான வேறுபாடு யாதெனில், நண்பனிடம் அளவோடுதான் பழகலாம், நெருங்கிய நண்பனிடம் அளவின்றிப் பழகலாம். அதாவது ஒளிவு மறைவின்றிப் பழகலாம். தவறுகளை இடித்துரைத்துக் கூறலாம். நகைச்சுவையோடு கதைத்து மகிழலாம். இவ்வாறு நாம் பழகியதாலேதான் நெருங்கிய நண்பன் என்றேன்.

இனி விடயத்திற்கு வருவோம். எனது தேவகடாட்சத்தைப் பற்றி, அவருடன் பழகிய காலங்களைப் பற்றி, அவரோடு கலந்து கதைத்து களிப்புற்றது பற்றி எழுதி அனுப்பிவைக்குமாறு, வைத்தியக் கலாநிதி சதீஸ்குமார் அவர்கள் கேட்டார்கள். "கரும்பு தின்னக் கைக்கூலி வேணுமா" என்ற முதுமொழிதான் ஞாபகத்திற்கு வந்தது. உடனேயே அதற்கென்ன எழுதித் தருகின்றேன் என்றேன்.

ஆம், எனக்கு தேவகடாட்சம் அவர்களை எப்போ தொடக்கம் தெரியும் என்பது ஞாபகத்தில் இல்லை. எனவே எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் இருந்தே அவரைத் தெரியும் என்பதே சாலப்பொருந்தும். அதுவே உண்மை. ஏனெனில் அவரின் தந்தையார் திரு.கனகசபை அவர்களும், எனது தந்தையர் திரு.கெஜரெத்தினம் அவர்களும் 1963 தொடக்கம் 1965ம் ஆண்டுகாலப் பகுதியில் நிலாவெளி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் ஒன்றாக ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் அப்போது நாங்கள் ஆறு, ஏழு வயதுடையவர்களாக இருந்தோம்.

அதன்பின்னர் பெற்றோர்களின் உத்தியோக பூர்வமான இடமாற்றங்கள், காரணமாகவும் எங்களின் பாடசாலைகள் வேறுவேறாக அமைந்த காரணங்களினாலும் சந்திக்கும் வாய்ப்புக் குறைந்தது. பின்னர் ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தியாறாம் ஆண்டுகட்குப் பின்னரான காலப்பகுதியில் நண்பர்களான நவசோதிராசா, கோணேஸ்வரன் மற்றும் பல இலக்கிய ஆர்வலர்களினால் இயங்குநிலையில் இருந்த "புதுமை நெஞ்சங்கள்" மற்றும் "சங்கப்பலகை" என்னும் இலக்கிய அமைப்பினால் நிகழ்த்தப்பட்டு வந்த கவியரங்குகளில் பங்குபற்றுவதற்காக, நண்பர் கவிஞர் நிலாதமிழின்தாசனும் நானும் எங்கள் ஊரான நிலாவெளியில் இருந்து செல்வோம். அந்த நிகழ்வுகளுக்கெல்லாம், தேவகடாட்சம் அவர்களும் வருவார். அன்றிலிருந்து எங்கள் நட்பு மீண்டும் நெருங்கிற்று.

எங்களின் அரச உத்தியோகம் காரணமாக வேறு வேறு ஊர்களுக்கு இடம்மாற்றம் பெற்றுச் சென்றாலும் விடுமுறை நாட்களில் திருக்கோணமலைக்கு வரும்போது மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் முத்துக்குமாரசாமி கோவிலின் மேற்கு வீதியில் எங்கள் சந்திப்பும் கலந்துரையாடல்களும் இடம்பெறும். அதற்கு வாய்ப்பாக, மேற்குறித்த வீதியில் வசித்துவந்த முன்னாள் நகரசபை வருமானவரிப் பரிசோதகரும், கவிஞரும், இலக்கிய விமர்சகரும், மேடைப் பேச்சாளருமாகிய அமரர் செல்லையா நவசோதிராசா அவர்களின் இல்லம் அமைந்திருந்தது. அச் சந்திப்பில் இலக்கியக் கலந்துரையாடல்களே பெரிதும் இடம்பெறும். அதில் இலக்கிய நண்பர்களான மேற்குறித்த செ.நவசோதிராசா அவர்களும் ஓய்வுநிலை தபாலதிபரும், கவிஞரும், எழுத்தாளரும், “வசந்தம்” கலைஇலக்கிய சஞ்சிகையின் ஆசிரியரும், தற்போதும் எழுதிக்கொண்டிருப்பவருமாகிய திரு.கந்தவனம் கோணேஸ்வரன் அவர்களும், கவிஞரும், சிறந்த மேடை நடிகருமான அமரர் தம்பி தில்லைமுகிலன் (துரைவீரசிங்கம்) அவர்களும் இன்னும் பல இலக்கிய நண்பர்களும் ஈடுபடுவோம்.

அப்போது நண்பர் நவசோதி, தேவகடாட்சத்தைப் பார்த்துக் கேட்பார் “நீ எல்லாம் என்ன கதை எழுதிறாய்? சும்மா குட்டிக்கதைதான் எழுதிறாய்” என்று நட்போடு நகைச்சுவையாகச் சொல்லுவார். அதற்கு அவர் எதிர்க் கருத்து எதுவும் சொல்லாது “நான் இப்பத்தான் சிறுகதை எழுதத் தொடங்குகிறேன். நீங்கள்தானே .. 1992ம் ஆண்டு திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவையினால் வெளியிடப்பட்ட சிவநெறி சஞ்சிகைக்கு கட்டுரை எழுத்தித்தரும்படி வற்புறுத்திக் கேட்டனிங்கள்... அப்போது எழுதி அச்சில் வெளிவந்த எனது முதல் ஆக்கமே அதுதானே.. அப்படியிருக்க இப்போ நீங்கதானே எனக்கு அறிவுரை சொல்ல வேணும்” என்று அடக்கத்தோடு கேட்பார். அவரின் அந்த அடக்கமும் தனக்கு முன்னமே எழுதத் தொடங்கியோரின் ஆலோசனைகளை விமர்சனங்களை ஏற்று எழுத்துத் துறையில் ஈடுபட வேண்டுமென்ற அவரின் நற்பண்பே இன்றும் அவரைப் பலரும் பாராட்டிப் போற்றும் ஓர் எழுத்தாளனாக வளர்த்தது என்பதை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

மேற்கூறியவாறு அறிவுரை சொல்லவேண்டும் என்று கேட்டதற்கு எம்முடன் இருந்த நண்பன் கோணேஸ்வரன் சொன்னார் “தேவா... சிறுகதைக்கு என்று எவ்வித வரைவிலக்கணமும் கிடையாது உனது உள்ளத்தின் வெளிப்பாடுகளை வாசகர்கள் புரியும்படி எப்படி எழுதுகிறாயோ அதுவே உன்பாணி இதற்காக எவர் பாணியையும் பின்பற்றாதே” என்றார். அதை, அவரும் ஏற்று எழுதத் தொடங்கினார் அவரின் சிறுகதைகள் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் வெளிவரும்போதெல்லாம், நான் உடனேயோ, நேரிலோ அல்லது தொலை பேசியிலோ எடுத்துச் சொல்லிப் பாராட்டுவேன். அது போலவே எனது கவிதைகள், சிறுகதைகள் வெளிவரும்போது அவரும் எடுத்துச் சொல்லுவார். எனது கதைகளின் நிறைகுறைகளை எடுத்துச் சொல்லுவார். அதுபோலவே அவரின் ஆக்கங்களின் நிறை, குறைகள் நானும் எடுத்துச் சொல்வேன். நன்றி தெரிவிப்பார்.

“குறை சொன்னமைக்கு கோபப்படுறியோ” என்று கேட்பேன் அதற்கு அவர் “எழுத்து என்பது அதாவது ஓர் கலைஞனின் படைப்பு என்பது அவனின் பிரசவம். ஒரு தாய் குழந்தை ஒன்றைப் பெற்றெடுப்பது போன்றதாகும். அத்தாயைப் பார்த்து, உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை அழகாக இருக்கிறது, நல்ல வடிவாக இருக்கிறது என்று ஒருசிலர் மேலோட்டமாகப் பார்த்துவிட்டுச்சொன்னால், அத்தாய் மகிழ்வாள். அதேநேரத்தில், அக்குழந்தையைப் பிறர் உற்றுநோக்கிப் பார்த்து ,"மூக்குக் கொஞ்சம்.. சப்பையாக இருக்கு... மேற்சொண்டு கொஞ்சம் மிதந்திருக்கு" என்று சொன்னதைக் கேட்டு அத்தாய் அதை ஏற்றுத் தன் குழந்தையினது மூக்கினில் எண்ணெய்பூசி மெல்ல மெல்லப் பிடித்து இழுத்து விடுவாள். அதுபோலவே மிதந்தவாயும், அமத்தி ஒழுங்காக்கி விடுவாள் அதனால், பற்கள் கூட மிதப்பின்றி இருக்கும், பிள்ளையும் அழகாக இருக்கும். இதுபோலவே நல்ல விமர்சனங்களை ஏற்று நான் எனது தவறுகளை, அடுத்துவரும் கதைகளிலே திருத்தி எழுதுவது எனக்குப் பிடிக்கும் எனவே "தர்மா நீ, தொடர்ந்து எனது கதைகளின் நிறை குறைகளை கூறவும்" என நண்பன் எனும் நம்பிக்கையுடன் சொல்வார்.

இந்தவகையிலே அவரின் சிறுகதையொன்று கடந்த மார்கழி 2023"சிறுகதை மஞ்சரி" என்னும் சஞ்சிகையில் வெளிவந்தபோதும் அதைப் பாராட்டினேன், அதற்கும் உடனேயே நன்றி சொன்னார். அவரின் இலக்கியப் பணியும், அவருடனான எனது நட்பும் தொடர, எல்லாம் வல்ல இறைவன், அவருக்குச் சிறந்த தேகாரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

அவரைப்பற்றி எழுத வாய்ப்புத் தந்த வைத்தியக் கலாநிதி சதீஸ்குமார் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியையும் இத்தால் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாட்சம் ஒரு காரிய இயந்திரம்

**திருமலை நவம்**

சுமார் ஆறு தசாப்த கால நட்பு எங்களுக்குள் நீரோட்டம் போல ஓடிக் கொண்டேயிருக்கிறது. அது கங்கையைப்போல் புனிதமானதென்றோ, மகாவலியைப்போல் அழகானதென்றோ, அமேசன் நதிபோல் நீளமானதென்றோ, வல்ஹாவைப் போல் வரலாறு கொண்டதென்றோ சொல்ல முடியாவிட்டாலும் அத்தனை பெறுமதியும் எங்கள் நட்புக்குண்டு.

தேவகடாட்சத்தை நான் முதல் முதல் சந்தித்தது என்து நண்பன் தம்பா வீட்டில். ஐயனார்கேணி ஒழுங்கையில். அப்போது அவன் ஒரு சாதாரணமாணவப் பருவத்தின் அத்தனை தாற்பரியங்களை கொண்டவ்னாகவும் காணப்பட்டான். அவனது பகிடி, நகைச்சுவை, சிரிப்பு, சிங்காரம் கலந்த கதைகள், பேச்சுக்கள், உரையாடல்கள் எங்களை ஆட் கொண்டதும் அனுகவைத்தவைகள்.

ஆரம்பத்தில் இவரை ஒரு எழுத்தாளனாக நான் கண்டதுமில்லை பார்த்ததுமில்லை. எங்கள் நட்பு வட்டம் பெரிதாக இருந்தது. அதில் ஒரு அங்கத்தவனாக இருந்தாலும் அவனது விஷேட குணங்களில் ஆளை மயக்கும் அட்டகாசமான நகைச்சுவைப் பேச்சக்கள், வார்த்தை வீச்சுக்கள், வாகடம் நிறைந்த கதைகள் எங்களை நெருக்கமான நட்புக்கு ஆளாக்கியது.

மிக நீண்ட காலமாக நான் கடாட்சத்தை சந்திக்கும் வாய்ப்பை இழந்திருந்தாலும் யுத்தமும் நெருக்கடிகளும் குழப்பங்களும் பிரிவுகளும் அரசியல் பார்வைகளும் எங்களை சில காலம் நெருங்கவிடாமல் வைத்தது என்னவோ உண்மையே.

கடாட்சம் கூர்மையான வாள் போன்ற பார்வை கொண்டவன். நறுக்கு தெறித்தாற்போல் தனது கருத்துக்களை முன்வைப்பவன். போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் ஏற்றதொரு கருத்து எனது என்றால் அதை துணிந்து சொல்லும் தைரியம் கொண்டவனாக இருந்துள்ளான். இதில் ஆச்சரியமான விடயமென்னவென்றால் அவனொரு எழுத்தாளனாக பரிணமித்திருந்த காலத்தில் அவனை கண்டபோது ஆச்சிரியப்பட்டேன். காரணம் நாங்கள் இலக்கியத்தை கழுத்தில் போட்டுக் கொண்டு கத்தித் திரிந்த காலத்தில் இவனையொரு எழுத்தாளனாக எம்மால் அடையாளம் காணமுடியவில்லை.

ஜெயகாந்தனைப் போல் தர்க்கமும், தகழியைப் போல் கிராமியமும், மாப்பாசானைப் போல் யதார்த்தமும், வ. அ. போல் மண்ணை குடைந்து சொல்லுவதையும் இவனது கதைகளை பிற்காலத்தில் படித்தபோது ஆச்சரியப்பட்டேன். திருகோணமலை இலக்கியகர்த்தாக்களில் இன்னொரு தலைமுறையின் மத்தாப்பைப் போல் இவனது படைப்புக்கள் இருந்தமை கண்டு நான் ஆச்சரியப்பட்டதுண்டு. இந்த பக்கரி இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதும் ஆற்றல் கொண்டவனா என குடைந்து குடைந்து பார்த்து வியப்படைந்தேன். பிற்காலத்தில் அவனை சந்தித்து பேசுகிறபோதெல்லாம் இலக்கியம் பேசுவோம். அரசியலை அக்குவேறாக ஆணிவேறாக அலசுவோம். கலை கலாச்சாரத்தையும் சமூகக் கொடுமைகள் பற்றியும் அவன் இடித்துரைப்பதைக்கேட்டு லயித்துப்போவேன்.

கடாட்சம் திருகோணமலையின் ஒரு புத்திமான். சமூக பார்வையாளன். தூரதிஸ்டி பார்வை கொண்டவன். ஆருட கணிப்புக் கொண்டவன். யதார்த்தத்தை தனது நெஞ்சில் சுமந்து கொண்டிருப்பவன். என்பதை அவனோடு பழகினால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அவனது அரசியல் பார்வையும் எனது பார்வையும் சில இடங்களில் வளைவு நெளிவு கொண்டதாக இருந்தாலும் தமிழத்தேசியத்தின் பால் இருவரும் ஒரே கருத்துக்களை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பவர்கள். வெளிப்படையான சுபாவம். முதுகு சொறியத் தெரியாத துணிவு. பளிச்சென்று அள்ளிவீசும் குணம். சில சமயங்களில் என்னைப்போலவே அவனையும் கடுமையான விமர்சனத்துக்கு ஆளாக்கிவிடும்.

எது எவ்வழி செல்லினும் திருகோணமலை இலக்கியப் பாரம்பரியங்களின் ஒரு தூணாக விளங்கும் கடாட்சம் நல்ல இலக்கியங்களை இன்னும் தரவேண்டும். அவை எதிர்காலத்தின் உண்மைகளையும் சத்தியங்களையும் பேசுபவையாக இருக்கவேண்டும். அவனை நோக்கிய பதிவுகளை மேற்கொள்ள எடுத்த முயற்சியாளனான வைத்தியக்கலாநிதி சதிஸ் அவர்களை மனம் திறந்து பாராட்டுகிறேன். இவ்வாறானதொரு முயற்சியை இதுவரை யாரும் செய்ததாக நான் அறியவில்லை வாழும்போது வாழ்த்தும் அந்த கலாச்சாரம் இன்னும் வளரவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த கதைசொல்லி

**திரு. ஆறுமுகம் செல்வநாயகம்**
**பள்ளிக்குடியிருப்பு, திருகோணமலை.**

*இதயத்தாகமே இலக்கியம் என்னும் இலக்கியத் துறையில் சிறுகதைகள் வளர்ப்பதில் ஜாம்பவானாகத் திகழ்பவர். சமூக நடைமுறைகள், யுத்தகால நிகழ்வுகள், அரசியல், வரலாறு, முகாமைத்துவத் திறன்கள் எனப் பல்துறைசார் சமூகப் பிரதிபலிப்புகளை இலக்கிய நயத்துடனும், நகைச்சுவையுடனும் சிறப்பான தமிழில் அழகாக எழுதி வருபவர்.*

*இவரது கதைகளில் பழந்தமிழ் இலக்கியங்களின் சாயலும், வரலாற்று ஆய்வுப் பெறுபேறுகளுடனான தெளிவுபடுத்தலும், ஆழமான புலமைத்துவ வெளிப்படுத்துகையும் அமைவதைக் காணலாம். காலத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியம் என்பதற்கு ஒப்பாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். தந்தையார் ஆசிரியமணி, அதிபர். பாட்டனார் தேசத்து விதானையார். இருவரும் வாசிப்பும் எழுத்துமாக வாழ்ந்தமையும் இன்று இவரது பின்புலமாக அமையலாம்.*

*பேசும்போது நகைச்சுவைகள் தவழ, சிறந்த கதைசொல்லியாகவும் திகழ்பவர். காலக்கீறல்கள், குருதிமண் முதலான சிறுகதைத் தொகுப்புகள் வாசிப்போருக்கு சுறுசுறுப்பை ஏற்படுத்துபவை. இவரது சிறுகதைகளுக்கு உள்நாட்டு மட்டத்திலும், இந்தியா முதலான வெளிநாடுகளிலும் பரிசில்கள் கிடைத்தமை பாராட்டிற்குரியது.*

*எழுத்துரு நூல்களின் விற்பனை வருமானங்கள் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிதியத்திற்காகி சமூக மேம்பாட்டுக்காக பயன்படுவதும் பாராட்டுக்குரியதே. தொடர்ந்தும் எழுத்துப்பணி சமூக மகிழ்வுக்கும், கருத்தாழம் பதியவும் உதவ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.*

*நன்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவகடாட்சம் ஒரு கலைக்களஞ்சியம் (Encyclopedia)

**திரு. க. துஸ்யந்தன்**
**இராவணசேனை, திருகோணமலை.**

என் வாழ்நாளில் பல்லாயிரம் மனிதர்களைக் கடந்திருப்பேன். அறிஞர்கள், அரசியல்வாதிகள், ஆளுமைகள், இலக்கியவாதிகள், ஈழப்போர்கள், உறவினர்கள், ஊரவர்கள், எதிர்க்கருத்து உடையவர்கள் என ஏராளம் பேர் அடங்குவர். ஆனால் இவர்கள் அனைவரையும் கடந்து அந்த மனிதர்களையெல்லாம் ஒன்று சேர்த்த ஒரு கலைக்களஞ்சியமாகத் தெரிபவர் தேவகடாட்சம் ஐயா என்பது மிகப்படுத்தலோ, துதிபாடுதலோ அல்ல என்பது அவருடன் பழகிய ஒவ்வொருவரும் இக்கூற்றை எண்ணிப்பார்க்கும்போது தாங்களும் உணர்ந்துகொள்வர்.

ஐயாவுடன் பழகிய நாட்கள் என்னவோ சொற்பம்தான் ஆனால் அக்காலத்தில் பேசிய பகிர்ந்த விடயங்கள் அந்தக் காலத்தை விஞ்சியது. நேரடியாக பேசிய நேரத்திலும் பார்க்கத் தொலைபேசியில் அளவளாவியது இன்னும் அதிகம். சில உரையாடல் மணிக்கணக்கில் நீண்டுசெல்லும், வீட்டில் மகனோ மனைவியோ இன்னொரு வேலைக்காக அழைத்தால் மட்டுமே அழைப்பைத் துண்டிப்பதுண்டு. அவ்வளவுநேரம் அலுக்காத பேச்சுக்குக் காரணம் ஐயாவுடன் பேசும் போது கிடைக்கும் சுவாரசியம் மிக்க புதிய அனுபவம்தான். என்ன பேசினாலும் ஒரு சிலேடையினையும் சேர்த்துவிடுவார். இதனை எங்கு சேமித்து வைத்திருக்கின்றார், எவ்வாறு பொருத்தமான இடத்தில் எடுத்துச் செருகுகின்றார் என்பது எனக்கு இன்னும் வியப்பாகவே இருக்கின்றது. அவற்றில் பல நையாண்டியாக இருந்தாலும் காத்திரமான கருத்தும் பொதிந்திருக்கும். கிரந்தமும், கிண்டலும், நகைச்சுவையும் கொண்டு பேசுவதற்கு இவருக்கு நிகர் யாருமில்லை.

ஒவ்வொரு கருத்துப் பகிர்வின்போதும் அவிழ்த்துவிடும் உவமைகளும், மரபுத்தொடரும் ஏராளம். அந்தக் கவர்ச்சியே மீண்டும் மீண்டும் அவருடன் பேசத்தூண்டும் வசியமாகும். ஐயா பேசும் மரபுத்தொடர்கள், உவமான உவமேயங்கள் அளவில்லாதவை. ஆனால் இன்றைய தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் இல்லாதவை என்பதால் இவர் இதனை எங்கு பெற்றிருப்பார், யாரிடம் கற்றிருப்பார் எனும் கேள்வி அவ்வப்போது தோன்றி மறையும். எப்பொழுது பேசும் போதும் அவர் கூறும் ஊரக உவமானங்களும், பழமொழிகளும் அன்றுதான் முதன் முதலாகக் கேட்பதாக இருக்கும். பாடப்புத்தகத்தில் எத்தனையோ பழமொழிகள், இணைமொழிகள், இரட்டைக்கிழவிகள் படித்திருந்தாலும் ஐயா சொல்பவை முற்றிலும் புதியனவாகவும் இடத்திற்கு மிகப்பொருத்தமானவையாகவும் இருக்கும். சொல்லவந்த கருத்தை அந்த ஊரகப் பழமொழிகள் மேலும் வலுவாகப் பதிவுசெய்துவிடும். ஊரகப் பேச்சுவழக்குப் பழமொழிகள் என்பதால் சில இடக்கரடக்கல், குழூஉக்குறிக்குட்பட்டவையாக இருந்தாலும் அவை முகம்சுழிக்கவைப்பவையாகவும் இருக்காது ஐயா அதையும் பண்புடன் வெளிப்படுத்திவிடுவார். எதைப் பேசினாலும், எழுதினாலும் அனைவருக்கும் இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் சொல்லவேண்டும் என அடிக்கடி சொல்லுவார். ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் புலமையை வெளிப்படுத்துவதற்கு அல்ல மாறாக அது மக்களைச் சென்றடைவதற்காகவேயாகும் எனும் கருத்தில் பற்றுறுதிகொண்டவர். இன்று சிறந்த எழுத்தாளர்களும் எழுத்துப் பி ழைகளை விடுதல் இயல்பான ஒன்றுதான் எனக் காட்டி தமது தவறை மறைக்க நினைப்பதை நாம் காண்கின்றோம். அந்தவகையில் தேவகடாட்சம் ஐயா ஒரு சொற்களஞ்சியமாக இருப்பதால் எழுத்துப் பிழைகளை கண்டு திருத்தச்சொல்வார். அப்பிழையினை மீண்டும் விடாதவாறு விளக்கமும் சொல்வது இன்னொரு தனிச்சிறப்புதான்.

அறம், அரசியல், பொருளாதாரம் போன்ற காத்திரமான விடயங்களில் திருக்குறள், ஆத்திசூடி இன்னும் பல நன்னூல்களின் பாடல்களை உடன் கொண்டுவந்து சேர்த்து விளக்குவதில் அவருக்கு நிகரில்லை. நான் கூகுலில் தேடிக் கண்டுபிடிக்கமுன் தன் மனக்கணிணியின் பதிவில் இருந்து எடுத்துரைத்து கூகுலினையும் தோற்கடிக்கும் ஆற்றல் ஐயாவிடம் நான்கண்டு வியந்த இன்னுமொரு திறமைதான். மொழி, இலக்கியம், வரலாறு, போராட்டகாலம், பிரதேசத்தின் சம்பவங்கள், மாவட்டத்தின் பாரம்பரியம், ஆலயம் தொடர்பான தகவல்கள், என அனைத்திலும் ஆணித்தரமான தகவல்களை தன்னகத்தே கொண்டுள்ளதுடன் உரிய நேரத்தில் இலாவகமாகப் பயன்படுத்துவதாலேயே இவர் விக்கிபீடியாவை விட மேலானவர் என்பதால் ஒரு கலைக்களஞ்சியமாக எனக்குத் தெரிகின்றார். அவ்வாறு நான் இக்கலைக் களஞ்சியத்தில் பெற்ற தகவல்கள் அதிகம்.

மக்களுடன் நெருங்கிப் பயணித்த பேருந்து சபையின் அதிகாரியாக, எளிய மக்களின் உறுப்பினராக இருந்து கிராமசேவகராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவன் ஒரு சிறுகதை எழுத்தாளனாக அவதாரம் எடுத்து மக்கள் பிரச்சனையினைப் பேசும்போது எது எவ்வளவு உண்மையானதாக இருக்கும். யாரோ சொல்லக்கேட்டு கதை எழுதுவோர் மத்தியில் தான்கண்ட மக்கள் குறைகளை அறச்சீற்றத்துடன் கதையாக வடிக்கும்போது அது ஒவ்வொருவர் மனதையும் தைக்கும், மனதில் குருதியைக் கசியச்செய்து கண்ணீரையும் சிந்தச்செய்யும். இதுதான் அவர் ஒரு சிறுகதையாளராக ஈழத்தில் புகழ்வெளிச்சம் பெற்றதற்கான காரணமாக இருக்கும். தனது எழுத்தெனும் ஒப்பற்ற உழைப்பால் பெற்ற வருமானத்தைத் திரட்டி அதனை மூலாதாரமாகக்கொண்டு திருகோணமலை மாவட்டப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம் எனும் அமைப்பை நிறுவி கல்விப் பணியாற்றிய சேவகன், எழுத்தாளன் நானறிந்து திருகோணமலையில் ஐயா தேவகடாட்சம் மட்டும்தான். திருகோணமலை மாவட்டத்தின் கல்வியில் குறிப்பாக மூதூர் பகுதியின் கல்வியை மேம்படுத்த பல்வேறு நபர்களும், அமைப்புகளும் அவ்வப்போது பணியாற்றிக் கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் அவரது நிதியம் ஆரம்பித்த நாள்முதல் இன்றுவரை ஓயாது பணியாற்றும் ஒரே ஒரு தனிமனிதன் ஐயா தேவகடாட்சம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களின் சாதனைகளை தேடிச்சென்று பாராட்டிப் பரிசுவழங்கி ஊக்குவிப்பதை தனது கடமையாகவே கொண்டு செயற்படும் உள்ளம் வேறுயாருக்கும் இராது. கல்விச் செயற்பாட்டு நிகழ்வு ஒன்றில்தான் ஐயாவை முதன் முதலில் சந்தித்திருந்தேன். 2016 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பரீட்சை எழுதவிருந்த சம்பூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவித்தியாலய மாணவர்களுக்கு கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டிருக்கும் போதே அவரைச் சந்திக்க நேர்ந்தது. கருத்தரங்கு ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இன்னொருபுறம் மாணவர்களுக்கான தேனீர், சிற்றுண்டி தயாரித்து வழங்கிக் கொண்டிருந்ததுடன், மதிய உணவையும் அம்மாணவர்களின் பெற்றோர்களின் உதவியுடன் அனைவருக்கும் சமைத்துக் கொண்டிருந்தார்.

"ரோம் பற்றி எரிகையில் நிரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்" என்பதில் தேவகடாட்சம் ஐயாவைப் பொருத்திப் பார்த்தால் "தேவகடாட்சம் உணவு உண்டுகொண்டிருந்தார்" எனச் சொல்வதில் தவறிருக்காது. ஆம் என்ன நிகழ்வு, செயற்பாடு, பயணமாக இருந்தாலும் அவர் உணவில் மிகவும் கவனம் செலுத்துபவர். அவர் உணவுப் பிரியர் என்பதை விட கல்வியோ, வழிபாடோ, கடமையோ எதுவாக இருந்தாலும் வயிறு நிறைவாக, உடல் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே எடுக்கும் பணியை நிறைவாகச் செய்யமுடியும். அப்போதே எமது நோக்கமும் நிறைவேறும் எனும் உண்மையை உணர்ந்து கடமை செய்யும் உன்னத பண்பை இவரிடம் நாம் கற்றது.

பின்தங்கிய பிரதேசங்களில் பெரும்பாலான மாணவர்கள் நேரத்திற்குரிய உணவு எடுத்துக்கொள்ளும் வசதியற்றவர்களாகவே இருப்பவர்கள் என்பதை நன்கறிந்த மனிதன் என்பதால் பிள்ளைகளின் பசிபோக்கி கல்வியை வழங்கும் வழக்கத்தைக் க்டைப்பிடிக்கும் இவர் பணி இறைவழிபாட்டை விட மேலானது. சமகாலத்தில் ஐயாவுடன் பல செயற்பாடுகளை இணைந்து மேற்கொண்டிருக்கின்றேன். கன்னியா சிவன் ஆலய அறங்காவலர் சபையின் ஒரு காப்பாளராக இணைந்து தன் பணியை ஆற்றிய நிலையில் பொருளாளர் பதவி விலக, அவ்விடைவெளியை காலம் உணர்ந்து பொறுப்பேற்று, இன்றளவும் என்னுடன் இணைந்து பயணிப்பது ஒரு வரலாற்றுச் செயற்பாடுதான்.

கன்னியா ஆலய விடயத்தில் பொலிஸ் நிலையம், பொலிஸ் அத்தியேட்சகர் காரியாலயம், அரசியல்வாதிகளின் அலுவலகம், சட்டத்தரணிகளின் அலுவலகம், நீதிமன்றம், மனித உரிமை ஆணையகம், தொல்பொருள் திணைக்களம், மாவட்டச்செயலகம், பிரதேச செயலகம், இந்து கலாசாரத் திணைக்களம், பல சமயப்பெரியவர்கள் என அனைத்து இடங்களுக்கும் என்னுடன் ஏறி இறங்கியவர் தேவகடாட்சம் ஐயா மட்டும்தான். திருகோணமலையில் கன்னியா வழக்கிற்கு உதவும் சட்டத்தரணிகள் இல்லை என்ற நிலையில் யாழ்ப்பாணத்திற்கு இரண்டு தடவை பயணித்த அனுபவம் காத்திரமானது. என்னிலும் 25 வயது மூத்தவர் பணிஓய்வில் இருப்பவர், மூப்பிற்கான உடல் நோய்களுக்குக் கிரமமாக மருந்துகளை உட்கொள்ளும் நபராக இருந்துகொண்டு இப்பணிகளில் எவ்வாறு உற்சாகத்துடன் செயற்படுகின்றார் என்பதை எப்போதும் வியந்து பார்ப்பதுண்டு. பேருந்தில் பயணிப்பது அவருக்குச் சற்றுச் சிரமமானது என்பதுடன் வசதியான வாகனத்தில் செல்லப் போதிய பணவசதி இல்லை என்றாலும் கூட, எடுத்த பணியின் கனம் அறிந்து ஒரு முச்சக்கரவண்டியில் யாழ்ப்பாணம் சென்று வழக்கறிஞர்களைச் சந்தித்துத் திரும்பினோம். அந்தப் பயணம் தந்த அனுபவம் என்றுமே மறக்கமுடியாத ஒன்று. மேற்படி பயணங்களிலும், பணிகளிலும் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோர்வடைந்திடக்கூடாது என்பதற்காக தனது முதுமையின் பலவீனத்தை ஒருபோதும் காட்டியதில்லை. எனக்கு இன்னொரு வேலை இருக்கின்றது, சோர்வாக இருக்கின்றது என்று ஒருபோதும் சொன்னதில்லை. உண்மையில் இப்பணிகளில் இவரது தியாகம் அளப்பெரியது. மிக அவசரமாக கன்னியா ஆலயவிடயம் அல்லது சமூகம் தொடர்பான சந்திப்பிற்கு அழைத்தால் எந்தவித சாக்குப்போக்கும் சொல்லாது எவ்விடத்திற்கு? எத்தனை மணிக்கு? இன்னும் 10 நிமிடத்தில் அந்த இடத்தில் நிற்பேன் எனும் பதிலை மட்டுமே சொல்வார். என்மீதுள்ள அதீத நம்பிக்கையால் என்னவிடயம் என்று கேட்கும் பழக்கம் அவரிடம் இல்லை.

இளையோராகிய எம்மை பல சந்தர்ப்பங்களில் நிதானமாக நடந்துகொள்ள வழிப்படுத்தியவர். ஆனால் எந்த இடத்தில் என்ன பேசவேண்டுமோ அந்த இடத்தில் அதை மிகத்துணிவுடன் பேசுபவர். அப்படியொரு சந்தர்ப்பம்தான் கன்னியா வெந்நீர் ஊற்று சிவன் ஆலய பூசை வழிபாடு தொடர்பான கூட்டம் (2019.07.27) திருகோணமலை மாவட்டச் செலயகத்தில் நடைபெற்றது. அதில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச்செயலாளர், திருகோணமலை மாவட்ட படை அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட தலைமைப் புத்தபிக்குகள், சைவப்பெரியவர்கள், தொல்பொருள் திணைக்களத்தினர், இன்னும் பல அதிகாரிகள், கன்னியா சிவன் ஆலயத்தின் நிர்வாகிகளாக நாமும் கலந்துகொண்டிருந்தோம். ஒரு சந்தர்ப்பத்தில் பிக்குகள் சிலர் கன்னியா ஆலயம் தொடர்பாகத் தெரிவித்த கருத்திற்கு அந்த சிங்கத்தின் கோட்டையில் மிகத்துணிவுடன் பௌத்த பிக்குகளும், தொல்பொருள் திணைக்களத்தினரும், சிங்கள அரச அதிகாரிகளும் நடந்துகொள்ளும் தவறான முறையினையும், வரலாற்றுத் திரிபுபடுத்தல்களையும், சைவத்தமிழரின் மரபுரிமை உடைமை அபகரிப்புகளையும் தோலுரித்துக்காட்டினார்.

சபையில் இருந்த பேரினவாதிகள் ஒரு கணம் அரண்டுதான்போனார்கள். அந்த அளவுக்கு எமது பக்க நியாயத்தை மிகத்துணிவுடன் எடுத்துரைத்தார். பிரதேச வரலாறு, பௌத்த போதனைகளையும் எடுத்து விளக்கியபோது எதிர்தரப்பினர் மௌனமாகிய நிலை காணப்பட்டது. அந்தச் சம்பவத்தை இன்று நினைத்தாலும் உரோமம் சிலிர்க்கின்றது. இவ்வாறு இனத்திற்கும், பிரதேசத்திற்கும் இழுக்கு ஏற்படும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும் விட்டுக்கொடுப்பு இல்லாமல் தக்கபதில் தருவதில் ஐயா தனிரகம் தான். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஐயா துணிந்து பேசுவதற்கு அடிப்படைக்காரணம் அவரிடம் குவிந்து கிடக்கும் தகவல்கள்தான். திருகோணமலை மாவட்டத்திலும், தமிழ்த்தேசிய சிந்தனையிலும் அளவுகடந்த பற்றுள்ள இவர் இந்த மாவட்டத்தின் ஒரு மாகாணசபை உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்க வேண்டியவர். ஆனால் இந்த மண்ணின் துரதிஸ்டம் ஐயாவிற்கு இந்த வாய்ப்பை வழங்கத் தவறிவிட்டது. இவ்வாறான ஒரு பதவி இல்லாவிடினும் அப்பதவியில் இருந்தவர்களை விட இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் அளப்பெரிய பணியாற்றி எமக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கின்றார் என்பதை வரலாறு பதிவுசெய்துள்ளது. இப் பெருமகனுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது என் பாக்கியம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்புடன் தொடரும் உறவு

**கவிதாயினி சுஜந்தினி யுவராஜா**
**சம்பூர், மூதூர்.**

ஈழத்து இலக்கியப் பரப்பில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் இலக்கியவாதியும் எழுத்தாளருமாகிய. மல்லிகைத்தீவு கனகசபை தேவகடாட்சம் அவர்கள் சிறந்த படைப்பிலக்கியங்களை உருவாக்கியவராகத் திகழ்கின்றார் .

எனது சிறு பிராயத்தில் இருந்தே இவரை நன்கு அறிவேன். எனது தந்தையார் அதிபர் அமரர் புண்ணியமூர்த்தி செல்லக்குட்டி அவர்களோடு தேவகடாட்சம் அவர்கள் குடும்ப உறவாக நட்புறவோடு பழகி வந்ததை கண்ணூடே கண்டிருக்கின்றேன். தந்தையாரால் எழுதப்பட்ட மெல்லிசை பாடல்கள், வரையப்பட்ட ஓவியங்கள் கவிதைகள் ,சிறுகதைகள், கட்டுரைகள் என்பவை பற்றி காண்கின்ற போதெல்லாம் தேவகடாட்சம் அவர்கள் எம்மிடம் பகிர்ந்து கொள்வார்.

எனது தந்தையாரை அவர் அண்ணன் என்று அழைத்து வந்திருக்கின்றார் . எனது தந்தையாரின் அன்னை, தந்தை, தங்கை என இன்றும் எம் ஊரோடு அவருடைய உறவு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பழகுவதற்கு இனிமையான பண்பான மனிதர் . இவருடைய சிறுகதைகள் முற்போக்கு சிந்தனையுடைய கதைகளாக காணப்படுகின்றது. தொடர்ந்தும் இவருடைய படைப்புகள் வெளிவர வேண்டும். படைப்புகளை அள்ளித் தருவதற்கு அவர் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி வணங்குகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அம்மான் கண்' என்ற தலைப்பு ஆர்வத்தைத் தூண்டியது

மருத்துவர் த.ஜீவராஜ்
(வரலாற்று ஆய்வார்வலர்)
தம்பலகாமம், திருகோணமலை.

நான் க.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருந்த காலப்பகுதி என்று நினைக்கிறேன். எங்களது வீட்டில் அப்பா உருவாக்கி இருந்த நூலகத்தில் "காலக் கீறல்கள்" என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பு இருந்தது. ஆர்வத்தோடு வாசிக்க எடுத்த எனக்கு உள்ளடக்கத்தில் இருந்த அம்மான் கண் என்ற தலைப்பு ஆர்வத்தைத் தூண்டியது.

அப்பப்பாவிடம் வாய்மொழிக் கதையாகக் கேட்டிருந்த நரபலிக் கதையை முதல்முறையாக சிறுகதை வடிவில் வாசித்தேன். அந்த நூலில் இருந்த சிறுகதைகளுக்குச் சொந்தக்காரர் திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்கள். எனது தந்தையின் நண்பர்.

"காலக் கீறல்கள், குமுறல்கள், குருதி மண்" ஆகிய சிறுகதைத் தொகுதிகளின் ஆசிரியர். சிறிய கதைகளுக்கு ஊடாக தன் வாழ்வில் அனுபவித்த பல விடயங்களைப் பதிவு செய்தவர். உள்ளூர், புலம்பெயர் வாழ்வியலை திருகோணமலையிலிருந்து பதிவு செய்த அவரது பணி திருகோணமலை இலக்கியப் பரப்பில் சிறப்பித்துச் சொல்ல வேண்டியவை.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நயமிக்க பேச்சாளர்

**திரு. கந்தவனம் கோணேஸ்வரன்**
**எழுத்தாளர் - ஓய்வுநிலை தபாலதிபர்,**
**திருகோணமலை.**

*எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சத்துக்கும் எனக்குமிடையிலான தொடர்பு நாற்பது ஆண்டுகளுக்கும் மேலானது. ஒரு கிராமசேவகராக எனக்கு அறிமுகமான அவர் சிறந்த நகைச்சுவையாளராகவும் திகழ்ந்தார். நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதே எவரும் எதிர்பாராத விதமாக நகைச்சுவை உதிர்த்து நாட்கணக்காக நினைத்து நினைத்துச் சிரிக்கும்படி செய்துவிடுவார். தமிழ்ப்பற்றும் இனப்பற்றும் நிரம்பப்பெற்றவர். எப்போதும் தமிழைக் கற்கும் ஒரு மாணவன்போலவே ஆர்வத்துடன் நடந்துகொள்வார். இந்த ஆர்வத்தின் காரணமாகவே அவரால் பல சிறுகதைகளைப் படைக்க முடிந்தது. தான் காண்பவற்றை உணர்பவற்றைச் சுவைகுன்றாமல் தமது கதைகளில் கொண்டுவரும் தேர்ச்சி இவரிடம் நிறையவே காணப்படுகிறது. இதுவரை மூன்று சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். முதலாவது சிறுகதைத் தொகுப்பான "காலக்கீறல்கள்" நூலின்மூலம் கிடைத்த வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு "பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம்" என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றைநிறுவி அதன்மூலம் வறுமையில் தவிக்கும் சிறார்களின் கல்விக்கு உதவிவருகிறார்.*

*அப்பணியை இன்றுவரை தொடர்ந்து வருகிறார். அறநெறிப்பாசாலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற பணிகளையும் ஆற்றி வருகிறார். அவ்வப்போது கவிதை எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார் திருமலை சுந்தாவினால் தாயார் நினைவாக வெளியிடப்பட்ட "அம்மா" எனும் நூலில் கனகசபை தேவகடாட்சத்தின் கவிதையும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் இலக்கிய நண்பர்கள் பலருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். கவிஞர் செல்லையா நவசோதிராசா, கவிஞர் திருமலை சுந்தா, கவிஞர் கெஜ தர்மகுலராசா, எழுத்தாளர் வைத்தியர் இராஜ தர்மராஜா போன்றோர் இவருடன் இணைந்து செயல்பட்ட இலக்கிய ஆளுமைகளாவர். இலக்கிய நயமிக்க பேச்சாளரான கனகசபைதேவகடாட்சம் மேடைகளை உற்சாகமாகப் பயன்படுத்துவதில் வல்லவர். கேட்போரைச் சோரவிடாது வைத்திருப்பதிலும் தொடராகப் பேசுவதிலும் ஆற்றல்மிக்கவராக இருக்கின்றார்.*

*"காலக்கீறல்கள்", "குருதிமண்", "குமுறல்கள்" என்பவை இவரால் வெளியிடப்பட்ட சிறுகதை நூல்கள். ஒவ்வொரு சிறுகதையும் அன்றைய மக்களின் அவலங்களை வெளிக்கொணர்வதாகவே அமைந்தமை இவரது இனப்பற்றுக்குச் சிறந்த சான்று. சிறுகதைகளை வாசிக்கும் ஒருவர் தாமும் கதைக்களத்தில் நின்றுலாவும் மனநிலையைப் பெறும்வகையில் எழுத்துநடை கையாளப்பட்டிருப்பது இவரது சிறப்பே. நல்ல நண்பனாக, நல்ல எழுத்தாளனாக, நல்ல கிராமசேவகராக, நல்ல சமூகப்பற்றாளனாக கனகசபை தேவகடாட்சம் மேலும் சிறப்புறுவார் என்பதில் ஐயமில்லை.*

*நன்றி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிசில் நான் கண்ட தேவகடாட்சம் ஐயா

திரு. தியாகராசா முரளிநடேசன்
(பண்ணாகம், யாழ்ப்பாணம்)
சுவிஸ்.

நான் வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம், பண்ணாகம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது 33 வருடங்களாக சுவிஸ் நாட்டில் வாழ்ந்துவருகின்றேன். என்னை பொறுத்தவரையில் இளம்பராயத்தில் இடம்பெயர்ந்த படியினால் முற்று முழுதாக தமிழர் வாழ் பிரதேசங்கள் குறிப்பாக கிழக்குப்பகுதி சூழல் விடயமாக வரலாற்றுப் பார்வையோ அல்லது வாழ்வியல் நடைமுறையோ அறிந்திருக்க நியாயமில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணம் சம்பந்தமாக எந்தவித அறிவும் எனக்கு இருக்கவில்லை. கடாட்சம் ஐயாவின் வருகையின் பின்னர் கிழக்கு மாகாண வாழ்வியலும் வரலாறும் சம்பந்தமாக நீண்டநாள் கலந்துரையாடல்களில் இருந்து வடக்குக்கும் கிழக்குக்குமான ஒரு வாழ்வியல் வரலாற்றுத்தொடர்பு இருப்பதை அறிய நேர்ந்தது.

மொழிப்பிரயோகங்களில் வடக்குக்கும் கிழக்குக்குமான மாற்றங்கள் ஓரளவு இருந்தாலும் வாழ்வியல் நடைமுறையில் எந்த மாற்றமும் தென்பட்டதாக நான் அறியவில்லை. அதிலிருந்து புரியக்கூடியது என்னவென்றால் ஒரு மரத்து கனிகள் தான் இரு மாகாணங்களென்றும், நடைமுறையிலும் பண்பாட்டிலும் மொழியிலும் எந்த பேதமும் இருப்பதாக எனக்கு புலப்படவில்லை. வடக்கும் கிழக்கும் மாகாணங்கள் ரீதியாக வேறாக இருந்தாலும் அதன் மூல வேர்கள் ஒன்றாக தான் இருந்தது என்பதை கடாட்சம் ஐயாவுடன் கொண்ட உரையாடல்களில் இருந்து தெரிந்துகொண்டேன். அதன் பின்னர் சுவிட்சர்லாந்தில் அவருடன் வாழும் காலத்தில் என்னோடும் என் குடும்பத்தாரோடும் மிக நெருங்கிய அன்னியோன்யமாகிய தொடர்புடன் இருந்ததோடு எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத்தவராக இருந்தார் என்று கூறலாம். அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் தேசியம் சார்ந்த உணர்வும் மொழியில்கொண்ட பற்றும் தமிழில் இருந்த புலமைத்துவமும் என்னை மிக இறுக்கமாக கட்டிப்போட்டது.

அவருக்கிருந்த தமிழ் ஆற்றலுக்கு உதாரணமாக நாங்கள் இருவருமாக நடாத்திய 'தணல்' என்ற இணையத்தளம் மிகப்பெரிய ஜனரஞ்சகமாக மாறியிருந்தது. அதில் வியக்கத்தக்க விடயம் என்னவென்றால் அவசரமாக தனது உறைவிடத்திற்கு கடாட்சம் ஐயா வெளிக்கிட்டு போகும்போது நான் ஏதாவது விடயம் சார்ந்த தலைப்பை மேலோட்டமாக கூறினால் அவர் புகையிரதத்தில் இருந்துகொண்டு தனது இருப்பிடம் சென்று சேர்வதற்கான அந்த ஒரு மணித்தியால இடைவெளியில் என்னால் கூறப்பட்ட அந்த தலைப்பிற்கு உரிய கட்டுரையை இணையதளத்தில் இடுவதற்காக தொலைபேசியில் கூறிக்கொண்டு போவார். அதை நான் கணணியில் எழுதிக்கொண்டே இருப்பேன். அவர் போய் இறங்கி தனது இருப்பிடத்தில் இருந்து பார்க்கும் போது தணல் இணையதளத்தில் வெளிவந்திருக்கும். அதை பல ஊடகங்கள் மேற்கோள்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கட்டுரையை பிரசுரித்திருப்பார்கள். அது தரமிக்கதும் ஜனரஞ்சகமிக்கதுமாக அமைந்திருக்கும்.

தமிழ் கொட்டுகின்ற விதத்தையிட்டு நான் ஆச்சரியப்படுவதுண்டு. அத்தோடு அவர் பொதுவாக நடக்கின்ற தமிழர் எழுச்சிக் கூட்டங்களில் பேச்சாளராக அழைக்கப்படுவார். எப்போதும் நான் அவருடன் செல்வேன். பெரும்பாலான கூட்டங்கள் வடமாகாண வாசனையையே தாங்கி நிற்கும். அப்பொழுது அக்கூட்டங்களில் உரையாற்றும் போது சாதுரியமாக வடக்கும் கிழக்கும் இணைந்திருக்கவேண்டிய அவசியத்தை பல ஆதாரங்களுடன் பேசுவார். அக்கருத்துக்கள் இரு மாகாணத்தாராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

எனக்கு பல அனுபவங்களில் குறிப்பிடத்தக்க ஒரு அனுபவம் சுவிட்சர்லாந்தில் ஒரு மாநிலத்தில் உரையாற்ற அழைத்தபோது ஈழத்தில் தமிழர் பிரதேசங்கள் பெரும்பான்மையினரால் கபளீகரம் செய்யப்படுவதை அகத்தியர் ஸ்தாபனத்தை மையமாக கொண்டு மிக உக்கிரமான ஒரு பேச்சை நான் கேட்டேன். இதில் வேடிக்கை என்னவென்றால் அவர் உரையாற்றி முடித்து இறங்கியபோது பலர் அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்கள், என் முன்னிலையில் ஒரு குடும்பத்தினர் வந்து "நீங்கள் ஐயா யாழ்ப்பாணமாக இருந்தும் கூட எமது பிரதேசத்து அகத்தியர் ஸ்தாபனத்தை பற்றி இவ்வளவு விபரமாக உரையாற்றியிருக்கின்றீர்களே" என்று அவரிடம் கூறினார்கள். அப்போது தான் நான் கூறினேன், "கடாட்சம் ஐயா யாழ்ப்பாணம் இல்லையப்பா அவர் திருக்கோணமலையை பிறப்பிடமாக கொண்டவர்" என்று கூறியவுடன் அவர்கள் யார் எவர் என்று விசாரித்து தமது உறவினர்கள் என்றும் கூறியிருந்தார்கள்.

பின்பு அவர் சுவிட்சர்லாந்தில் வாழ்ந்த காலத்தில் நோய் அவரை வாட்டியிருந்தது. அந்த நேரத்தில் உரையாற்றுவதற்கான அழைப்பு பக்கத்து மாநிலத்தில் இருந்து வந்திருந்தது. அவர் அந்த சுகயீனத்தோடும் வைத்தியசாலை அதிகாரிகளிடம் அனுமதியும் பெற்று அந்த நோயோடு போய் அந்த கூடத்தில் பங்குபற்றி விட்டு வந்து மீண்டும் வைத்தியசாலையில் இருந்ததை இப்பொழுதும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இப்படியாக ஏராளமான சம்பவங்களை குறிப்பிடலாம்.

அதற்கு இந்த புத்தகமும் நேரமும் போதாது. இன்றுவரை அவருடனான தொடர்பை நாங்கள் குடும்பமாக பேணிவருகின்றோம். அதுவும் எனது மனைவியின் ஊரில்(மனைவியின் சொந்தத்தில் மகனுக்கு திருமணம் செய்து வைத்ததை ஒரு ஆழமான தொடர்புக்கு காலாகின்றது. எங்களது தொடர்பு எப்பொழுதும் தேசியம் சார்ந்த தொடர்பாகவே இருக்கின்றது. ஐக்கியநாடுகள் மனிதவுரிமை ஆணையகத்தின் காரியாலயத்தில் நவநீதம்பிள்ளையின் பிரத்தியேக செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் தேவகடாட்சம் ஐயா, நான், நடேசலிங்கம், பத்மகரன் அதில் முக்கியமாக கிழக்குமாகாணம் பற்றிய முக்கியமான வரலாற்று பதிவுகளை ஐயா கூறும்போது அவர்கள் மலைத்து விட்டதோடு இதுவரைக்கும் இப்பிடியொரு தகவல் தங்களுக்கு கூறப்படவில்லை என்ற விடயத்தையும் வாயார புகழ்ந்து கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிசில் நடைபெற்ற பல சிறுகதை, மற்றும் புத்தக வெளியீட்டு நிகழ்வுகளிற்கு சிறப்புரையாற்ற தேவகடாட்சம் ஐயாவை அழைப்பார்கள். அப்போது சிலவற்றுக்கு நானும் கூட சென்றிருக்கின்றேன். அப்போதெல்லாம் தமிழின் சிறப்பு, பெருமை பற்றி நம் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு எடுத்துரைக்க அவர் தவறவில்லை. நானும் அவருடன் சென்று பல தகவல்களை கேட்டு அறிந்துகொண்டேன். இலங்கையின் வட மற்றும் கிழக்கின் பாரம்பரிய பண்பாட்டு தகவல்கள் செய்திகளை இந்த நிகழ்வுகளூடாக கடாட்சம் ஐயாவின் சொற்பொழிவுகளூடாக அறிந்துகொண்டதை பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்.

இவைகளுக்கும் மேலாக, நான் நேரில் காணாவிட்டாலும் வைத்தியத்துறையில் இருக்கும் வைத்தியர் அ. சதீஸ்குமார் அவர்கள் அவரின் தொழில் சுமையின் மத்தியிலும் "வாழும் போது வாழ்த்துவோம்" என்ற தத்துவத்தை உள்ளடக்கி, இப்படியாக பணிபுரிந்தவர்கள் வரலாற்றையும் அவர்களது சேவையையும் எழுத்தின் மூலம் கொண்டுவருவதோடு, அடுத்த சந்ததிக்கும் இதை கடத்தி வைப்பது மிகப்பெரிய வரலாற்றுப்பணியாக கருதுகின்றேன். குறிப்பாக கடாட்சம் ஐயாவின் எழுத்து மூலமாக பெற்ற பணத்தை அங்குள்ள பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அவர்களது நலன் சார்ந்தவைக்காகவும் அர்ப்பணிப்பது என்பது ஒரு புதுமையான வரலாறாகவே நான் காண்கின்றேன். இவற்றை வெளிக்கொண்டுவந்து இலக்கியப் படைப்புகளை சமூக மயப்படுத்துவதோடு சமூகத்திற்கு பயன்படுவதற்கான வழிவகைகளை எதிர்கால இலக்கியக்கர்த்தாக்கள் செய்யவேண்டுமென்று விரும்புகின்றேன்.

மேலும் இப்பணியை மேற்கொள்ளும் சம்பூரைச்சேர்ந்த வைத்திய கலாநிதி அ.சதீஸ்குமாரை வாழ்த்துவதோடு சகல நலமும் வளமும் பெற்று மேலும் அரிய பணியை சமூகத்துக்கு ஆற்றவேண்டுமென்று வாழ்த்தி எல்லாம் வல்ல கோணேசப்பெருமான் ஆசியை வழங்க வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மைந்தன்

**கவிஞர் தில்லைநாதன் பவித்திரன்**
**திருகோணமலை.**

இந்த பத்திக்கு மண்ணின் மைந்தன் என்ற தலைப்பே மிகவும் பொருத்தமானது என்று நினைக்கின்றேன். ஏனெனில் திரு . கனகசபை தேவகடாட்சம் அவர்கள் இவ்வாறுதான் எனக்கு அறிமுகமானார். ஓய்வு நிலை அதிபர் திரு .சி.நவரத்தினம் அவர்களோடு ஒரு இலக்கிய நிகழ்வினை திட்டமிட்டுக்கொண்டிருந்த போது அவரால் திரு .கனகசபை தேவகடாட்சம் அவர்கள் "மண்ணின் மைந்தன்" என்ற அடைமொழியோடு அறிமுகப்படுத்தப்பட்டார். இலக்கியம் செய்ய வருபவர்கள் எல்லோரும் தங்களை மண்ணின் மைந்தர்களாக பிரஸ்தாபித்துக் கொள்வதில் எனக்கு உடன்பாடு இல்லை என்பதால் திரு .க.தேவகடாட்சம் அவர்கள் மீதும் அவரை நேரில் காணாமலே ஒரு வித இடைவெளியை மனதளவில் ஏற்படுத்திக் கொண்டேன். பின்னொரு இலக்கிய மேடையில் அவரை சந்திக்க கிடைத்த போது அவரது ஆறடி உயரமும், மிடுக்கும், முக லாவண்யமும் என்னை அவரிடமிருந்து விலகியிருக்கவே செய்திருந்தன. திருகோணமலையில் அவர் சேர்ந்தியங்கிய அமைப்பினரின் மீது நான் கொண்டிருந்த அதிருப்தி இன்னும் இடைவெளியை அதிகரித்தது.

திருகோணமலையில் வாழ்ந்த ஈழத்தின் பிரபலமான சிறுகதை எழுத்தாளர் ஒருவரோடு நான் அந்நாட்களில் கொண்டிருந்த இலக்கியத் தொடர்பு. தேவகடாட்சம் அவர்களை இன்னும் விசாலமாக என்னிடமிருந்து ஒதுக்கியே வைத்திருந்தது. எனினும் காலம் ஒரு முறை என்னை தேவகடாட்சம் அவர்களை அவரது வீட்டிலேயே சந்திக்கச் செய்திருந்தது. என்ன பேரதிர்ச்சி, அவரில் நான் உண்டாக்கி வைத்திருந்த அத்தனை பிம்பங்களையும் உடைத்தெறிந்த மணித்துளிகளாக அந்த உரையாடல் அமைந்திருந்தது.

அவர் ஒரு கிராம சேவகராக இருந்த காலத்தில் இராணுவ கெடுபிடிகளுக்குள் எமது மக்களுக்கும், மண்ணை நேசித்த வீரர்களுக்கும் எவ்வாறான கைங்கரியங்களை செய்தார், எவ்வாறு சொந்த மண்ணிலிருந்து பிடுங்கி எறியப்பட்டார், சுவிஸ் நாட்டின் பிரஜா உரிமையை ஏற்காமல் மீண்டும் அவர் நாடு திரும்பிய கதைகளையெல்லாம் சுவாரசியமாக சம்பாசித்தோம். திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்களது இலக்கியப்பணியூடாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம் என்ற ஒன்றின் மூலமாக உடல் தளர்ந்த நிலையிலும் இன்றும் பல்வேறு நலத்திட்டங்களை திருவாளர் செய்து வருகின்றார் என்பதை அறிகிறேன். அத்தோடு ஒவ்வொரு அமாவாசை தினங்களிலும் ஏழை எளிய மக்களை தேடிச்சென்று உணவு கொடுக்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருகிறார்.

உண்மையில் தேவகடாட்சம் அவர்கள் மண்ணின் மைந்தன் தான் என்பதற்கு இன்னும் பலவற்றை என்னால் பேச முடியுமாக இருந்தாலும் இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

வாழ்க அம்மான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழமையுடன் உறவாடும் தேவகடாட்சம் ஐயா

**திரு. கனக தீபகாந்தன்,**
**எண்ணம் போல் வாழ்க்கை கலைஇலக்கிய மன்றம்,**
**திருகோணமலை.**

இலக்கியவெளியில் எனது ஈடுபாடு ஆரம்பிக்கும் முன்னரே ஒரு சமூக செயற்பாட்டாளராகவே எனக்கு அறிமுகமானவர் கனகசபை தேவகடாட்சம் ஐயா. மிகவும் துல்லியமாக திருகோணமலையின் வரலாறு சார்ந்த தெளிவை இவர் போன்ற சிலரிடமே அறிந்துகொள்ளலாம் என்பதை பழகிய சொற்ப காலத்திலேயே அறிந்து கொண்டேன். தமிழ்மொழி மீதும், சைவத்தொண்டின் மீதும் என்றுமே காத்திரமான கடப்பாட்டை பேணவேண்டுமென கூறிக்கொள்வார்.

திருகோணமலை இலக்கியப்பரப்பில் பெயர் குறிப்பிடத்தக்க சிறுகதை எழுத்தாளர்களுள் ஒருவராக தேவகடாட்சம் அவர்கள் நிலைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் யதார்த்தமான பேச்சுப்போலவே சமூகத்தின் அடிப்படை கட்டுமானங்களில் தான் இவருடைய சிறுகதைகளும் படைக்கப்பட்டுள்ளதை வாசிப்பின் மூலம் உணர்ந்துகொண்டேன். கடந்த வருடம் (2023) தேவகடாட்சம் ஐயாவுடன் இலக்கிய தொடர்புகளால் மிக நெருக்கமாக பயணிக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தமை ஆனந்தமாக இருந்தது.

இருதய சத்திரசிகிச்சை செய்திருந்தாலும் ஓய்ந்துவிடாது, இப்போதும் எழுதிக்கொண்டிருப்பதிலும் இலக்கிய நிகழ்வுகளில் தனது பங்களிப்பை தருவதிலும் தயங்குவதில்லை. 1995 இல் "மதில்மேல்" என்ற சிறுகதை மூலம் ஈழத்தின் சிறுகதையுலகில் நுழைந்த இவரின் "காலக்கீறல்கள்", "குமுறல்கள்", "குருதிமண்" என்ற சிறுகதை தொகுதிகள் பேசப்படும் இலக்கியப் படைப்புகளாக கருதப்படுகின்றன. 2023 மார்கழி சிறுகதை மஞ்சரியில் இவருடைய சிறுகதை "கண்ணீர் உப்பிட்டு" வெளியாகியிருந்தது.

என்றும் தோழமையுடன் உறவாடும் தங்கள் சமூக எழுத்துப்பணி என்றும் தொடர வேண்டும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தலைமுறைகளின் வழிகாட்டி

**"மல்லிகை செந்தூரன்"**
**மல்லிகைத்தீவு, திருகோணமலை.**

மல்லிகைத்தீவை பிறப்பிடமாகவும் திரிகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை தேவகடாட்சம் என்னும் ஆளுமை உள்ள இலக்கியவாதி பல சிறுகதைகளை எழுதியுள்ளார். இலக்கியம் ஊடாக அவர் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்த்து கொடுத்திருக்கின்றார். இவருடைய ஏராளமான சிறுகதைகளில் எமது ஊர்சார்ந்த விடயங்கள் உறவுகளின் பெயர்கள் கதாபாத்திரமாக அமைத்துள்ளமை மேலும் சிறப்பாகும். இவருடைய குருதிமண் புத்தகத்திற்கு மல்லிகைத்தீவை சேர்ந்த தொழிலதிபர் நடேசபிள்ளை ஐயாவும், இந்தியாவின் மூத்த எழுத்தாளர் ஏர்வாடி ராதாகிருஷ்ணன் ஐயாவும் வாழ்த்துரையையும் வெளியீட்டையும் செய்து கொடுத்தமை இவருடைய எழுத்துக்கு கிடைத்த அங்கீகாரமாக நான் நினைக்கின்றேன்.

எனது ஊரில் (மல்லிகைத்தீவு) ஒரு கலைஇலக்கிய மன்றம் உருவாக்குவதற்காக என்னை ஊக்குவித்து, செயல்பட முன்னின்று உழைத்தவர் தேவகடாட்சம் ஐயா போல் வேறுயாரும் இல்லை. இலக்கியத் துறையில் பணியாற்றுகின்ற அத்தனை எழுத்தாளர்களுடனும் தொடர்பு கொண்டு, செயல்படுவதற்காக ஆர்வம் காட்டிவரும் இன்றைய துடிப்புள்ள இளைஞன் என்றால் அது தேவகடாட்சம் ஐயாவாகத்தான் இருக்கும். கவிதை துறைகளை விட சிறுகதை எழுதுவதும், எழுதியவர்களின் கதைகளை சுவைப்பதும், பத்திரிகைகளை படிப்பதும் ஒரு பொழுதுபோக்காக கொண்டிருக்கின்றார். இவருக்கும் எனக்கும் இரத்த உறவுத் தொடர்பு இருக்கின்றது. அந்த அடிப்படையில் என்னை இலக்கியத்துக்குள் ஊக்குவித்த பெருமையும் இவருக்கு உண்டு. எனது முதலாவது புத்தகம் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியீடு செய்யப்பட்டது. முதலாவது கன்னிப் புத்தகத்தை வெளியிடுவதற்கு இவரும் ஒரு காரண கர்த்தாவாகும். நாங்கள் இரண்டு பேரும் அடிக்கடி சந்திக்கும்போது என்னிடம் "எப்போது மருமகன் நீங்கள் புத்தகம் வெளியிடப் போகின்றீர்கள்?" என்ற வாசகத்தை நான் அடிக்கடி கேட்பதுண்டு. அதுவே எனக்கு தூண்டுகோலாக அமைந்தது. "காதல் சிறகினிலே" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வை அவர் தலைமையில் நடத்தி முடித்தமை எனக்குக் கிடைத்த சிறப்பாகும்.
அவருடைய எண்ணங்களும் சிந்தனைகளும் இன்றைய தலைமுறைகள் இலக்கியத்துக்குள் கால் தடம் பதிக்க வேண்டும் என்பது. அதற்காக தன்னை அர்ப்பணித்து செயல்படக்கூடிய துடிப்பு அவரிடம் இருப்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் உணர்ந்திருக்கின்றேன். "மல்லிகை செந்தூரன்" என்னும் அடைமொழியை வெளி உலகிற்கு வெளிச்சம் காட்டியவரும் இவரே. அத்துறைகளில் பயணிப்பதற்காக அறிவுரைகளையும் இலக்கிய படிப்பினைகளையும் நிறைய சந்தர்ப்பங்களில் எனக்குப் புகட்டி இருக்கின்றார். இவ்வாறான ஒரு மனிதரின் இலக்கிய பயணத்தில் நானும் அவரின் அடுத்த சந்ததியாக பின் தொடர்வது இப்பிறவியில் கிடைத்த வரமாக நினைக்கின்றேன்.

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெட்சணகைலாய தேசத்தில் தொண்டாற்றக் கிடைத்தமை பெரும் பேறு

திரு.பொன் சற்சிவானந்தம்,
பெருமான் பேறுபெற்ற அடியவன், தெட்சண கைலாயம்,
திருகோணமலை.

கொட்டியாரத்தின் இலக்கியம் என்ற சோலையில் இடம்பிடித்த மல்லிகை மைந்தன். தெட்சண கைலாயம் தமிழர் தலைநகர் என்கிறது வரலாற்று ஆவணங்கள். அதற்கு எமது திருக்கோணைநாதர் தான் அடிப்படை என்பது உலகம் அறிந்த விடயம். முக்கியமாக இராவணேஸ்வரன் ,மற்றும் குறுமுனி அகத்தியன் அவர்களின் வரலாற்று விடயங்கள் அழிக்க முடியாத சான்றாக அமைந்துள்ளது. அந்த வகையில் கொட்டியாரம் கோணேசரின் தொண்டுப்பரம்பரையால் கட்டமைக்கப் பட்ட பூமி. இந்த பூமியில் நாம் வாழ கிடைத்தமை பெரும் பேறான கொடை என்றே கொள்ளலாம். மட்டுமன்றி அவனருளாலே அவன் பணி செய்யக் கிடைப்பது மகாபேறு.

இந்த வரிசையில் வரலாற்று முக்கியம் பெறும் மல்லிகைத்தீவின் மைந்தன். சிறந்த ஒரு குடும்ப பின்னணியில் பிறந்து, இன்று வரலாற்றில் கனகசபை தேவகடாட்சம் என்று இடம்பிடித்துள்ளார் என்பது அதுவும் அவன் செயல்தான். பல்துறை வித்தகர். அகத்தியர் வாழ்ந்த இந்தப்பூமியில் தமிழ் மற்றும் தொண்டு மறந்தால் குற்றமெனக் கொள்ளலாம். அந்த வரிசையில் தமிழ் இலக்கியத்தில் கால் பதித்து களம் கண்டவர் தேவகடாட்சம். அவரது பெயர் போன்று தேவகடாட்சம் பொருந்திய இராவணன் உடல்வாகை கொண்ட இலக்கியர் தேவகடாட்சம். தனது இலக்கியப்பணியை சமூகப்பணியாகவும் பரிணமிக்க வைத்தது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

தனது இலக்கிய தேடல் மூலம் கிடைத்த நிதி இன்று பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆற்றுப்படுத்துவது அளப்பரிய பணி. அந்தப்பணி நீண்டகாலம் தொடர வேண்டும் என்பது என் அவா. அதுமட்டுமன்றி, இந்த தெட்சண கைலாய தேசத்தில் நாம் இவ்வாறாக தொண்டாற்றக் கிடைத்தமையை பெரும் பேறாகக் கொள்ள வேண்டும். அந்தவகையில் அவரது தொண்டு கூர்மை பெற்று நிலைபேறாக சிறக்க வாழ்த்துக்கள்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிச்சலாந்தில் தமிழ் ஆசானாகிய திரு.க. தேவகடாட்சம்

**திரு.இ. லோகேஸ்வரன்,**
**அயர்லாந்து.**

2009 ஆம் ஆண்டு திரு.கனகசபை தேவகடாட்சம் அவர்களின் சிறந்த கட்டுரைகளில் ஒன்றைப் படித்தேன். இது அவரைத் தொடர்பு கொள்ள என்னை ஈர்த்தது. இதன் பிறகு பல வருடங்களாக அவருடன் தொடர்பில் இருந்தேன்.

இந்தக் காலத்தில் தமிழர் கலாசாரம், தமிழர் அரசியல், தமிழர் வரலாறு, தமிழரின் அன்றாடப் பிரச்சினைகள், சுதந்திரப் போராட்டம், சர்வதேச சமூகம் எனப் பல விடயங்கள் குறித்து விவாதித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். இதன்பொழுது அவரின் அறிவு, அனுபவம், திறமை, தமிழ் மக்கள் மீதான அன்பு ஆகியவற்றை என்னால் உணர முடிந்தது. அவர் தனது கருத்துக்களை அமெரிக்காவில் இயங்கும் "உலக சிறந்த திறமை அமைப்பு", "ஐரோப்பிய வானொலி", "உலக அரசியல் அமைப்பு" ஆகியவற்றுடன் பகிர்ந்து நேயர்களின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டார்.

சுவிச்சலாந்தில் வசிக்கும் தமிழ் குழந்தைகளுக்கு கட்டணம் ஏதும் பெறாமல் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்தார். ஏழைகளுக்கு நிதியுதவியும் பொருளுதவியும் செய்தார். அவரது சமூகசேவை, அர்ப்பணிப்பு, நேர்மை, கடின உழைப்பு என்பன மிகப் பெரியது. மிகவும் பாராட்டுக்குரியது.

இன்னும் இவரைப்பற்றி பல விடயங்களைக் கூறலாம். குறிப்பாக பல தமிழ் அமைப்புக்களால் ஐரோப்பிய நாடுகளில் கூட்டங்களும், ஒன்று கூடல்களும், நூல் வெளியீடுகளும் அடிக்கடி நடைபெறும். இவர் ஏறத்தாழ அனைத்து கூட்டங்களுக்கும் பேச்சாளராக அழைக்கப்படுவார். அக்கூட்டங்களில் இவர் உரையாற்றும் போது முக்கிய தொனிப்பொருளாக தமிழ் மொழி, தமிழர் பண்பாடுகள், தமிழர் பூர்வீக வரலாறு போன்றவற்றை ஆதாரத்தோடு உரையாற்றுவார். இலங்கையின் வட-கிழக்கு தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான ஒற்றுமையையும், பண்பாட்டையும் பற்றிப் பேசுவார். அதுவும் நகைச்சுவை உணர்வோடு பேசுவார். சபையினர் இரசிக்கக் கூடியதாக இருக்கும். அதிலும் மிகப்பெரிய ஊடகங்களான SANGAM GLOBAL, TRI TAMIL OLI, GTV LONDON போன்றவைகளில் கேள்வி பதில் உரையாடல்களை நிகழ்த்துவார். வித்தகத் தன்மையை வெளிப்படுத்த குறுக்குத்தனமாக கேள்வி கேட்பவர்களுக்கு நறுக்காகவும், நகைச்சுவையாகவும், வரலாற்றுத் தரவுகளோடு பதிலளிப்பார்.

அத்தோடு குறிப்பாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தை கபளிகரம் செய்வதற்கு இரண்டு படிமுறைகளை சிங்களவர்கள் காலம் காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது, பௌத்த விகாரை அமைப்பதும் சிங்களக் குடியேற்றமும். மற்றையது, வரலாற்றுப் பாரம்பரிய தமிழ் இடங்களின் பெயர்களை சிங்களப் பெயராக மாற்றுவது. இவை யாவும் இவரின் உரைகளில் காணலாம். இதனோடு திருக்குறள் சம்பந்தமான தெளிவுகளையும் உரையாற்றி இன்றைய சமூகம் விரும்பக்கூடியதாக தற்போதைய திரைப்படப் பாடல்களையும் தொடர்புபடுத்தி காதல்ரசம் சொட்ட ஊடகங்களிலும் கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளை சுவாரசியமாக மாற்றுவார்.

இவரின் தமிழ்ப்பற்றையும் தமிழ்மொழி வளத்தையும் கண்டு ஆச்சரியப்படுவதுண்டு. இவரின் முழுமையான பயன் நாட்டில்தான் தேவை. அங்கு அவரை எப்படிப் பயன்படுத்துகிறார்களோ நான் அறியேன். இருந்தாலும் வைத்தியத்துறையில் இருக்கும் இந்நூலாசிரியரான வைத்தியர் அருமைநாதன் ஸதீஸ்குமார் இப்பேர்ப்பட்டவர்களின் முக்கியத்துவம் கருதி வருங்கால சந்ததியினரின் அறிதலுக்காக இப்படியான வரலாற்று நூல்களை வெளிக்கொண்டு வருவது சிறப்பிலும் சிறப்பாகும்.

அவரின் சேவைக்கும், கடாட்சத்தின் சேவைக்கும் பொதுவான இறைவன் அனைத்து வளங்களையும், ஆரோக்கியத்தையும் வழங்கவேண்டுமெனப் பிரார்த்தித்து நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை மனப்பான்மையுடைய தேவகடாட்சம் ஐயா!!

**'அன்பின் பாதை' றொசில்டா**

**திருகோணமலை.**

திரு.க.தேவகடாட்சம் ஐயாவுடன் கடந்த வருடம்தான் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. ஐயா சமூகசேவைகள் சத்தமின்றி செய்யும் மனிதர். அறநெறி பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு உபதேச போதனைகளை செய்வது மட்டுமன்றி, மாணவர்களுக்கு தேவையான கொப்பிகளையும், பாடசாலை உபகரங்களையும் கொடுத்து உதவி செய்யும் பழக்கமுடையவர்.

நான் அறநெறி பாடசாலைகளை ஊக்கப்படுத்த மிக விருப்பம் கொண்டு பல செயற்பாடுகள் முன்னெடுப்பதைக் கேள்விப்பட்டு, என்னிடம் "மகள் நீங்கள் போகும் அறநெறி பாடசாலைக்கு என்னையும் அழைத்துச் செல்லுங்கள். மாணவர்களுக்கான உபதேச அறிவுரைகளை உங்களுக்கு வழங்க முடியும்" என்பார்கள். ஒருநாள் அறநெறி வகுப்பு மாணவர்களுக்கு வருவதாக கூறிய நிலையில் தான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அறநெறி நினைவாகவே காணப்பட்டார்கள். அவ்வேளையில் நான் உணர்ந்து கொண்டது அவரிடத்தில் உள்ள சேவை மனப்பான்மை.

தனது இயலாமையிலும் இலக்கிய நிகழ்வுகளுக்கு முகம் சுழிக்காமல் வந்து செல்வார்கள். சுவிஸ் நாட்டில் சிறிது காலம் இருந்தாலும் தன் தாயகம் போல வருமா அம்மா? அது தான் மீண்டும் வந்து விட்டேன் என்று ஒரு நாள் கதைக்கும் போது கூறினார்கள்.

சிறுகதை மஞ்சரிக்கு தனது ஆக்கமாய் சிறுகதை எழுதியவர், இம்மண்ணின் பெயர் தனது பெயருக்கு முன் வர வேண்டும் என்பதில் அக்கறையுடன் பல தடவை எனக்கு தொலைபேசியில் எடுத்துக்கூறினார். மறக்காது திருகோணமலை க.தேவகடாட்சம் என அச்சில் பதிவு செய்யும்படி நினைவுபடுத்தினார்கள்.

சேர் என்று அழைப்பதை தவிர்க்கும் படியும், ஐயா என்பதே அழகு என்பதையும் எனக்கு தன்னுடன் பேசும் போது ஒவ்வொரு தடவையும் நினைவுபடுத்துவார்கள்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லிகைத் தீவில் மலர்ந்த இலக்கியமே...

தமிழ்மாமணி. கவிஞர்.த.தவரூபன் (ஆசிரியர்)
ஈச்சிலம்பற்று, திருகோணமலை.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மல்லிகைத்தீவு என்னும் அழகிய கிராமத்தில் இவர் பிறந்தார். ஆரம்ப காலத்தில் இவர்களுடைய குடும்பம் மிகவும் வசதியாக வாழ்ந்தவர்கள் இல்லை என்று வருபவர்களுக்கு மடி நிறைய அள்ளிக் கொடுப்பவர்கள். அந்த மரபில் பிறந்து வளர்ந்தவர்தான் கடாச்சம் என்ற தேவகடாட்சம் அவரின் பெயரிலும் ஒரு அர்த்தம் உள்ளது இறைவனின் கிருபை என்று பொருள்படும். இறைவனால் படைக்கப்பட்டவர்தான். மானிட வாழ்வில் எத்தனை துன்பங்களையும் துயரங்களையும் தாண்டி தனது இல்லற வாழ்வில் இணைந்து பிள்ளைகளை பெற்று நன் மதிப்பையும் பெற்றவர்.

பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற படிக்காத மேதைகள் போல் இவர் பட்டமோ உயர் படிப்போ படிக்காத மனிதர். தனது சாதாரண படிப்பின் மூலம் அரச பதவியில் அங்கம் வகித்து ஒரு கிராம சேவையாளராக ஈச்சிலம்பற்று மண்ணில் பல வருடங்களாக கடமைபுரிந்தார். தனது சேவைக்காலத்தில் அதாவது 1985 ஆண்டு காலப்பகுதியில் இலங்கைத் திரு நாட்டில் இன வன் செயல்கள் புரையோடியுள்ள காலம். பல சவால்களை சந்தித்து மக்களுக்கு சேவை செய்தவர். இவருடைய சேவைக்காலத்தை வெருகல், ஈச்சலம்பற்று மக்கள் எப்போதும் மறந்ததில்லை. இவரை எப்போதும் எமது பிரதேச மக்கள் அன்பாக அண்ணாச்சி என்ற அன்ற அடைமொழியில் அழைப்பார்கள். அல்லது ஐயா என்ற உயரிய வார்த்தை சொல்லி அழைப்பார்கள்.

இந்த காலத்தில் தனது குடும்பம் தனது உறவு என்ற வட்டத்தில் வாழும் பலர் மத்தியில் இவருடைய இலக்கிய வாழ்வில் எமது சமூகத்துக்கு பாரிய சேவையை செய்துள்ளார். தனது இலக்கிய படைப்பு மூலம் கிடைக்கும் பணத்தை தன் வாழ்க்கைக்கு செலவு செய்யாமல் சமூகப்பணிக்காக செலவு செய்து வருகின்றார். அதாவது 'பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம்' என்ற அமைப்பு மூலம் பல உதவிகளை இலங்கையில் பல பாகங்களிலும் உள்ள வறிய மாணவர்களுக்கு பல உதவிகளைச் செய்து வருகின்றார். அதுமட்டும் அல்லாது மட்டக்களப்பு விழிப்புலன் அற்றோர் தரிசனம் அமைப்புக்குக் கூட தனது அமைப்பு மூலம் நிதி அன்பளிப்பு செய்துள்ளார்.

எமது சமூகத்துக்கு நடக்கும் அநீதிகளை துணிச்சலுடன் எழுத்து மூலம் உலகறியச் செய்து கொண்டு வருபவர். அவருடைய படைப்புக்கள் இலங்கைப் பத்திரிகைகளில் மட்டுமல்லாது கடல்கடந்த தேசங்களில் உள்ள இலத்திரனியல் ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எழுத்துலகில் பல விருதுகளை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் பெற்றவர். புலம் பெயர்ந்து சுவீஸ் நாட்டில் அடைக்கலம் பெற்றவர். தனது இலட்சியத்துக்காக தான் பிறந்த நாட்டில் இருந்து மக்களுக்கு உதவ வேண்டும் என்னும் உயரிய சிந்தனையுடன் சுவீஸ் நாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரஜா உரிமையை விட்டுப் போட்டு வந்தவர். அவர் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தான் பிறந்ததில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும் என்றும் எமது மக்களுக்கு ஏதாவது முடிந்தளவு உதவ வேண்டும் என்னும் உயரிய சிந்தனை கொண்டவர்.

இப்படியாக நல்ல மனம் படைத்த இலக்கியவாதி எமது திருகோணமலை மண்ணுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம். இந்த நூல் ஆக்கம் செய்வது எமது இளம் தலைமுறை அறியக்கூடிய ஒரு ஆவணமாகும். ஒரு நபர் மண்ணில் இல்லாத போது அவரை பற்றி பல நூல்கள் வெளிவரும். ஆனால் ஒரு மனிதன் இருக்கும் போது அவருடைய சமூகப்பணிகள், இலக்கியம் சார்ந்த பணிகள், வாழ்கை பற்றிய ஆவணத் தொகுப்பு வெளிவருவது இதுவே முதலாவது என்று நினைக்கின்றேன். தேவகடாட்சம் அவர்களின் வாழ்வும் இலக்கிய பணியும் சிறப்புற வாழ்த்துவதோடு எனக்கும் எழுத கிடைத்தமைக்கு நானும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வாழ்க்கையை இலக்கியத்தின் ஊடாக வெளிப்படுத்தியவர்

திரு. ஒப்பிலாமணி குலேந்திரன் (மூதூர்)
ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்
உவர்மலை, திருகோணமலை.

மல்லிகைத்தீவின் மண்வாசனைக்குரிய செந்நெல் விளையும் சீர்பதியாம் மல்லிகைத்தீவு அதன் செல்வச்செழிப்பின் விவசாய விளைநிலங்கள் சூழ்ந்த பிரதேசம். மாவலியாள் அரவணைப்பும் திருமங்களாய் சேர் வரலாற்றுப்பதியும் அகத்தியர் வாழ்ந்து அரும்பணி கொண்ட அகத்தியஸ்தாபனமும் அருகருகாக அமைந்த தொன்மை வரலாற்றுப் படிமங்களைக் கொண்ட பெருமை மிகுந்த ஊர் மல்லிகைத்தீவு ஆகும்.

இப்பதியின் திரு.திருமதி கனகசபை தங்கரெட்ணம் தம்பதிகளின் ஏகப்புதல்வனாக அவதரித்தார். இளமை காலத்தில் கலைதுறைகளில் நாட்டமும் இலக்கிய நோக்குடன் வரலாற்று அம்சங்களை வெளிப்படுத்துவதில் வல்லமை கொண்டிருந்தார் எனலாம். கல்வி கற்கும் காலங்களில் சமூகப்பார்வை கொண்டவராக தான் வாழ்ந்த பிரதேசங்களின் வரலாறுகள் வாழ்வியல் அம்சங்களை புராதன சைவப்பாரம்பரிய நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்து அதனை ஆவணப்படுத்தி ஆங்காங்கே வெளிக்கொண்டு வந்தவர் எனவும் கூறலாம். சைவமும் தமிழும் இவரது இரு கண்கள் போன்று தமிழ் இலக்கிய நோக்கில் சிறுகதைகளில் சைவசமய நாயன்மார்களால் படைக்கப்பட்ட தேவாரம் தொடங்கி திருமுறைப்பாடல்கள் வரை நன்கு கற்றுயர்ந்தவராக அவரது சொல்லாடல்களில் எம்மால் இனங்காணக்கூடியதாக அமைந்திருந்தது.

இந்நோக்கில் கொட்டியாபுரப்பற்று சூழ்ந்த கிராமங்களின் மண் வாசனையை நன்கு அறிந்தவர். இதன் காரணமாக இவரது பேச்சுக்கள், கட்டுரைகள், அமைப்பு சார்ந்த செயற்பாடுகள் தமிழுணர்வுடன் சமய விழுமியங்கள் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை தன் செயற்பாடுகளில் சிறப்பித்துக்காட்டியிருக்கின்றார்.

இவரது தந்தையாரும் எனது தந்தையாரும் ஆசிரியத்தொழிலில் இணைந்திருந்து அதன் ஊடாக அதிபர் தரத்திலும் அன்று (தலைமையாசிரியர்) இணைந்திருந்த நட்பினையும் நெருக்கத்தையும் நான் நன்குணர்வேன். இவர்களது கல்வி சேவையில் அளப்பரிய கடமையுணர்வுடன் ஆற்றிய காலகட்டத்தினையும் இவர்களது சேவைக்காலத்தில் தங்கள் மீது தங்கள் உயர்பீடம் கூட பிழைகளை சுட்டிக் காட்டிட முடியாத மனத்தைரியத்துடன் எதிர் வாதங்கள் புரிந்திட்ட காலகட்டத்தினையும் அவர்கள் புரிந்த சேவைகளில் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது.

திரு.கனக சபை தேவ கடாட்சம் அவர்களது பெற்றோருக்கு செல்லப்பிள்ளையாக வாழ்ந்தவர். இவரது கல்வித் தேவைகளை நன்கறிந்த பெற்றோர் இவரை ஆரம்பத்தில் தி/மல்லிகைத்தீவு அ.த.க பாடசாலையிலும் அதன் பின்னர் தி/ புனித சூசையப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியிலும் அதனைத் தொடர்ந்து கொழும்பு சென்று பொரளை வெஸ்லிக் கல்லூரியிலும் கல்வியை கற்ற செய்திருந்தனர். தனது இளமைக் காலத்தில் சுறுசுறுப்பான செயற்பாட்டுடன் அரசியல் பாதையில் தனத தந்தையாரின் வழியில் ஜனாப்.ஏ.எல்.ஏ.மஜீத் அவர்களின் பேச்சு, சேவை மனப்பாங்கு அரசியல் செயற்பாடுகளால் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார் எனலாம். தொழில் நாட்டங்கொண்டு இலங்கைப் போக்குவரத்து சேவையில் இணைந்ததோடு காலத்தின் தேவை, சேவை மனப்பாங்கினால் கிராமசேவை உத்தியோகத்தர் பதவியினைப் பெற்றுக்கொண்டார். அதன் மூலம் கிராமிய மக்களின் தேவைகளை இனங்கண்டு தன் சேவையை கடமையுணர்வுடன் ஆற்றினார் என்பதனை அறிந்து கொண்டேன்.

இந்நாளில் எனது அரசியல் பின்னணியில் மூதூர் தமிழ் மக்களின் விடிவெள்ளியாக தோற்றம் பெற்ற அண்ணன் தங்கத்துரையின் அரசியல் பாதையில் முன்னின்று உழைத்திருந்தேன். இக்காலம் மூதூர் இளைஞர் யுவதிகள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக இவரது அரசியல் பிரவேசத்தின் பின்பு வேலை வாய்ப்புக்கள் கிராமிய மட்டங்களில் இளைஞர் யுவதிகள் பெரும்பாலானோர் அரச துறையில் பிரவேசித்து பல்வேறு துறைகளுக்கு நியமனம் பெற்றுக்கொண்ட ஓர் பொற்காலம் எனலாம். பல இளைஞர்களை இனங்கண்டு உகந்த அரச பணிகளில் அமர்த்தினார். அந்த வகையில் என்னை ஓர் சமூகத்தின் சேவைக்காக கிராம சேவையாளனாக நியமிக்க தங்கத்துரை எடுத்துக்கொண்ட முயற்சி 1970 - 1976 வரை அவரால் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் அரச பாராளுமன்ற உறுப்பினரின் எதிர்ப்பினால் எனக்கு அது கைகூடாது போய்விட்டது. இறுதியாக 1977 இல் பாராளுமன்றம் கலைக்கப்படும் கால கட்டத்தில் தான் ஆசிரியராக பதவி அமர்த்தப்பட்டேன். இது நாம் கடைப்பிடித்த தீவிர அரசியல் செயற்பாடுகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தமையும், அதுவும் பிற்காலத்தில் எனக்கு நன்மை பயப்பதாக அமைந்திருந்தது. இதனை அண்ணன் தங்கத்துரையே எனக்கு நினைவூட்டியிருந்தார். ஆனால் அன்னாரது அரசியல் பயணத்தில் தொடர முடியாது துர்ப்பாக்கிய நிலையில் அரசியல் பழிவாங்களில் அவர் உயிர் பறிக்கப்பட்டது. மூதூர் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பை இன்றும் எடுத்துரைத்து நிற்கின்றது.

ஜனாப் மஜீத்தின் அரசியல் பயணத்தில் தன்னை இணைத்துக் கொண்ட தேவகடாட்சம் அவர்கள் அண்ணன் தங்கத்துரை மீதும் இறுதிக்கால கட்டங்களில் அதீத பற்றுணர்வு கொண்டிருந்தார் என்பதனையும் நான் நன்கறிவேன். இதே கால கட்டங்களில் அண்ணன் தங்கத்துரை பற்றி சில அவதூறு விடயங்களை "சரிநிகர்" மாதாந்த பத்திரிகையில் சில காழ்ப்புணர்வு கொண்டவர்கள் எழுதிய கட்டுரையை வாசித்த தேவகடாட்சம் அவர்கள் இதனை விட்டுக்கொடுக்காத நிலையில் பொய்யுரைகளை தடுத்து நிறுத்திட என்னுடன் கதைத்து ஓர் மறுப்பறிக்கையை காட்டமாக எழுதி உண்மை நிலையை வெளிப்படுத்தியவர். எமது மண்ணைச் சேர்ந்தவனை புண்படுத்த முனைவதனைத் தன் எழுத்தாற்றலால் தடுத்திட உதவினார். இது பலருக்குச் சாட்டையடியாக அமைந்திருந்தது.

வைத்தியத்துறையில் தன்னை இணைத்துக்கொண்டு சீரியபணியை தூய்மையுடன் ஆற்றிவரும் அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்கள், சமூக நோக்குடன் பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று விடயங்களை ஆய்வு செய்து நூல் வடிவில் ஆக்கங்களாக வெளிப்படுத்தி வருபவர். திரு.தேவகடாட்சம் பற்றிய ஓர் கட்டுரையை விரைவாக தந்துதவ முடியுமா? அதனை மூன்று நான்கு நாட்களில் தரவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். ஆம் எனக்கூறி விட்டேன். ஆதலால் தேவகடாட்சம் பற்றிய விடயங்களை எழுத வேண்டுமென உள்வாங்கிக்கொண்டு உடன் செயல்பட முடியாது இரண்டு நாட்கள் அவரது நிகழ்வுகள் செயற்பாடுகள் சமூகநலன் நோக்குகள் ஆற்றி வரும் பாதைகள் பற்றி என்னுள் ஆய்வில் ஈடுபட்டேன். அதன் காரணமாக எனக்கு தினமும் இருக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரு புறமிருக்க இவற்றின் ஊடாக எழுதுவதற்கு முடிந்ததை எழுத விழைகின்றேன்.

கடந்த காலங்களில் என்னுடன் இவர் தனது வாழ் நாட்களில் செயல்பட்ட விடயங்களை எண்ணிப்பார்க்கின்றேன். இவரது பொது நலப்பணிகளின் சேவைகளை ஒவ்வொன்றாக புரிந்தறிந்து எழுத விழைகின்றேன். குறிப்பாக இவரது தொழில் சமூகத்துடன் இணைந்து கொண்ட செயற்பாடுகளை நிரல்படுத்திப் பார்க்கின்றேன். எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்ல முடியாது. ஆகவே என்னால் இனங்காணப்பட்ட விடயங்களை பதிவு செய்ய விழைகின்றேன்.

கடந்த 1983,1985,1987,1990 ஆண்டுகள், அதன் பின்னர் உள்ள காலப்பகுதிகளில் இவர் தன்னை ஈடுபடுத்தி கொண்ட நிலையை எண்ணிப்பார்க்கின்றேன். இம்மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தங்கள், அதன் காரணமாக கொட்டியாபுரப்பற்றின் தமிழ் பிரதேச மக்கள் அனுபவித்துக்கொண்டிருந்த துன்பவியல் நிகழ்வுகள், பொருளாதார ரீதியிலான பாதிப்புக்கள், மக்கள் சுயமாக சுதந்திரமாக இயங்க முடியாத காலங்களில் இவர் தன் அரசசேவையுடன் பொதுநலத்தொண்டுகளிலும் பக்கபலமாக ஈடுபட்டுக் கொண்டிருந்ததனை நான் ஆராய்ந்து கொண்டேன். நான் மூதூரிலிருந்து ஆசிரியர் கலாசாலை அதனைத் தொடர்ந்து ஊரினை விட்டு ஆசிரிய சேவை இடமாற்றத்தினால் வேறுபட்ட நிலையில், எம்முடன் இணைந்து செயற்பட்ட இளைஞர்கள் கூட்டம் மூதூர் இந்து இளைஞர் மன்றத்துடன் இணைந்து சமய பொது நோக்கில் சமூகப்பணிகளைத் தொடர்ந்தனர். பின்னர் தம்பி எனக்கூறுவதில் உறவு முறையில் மகனான திரு.வசந்தன் ஆசிரியர் பொல்லாத காலகட்டத்தில் இந்து இளைஞர் மன்றத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மக்கள் சேவகனாக சமூகசேவைகள் ஆற்றிய காலங்களில் திரு.தேவகடாட்சமும் மூதூர் வந்து, வசந்தனுடன் இணைந்து 1986, 1987 ஆம் ஆண்டுகளில் பொதுச்சேவைகளில் ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

இக்காலக்கட்டங்களை மறைக்க முடியாது மறுக்கவும் முடியாது. இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "காலக்கீறல்கள்" மூலம் மக்கள் அடைந்த துன்பங்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இச்சிறுகதை நூலின் விற்பனைப் பணத்தை பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டிற்காக பயன்படுத்தியிருந்தார். இதனைத்தொடர்ந்து 1998 ஆம் ஆண்டில் "குமுறல்கள்" சிறுகதை தொகுதியினையும் இரண்டாவதாக வெளியீடு செய்திருந்தார். இக்காலத்தில் இத்தொகுதியின் வெளியீட்டுடன் நான் இவரது பணிகளில் ஒத்துழைத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டு நிதியத்தில் இணைந்து கொண்டேன். இதன் மூலம் உரிய மாணவர்களின் கல்வியின் வளர்ச்சிக்கு உதவலானார். இக் குமுறல்கள் மூலம் வந்து சேர்ந்த நிதி இந்நிதியத்தில் வைப்பிடப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2000 ஆண்டில் இவரது மூன்றாவது சிறுகதை தொகுதி "குருதிமண்" இதனை எழுதியவர் தமிழ் நாட்டில் வெளியீடு செய்திருந்தார். இவரது உறவினர் என் நண்பர் திரு.கந்தையா நடேசபிள்ளை அவர்கள் பங்களிப்பால் தமிழ்நாட்டில் வெளியீடு செய்து அதன் நிதியும் நிதியத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. இந்நேரம் நானும் தமிழ் நாட்டில் இருந்தேன். எனினும் வெளியீடு செய்யும் போது நாடு திரும்பி விட்டேன். இவ்வாறு தன்னால் எழுதிய மூன்று நூல்களையும் வெளியீடு செய்து அந்நிதியை எமது மண்ணின் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நல்லுள்ளம் நல்லெண்ணங்கள் யாருக்கு வரும். அத்தகைப் பெருந்தன்மையுடன் தன்னை இணைத்துக்கொண்டவர். தமது நிதியத்தில் பல சேவையாளர்களை இணைத்துக் கொண்டார். அந்த வகையில் திரு.தயானந்தகுரு (அதிபர்), திரு.முரளி (சுகாதார உத்தியோகத்தர்), திரு. ஸ்ரீதரன் (ஆசிரியர்), அமரர். ந.ரவிசங்கர் (மருத்துவப் பீடம்), திரு.கணேசலிங்கம் (ஆசிரிய ஆலோசகர்), திரு.சற்குணசிங்கம் ஆகியோருடன் நானும் இணைந்து இவரது செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக இருந்தோம்.

இவரது செயற்பாடுகள் மாணவர்களுக்காக பல்வேறு முன்வைப்புக்கள் செயற்றிட்டங்கள், செயலமர்வுகள், கௌரவிப்புக்கள், மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வுகள், அடிப்படைத் தேவைகளை வழங்கல், கல்விசார் நடவடிக்கைகள், வழிகாட்டிப் பரீட்சைகள், வினா-விடைக்கொத்துக்கள் இவை அனைத்தும் திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து கல்விக் கோட்டங்களுக்கும், வலயக்கல்வி அலுவலகங்களின் அனுமதியுடன் வழங்கப்பட்டன என்பதனை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வேளையில் சில முக்கிய நிகழ்வுச் செயற்பாடுகளினை வெளிப்படுத்துவது முக்கியமானது எனக்கருதுகின்றேன். 1993 ஆம் ஆண்டின் யுத்த நெருக்கடிகளுக்குள் சிக்கித் தவித்திட்ட மக்களின் நிவாரணப்பணிகளையும் பாதிக்கப்பட்ட மாணவர் நிதியத்தின் மூலம் ஈச்சலம்பற்று கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசப் பாடசாலைகளான ஸ்ரீ சண்பகா தமிழ் மகா வித்தியாலயம், மாவடிச்சேனை அரசினர் கலவன் பாடசாலை, இலங்கைத்துறைமுகம் இந்து மகா வித்தியாலயம், வெருகல் முகத்துவாரம் தமிழ் மகா வித்தியாலயம், மலைநீலியம்மன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தரம் 5 மாணவர்களுக்கான துரித மீட்டல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் மூலம் வகுப்புக்களை நடாத்துவதற்காக கனகசபை தேவகடாட்சமும் நானும் ஆசிரிய ஆலோசகர்களான கணேசலிங்கம், தயாளலிங்கம், சுகாதார உத்தியோகத்தர் ஆகியோர் திருமலையிலிருந்து கிளிவெட்டி வரை பேரூந்து மூலம் பயணம் செய்து அங்கிருந்து கால்நடையாக பூநகர் வரை சென்று அங்கிருந்து ஈருருளி வண்டி மூலம் ஈச்சலம்பற்று சென்று அங்கிருந்து உரிய பாடசாலைகளுக்கு சென்று நான்கு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். அலிஒலுவ சந்தியில் இராணுவ முகாமின் தடைமுகாம்களில் எங்களை பதிவு செய்தே பிரயாணங்களை மேற்கொண்டிருந்தோம்.

இதே போன்று இக்காலப்பகுதியில் கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், அல்லை இடதுகரை அ.த.க.பாடசாலை, மேன்காமம் அ.த.க.பாடசாலை தரம் 5 மாணவர்களுக்கான துரித மீட்டல் பயிற்சி வகுப்பு நடாத்துவதற்கு திரு.தேவகடாட்சமும், திரு.க.தயானந்தகுரு அதிபரும் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்றனர். பாலம்போட்டாறு பகுதியில் பன்றி குறுக்கறுத்து வீதியில் விபத்தை சந்தித்தனர். அதனால் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நேரத்தில் தமது கல்விப்பணி தடைப்படாதிருப்பதற்காக மறுநாள் நானும் திரு.கணேசலிங்கமும் உரிய வகுப்புக்களை நடாத்துவதற்கு அல்லைக்கந்தளாய் வீதியூடாக அதிகாலை 5 மணிக்கு புறப்பட்டுச் சென்று உரிய பாடசாலைகளில் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி வினாத்தாள்கள் வழங்கி தயார்படுத்தல் நடவடிக்கைகளை முடித்துத் திரும்பினோம். இதனை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், தான் திட்டமிட்ட வேலையை உரிய காலத்தில் நடாத்துவதற்கு தனத சுகயீனமான நிலையிலும் வேலை தடைப்படாதிருக்க உரிய நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இங்கு அவரது பொதுநல நோக்கில் கல்விச்சேவை வழங்கலை கஸ்டமான காலச்சூழலில் நடாத்தியவர் திரு.தேவகடாட்சம் ஆவார். இவ்வாறே தம்பலகாமம், குச்சவெளி, மொறவெவ பிரதேச பாடசாலைகளில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் நோக்கிய கல்விப்பணிகளை தேவகடாட்சமுடன் மேற்குறிப்பிட்ட எமது நிதியத்தின் உறுப்பினர்களும் நடாத்தியமை பாராட்டிற்குரியது.

திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கு மட்டும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வி சேவையை மட்டுப்படுத்தாது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டது. விடுதலை புலிகள் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளான புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு பிரதேசங்களுக்கு அந்நாளில் வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் அப்பகுதிகளுக்கு செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டு அவரிடமே வாகன உதவியும் அதற்கான சாரதியையும் பெற்றோம். உரிய வளவாளர்களும், திரு.கணேசலிங்கம் ஆசிரிய ஆலோசகர்களும் நானும் தேவகடாட்சமும் கல்வி நடவடிக்கைகளுக்கான சகல ஆவணங்கள், கேள்வி விடை பத்திரங்களுடன் தரம் 5 மாணவர்களுக்கான முன்னோடி வகுப்புக்களை நடாத்துவதற்காக சகல நடவடிக்கைகளையும் திரு.தேவகடாட்சம் அவர்கள் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் நிதியின் மூலம் செயற்படுத்திய கல்விச் சிந்தனையாளராவார். இதே போன்று தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் தரவுகளையும் தகவல்களையும் பெற்றுக்கொண்டு அவற்றில் கிராமப்புறப் பாடசாலையின் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கான மிதிவண்டிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அதே போன்று இம்மாணவர்களின் மேற்படிப்பிற்காக ரூபா 5000.00 வங்கிகளில் கணக்கு திறந்து சேமிப்புப்பத்திரம் வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமல்லாது இவரது சீரியபணிகள் சிறப்பு செயற்பாடுகளால் புலம்பெயர் சமூகத்தின் உதவிகள் வந்து சேர்ந்தன என்பதனையும் இங்கு நினைவு படுத்திட விரும்புகின்றேன். இப்பணிக்கு இலண்டன் நகரத்திலிருந்து திரு.பத்மநாதன் (ஐயனார்கேணியில் வாழ்ந்தவர்) அவரது கல்விப்பணிக்கான நிதிப்பங்களிப்பு செயற்பாடுகள் போற்றுவதற்குரியது. இவ்வாறு தாராள மனப்பாங்குடன் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள், அங்கு வாழ் தமிழ் மக்கள், அவர்களது பிள்ளைகளின் கல்விப்பாதிப்பும் வறுமையின் கோரத்தாண்டவமும் திரு.தேவகடாட்சத்தின் மக்களுடனான அரசசேவையில் வகித்த பதவியும் தான் வாழ்ந்த மண்ணில் நேரடியாகக் கண்டு பெற்ற அனுபவங்கள் மூலம் மக்கள் சேவையில் தன்னை முன்னிலைப்படுத்தி செயற்பட்டு வந்தார்கள். அத்தகைய நற்பணியில் ஈடுபட்டதன் காரணமாகவே நானும் அவருக்காக சேவையில் என்னை ஈடுபடுத்திக்கொண்டேன்.

இறுதியில் திரு.தேவகடாட்சம் அவர்கள் தொழில் ரீதியாக ஒருவருக்கு தெரிந்தோ தெரியாமலோ செய்த உதவியின் நிமித்தம் இவர் நாட்டை விட்டு இந்தியா சென்று புலம்பெயர் நாடான சுவிஸ் சென்றடைந்தார். போவதற்கு முன்னர் ஜனாப்.நஜீப் அப்துல் மஜீத் அவர்களது புனர்வாழ்வு, புனரமைப்பு (திருக்கோணமலை) அமைச்சில் அமைச்சரின் இணைப்பு உத்தியோகத்தராக கொழும்பில் கடமை புரிந்த நிலையிலே அமைச்சரின் உதவியுடன் வெளிநாடு சென்றார் எனலாம். அவரவர் செய்கின்ற உதவிகள் அவரவரைச் சார்ந்தது என்று கூறலாம்.

இவ்வேளையில் என்னுடன் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் பொறுப்புக்களை எடுத்து அப்பணியை செய்துதவுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க அவரது மனைவியிடமிருந்த நிதியத்தின் செயற்பாடுகள் உள்ளடங்கிய காகிதாதிகள் தகவல்களையும் நிதி விடயமாக என்னிடம் ஒப்படைக்கப்பட்ட கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட நிதியையும், சிலரிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதியையும் அவரது மனைவியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். அந்நிதி விடயங்களை அவரோடு வெளியிலிருந்து கதைத்ததன் பிரகாரமும் தனி ஒருவனாக நிதியத்தை செயற்படுத்தாது என்னுடன் திரு.க.தயானந்தகுரு, திரு.கணேசலிங்கம் அவர்களை இணைத்துக்கொண்டு தரப்பட்ட நிதித் தொகையை மூவருமாக வங்கியொன்றில் வைப்பிலிட்டு நிதியத்தினை நெறிப்படுத்தி செயற்படுத்தினோம். தேவகடாட்சம் அவர்கள் தரப்பட்ட நிதியை "நீங்கள் கல்விக்கான எம் பணியை திட்டமிட்டு செயற்றிட்டமாக தொடர்ந்திட வேண்டும்" என்ற ஆலோசனையையும் வழங்கியிருந்தார்.

நாம் மூவரும் கூடிக்கதைத்து வைப்பிலிடப்பட்ட பணத்தின் வட்டியை மட்டும் வங்கியில் பெற்று செலவுகள் செய்வோம் என்ற அடிப்படையில் அவர் இருக்கும்போது செயற்பட்டதன் பிரகாரம் தரம் 5 இற்கான செயலமர்வுகள், பயிற்சி வினா விடை கொத்துக்களை பிரதிகள் செய்து இனங்காணப்பட்ட பாதிக்கப்பட்ட பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்க நிதியச்செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திக் கொள்வோம். தரம் 5 புலமைப் பரீட்சை முன்னாயத்தங்களை திரு.கணேசலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்து நாமிருவரும் உதவியாளர்களாக இருந்து செயற்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக மாணவர்களின் பெறுபேற்று வீதம் அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாடு வளர்ந்து கொண்டு செல்வதற்குமான பணிகள் எம்மால் எடுக்கப்பட்டன.

எமது செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடல்களை அன்னாருடன் தொலைபேசியூடாக உரையாடிக்கொண்டோம். இவ்வாறு எங்கள் நிதியத்தின் கல்விப்பணி மாணவர்களது வளர்ச்சிக்கு உறுதுணையாகிக் கொண்டு சென்றது எனலாம். மாணவர்களின் பெறுபேற்றின் தரத்தினை அடிப்படையாக கொண்டு பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்காக பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் வலயக்கல்வி அலுவலகம், கல்விப் பணிப்பாளர்கள், ஏனைய பிரதி, உதவி கல்விப்பணிப்பாளர்களின் அனுசரணைகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்று எங்கள் கடமைகள் வளர்ந்து கொண்டிருந்தன.

இதன் அடிப்படையில் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல், வங்கி சேமிப்புப்புத்தகங்களில் பணம் வைப்பிட்டு ஊக்கப் பணிகளையும் வருடந்தோறும் செயற்படுத்தி வந்தோம். இறுதியாக தாய் நாடு திரும்பும் எண்ணம் அவரிடமிருந்த காரணத்தினால் அவர் இலங்கை வந்ததும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நிதியை விட வட்டி மூலம் அதிகரித்த பணம் மொத்தமாக நாம் மூவரும் மீளப்பெற்று கணக்கு முடிக்கப்பட்டு, அவரால் தரப்பட்ட பணிகள் மீளவும் அவரிடம் பணத்துடன் கையளிக்கப்பட்டன.

அவர், எம்மை முற்றுமுழுதாக தன்னால் தரப்பட்ட பணத்தை “கல்விச் சேவைக்காக செலவு செய்யுங்கள். மேலும் பணம் தேவையாயின் நான் அங்கிருந்து உதவி செய்கின்றேன்” என்பதனை நாம் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளாது அவர் வரும் போது தரப்பட்ட தொகையை அதிகரித்த நிலையில் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒருங்கிணைந்து முடிந்த முடிவாக நாம் கொண்டிருந்தோம். அவ்வாறே நாம் எங்கள் பணிகளை முடிவுறுத்தி அவர் கரங்களுக்கு மீளவும் ஒப்படைத்து அவர் இயங்கிக்கொண்டிருப்பதற்கு பூரண பங்களிப்புக்களை அவ்வப்போது வழங்கி வருகின்றோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஒரு வளவாளர்

**திரு. எஸ்.ஆர். தனபாலசிங்கம் (ஆசிரியர் - நீங்களும் எழுதலாம்)**

**திருகோணமலை.**

ஈழத்து சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராக திரு. கனகசபை தேவகடாட்சம்அவர்களை அறிந்திருந்த எனக்கு 2016 ஆம் ஆண்டளவிலேயே நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தொழில் நிமித்தம் திருகோணமலைக்கு வந்திருந்த எனக்கு 2003 காலப்பகுதியில் அவர் இங்கிருக்கவில்லை. அக்காலப்பகுதியில் எழுத்தாளர் நந்தினி சேவியர், கவிஞர் தம்பி தில்லைமுகிலன் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினரின் கலந்துரையாடல்களில் இவரது பெயரும் காதில் விழக்கேட்டிருக்கின்றேன்.

2007 இல் "நீங்களும் எழுதலாம்" கவிதைச் சிற்றிதழை ஆரம்பித்ததனைத் தொடர்ந்து உருவான நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் மாதாந்த பௌர்ணமி தின நிகழ்வுகளை நடாத்திக்கொண்டிருந்தது. 2016 என நினைக்கின்றேன், ஒரு வாசகர் வட்ட நிகழ்வில் அவருடனான சந்திப்புடன் எனக்கும் அவருக்கும் இடையிலான தொடர்பு தொடர்ந்தது. தனக்கு இலக்கிய ரீதியாகக் கிடைக்கும் அந்தஸ்து, கௌரவம் என்பன சமூகத்திற்கானது எனும் கொள்கையினர். "வித்தகர் விருது" கிடைத்த போது தன் நண்பர்களாகிய எம்மையெல்லாம் வீட்டிற்கு அழைத்து விருந்தோம்பியமை அதற்குச் சான்று. எல்லாவற்றுக்கும் மேலாக நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஒரு வளவாளராக விளங்கினார் எனலாம்.

2017 இல் செல்வி ந.நவஜீவனா நிர்வாகசேவை பாராட்டு நிகழ்வில் "ஆதலினால் தமிழ்மேல் காதல் கொள்வீர்" கவியரங்கக் கவிதை நூலினை திறனாய்வு செய்தமை, 2018 இல் கவிஞர் தில்லை முகிலன் நினைவுரையாற்றியமை, 2019 இல் ஊடகவியலாளர் சி.குருநாதன் அவர்களின் இரண்டாவது நினைவேந்தல் நிகழ்வில் "ஊடகங்கள் ஆற்றவேண்டிய பணிகள்" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றியமை என்பன குறிப்பிடத்தக்கன. 2021 இல் அமரர்களான கனக மகேந்திரா, வசந்தி ஜெராஜ் நினைவு நிகழ்வில் "நான் சாவுக்குப் பயப்படவில்லை. ஏனெனில் தனபாலசிங்கம் கொஞ்சப்பேரைக் கூட்டியாவது ஒரு அஞ்சலிக் கூட்டத்தை நடாத்துவார்." எனக் கூறியது என்மனதில் ஆழப்பதிந்த விடயம். அவரது வீட்டிற்குச் செல்லும் வேளைகளிலும் சரி, வேறு நிகழ்வுகளில் சந்திக்கும் போதும் சரி கலை, இலக்கியம், சமூகம், அரசியல், ஊர்நடப்புகள் எனப் பல்வேறு விடயங்களை விலாவாரியாகக் கூறும் திறனுடையவர்.

தனது முதலாவது சிறுகதைத் தொகுதி வெளியீட்டினை நடத்திய விதத்தினையும், கிடைத்த நிதியைக் கொண்டு ஏழைப்பிள்ளைகளுக்கான நிதியத்தினை அமைத்த முறையினையும் அடிக்கடி கூறுவார். இவ்வாறு தனது கிராமசேவகர் பதவியை சமூகநல நோக்கோடு ஆற்றியமையையும் கூறுவார்.

இன்றுவரை தனது மூதூர் பிரதேசத்தில் பின்தங்கிய இடங்களுக்குச் சென்று தன்னாலான உதவியினை செய்துவருவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர். தானுண்டு தன் வாழ்வுண்டு என்ற மனப்பாங்குடன் வாழ்வோருக்கு மத்தியில் வித்தியாசமானவராக சமூக உணர்வோடு தன்னாலானதைச் செய்து கொண்டிருப்பவர் கனகசபை தேவகடாட்சம் என்பது என் எண்ணம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானுணர்ட....

திரு. வ. முரளிதரன்
திருகோணமலை.

மூதூரில் பிறந்த பல தலைமுறைகளின் பெருமளவு காலத்தை அந்த இரண்டு இறங்குதுறைகளும் தின்று செரித்து நிற்பதை 2009 களுக்குப்பின்னான தலைமுறையினர் அறிந்திருந்தபோதிலும் உணர்ந்திருக்கவில்லை. இந்த இரண்டு துறைகளுக்கிடையிலும் தமது இன்றியமையாத் தேவைகளுக்காக படகுப்பயணம் செய்த பல தலைமுறைகளின் உணர்வுகளோடு அவையும் மறக்கமுடியாத கதைகளாய் கலந்து கிடக்கிறது.

இங்கேயே அந்தக் காத்திருப்புக் கணங்களில் கண்கள் கலந்து காதல் அரும்பி அலர்ந்திருக்கிறது. கல்யாணப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன ஆரம்பித்த பேச்சுக்கள் கல்யாணத்தில் முற்றுப்பெற்றிருக்கின்றன. படகு கவிழ்ந்து மனிதர் மாண்டுபோனதும் படகுக்காய் காத்திருந்தோர் கைதானதும் பின்னர் காணமல் போனதும் இங்கேயேதான் நடந்தது. இம்மக்களின் வாழ்வின் பக்கங்களில் அழிக்கமுடியாத உணர்வு வண்ணங்களை துறைமுகம் தம் தூரிகையினால் பூசிவைத்துள்ளது. அதன் ஒரு பக்கத்தில் பூசப்பட்ட கறுப்பு வண்ணமே பிற்காலத்தில் ஒரு நல் இலக்கியக்காரனை நமக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

மனிதர்களின் வாழ்வில் எதிர்பாராமல் நடந்தேறிவிடுகின்ற சம்பவங்கள் அவர்களின் வாழ்க்கையை மற்றொரு பாரிமாணத்திற்கு இட்டுச்சென்றிருப்பதற்கான சாட்சியங்களை நாம் வரலாறு முழுவதும் பார்த்திருக்கின்றோம். அன்றைய தினம் தொண்ணூறுகளின் பிற்பகுதியில் ஒரு காலை வேளை மூதூர் செல்வதற்காக கிழக்கிலங்கையின் எழுத்தாழுமையொன்றும் படகுக்காகக் காத்திருக்கிறது. அதே படகுக்காக கடாட்சமும் காத்திருக்கிறார். படகுக்கு பாகுபாடு தெரியாது கரையை அடைந்தாலும் இடையே கவிழ்ந்தாலும் எல்லோருக்கும் ஒன்றுதான் எல்லாமும் அதற்கு ஒன்றுதான்.

கடாட்சம் அவர்களின் முதல் ஆக்கமான "திருஞான சம்பந்தர் வீதியில் திருமுருகன் தரிசனம்" எனும் கட்டுரையே முதன் முதலில் குடமுழுக்கு மலரில் அச்சேறியபோதிலும், முதல் சிறுகதை "மதில்மேல்.." தினமுரசில் 1995 இல் வெளிவந்ததைத்தொடர்ந்து தம் முதல்படைப்பு தேசியப் பத்திரிகையொன்றில் அச்சேறுகின்றபோது எல்லா எழுத்தாளர்கட்கும் ஏற்படுகின்ற, வார்த்தைகளால் விபரிக்கமுடியாத அந்த உணர்வுக்கலவைகளின் அடியாழத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த காலம். நண்பர்களினதும் குடும்பத்தாரினதும் பாராட்டும் உந்துதலும் அந்த ஆண்டிலேயே (1996) அவரது முதல் சிறுகதைத்தொகுதியான காலக்கீறல்கள் வெளிவரக் காரணமாய் அமைந்துவிட்டது.

மூத்த எழுத்தாளரை கண்ட கடாட்சத்திற்கு தமது மண்ணின் முதுபெரும் எழுத்தாளனைக் கண்ட மகிழ்ச்சி ஒருபக்கம், மறுபக்கம் தமது எழுத்துக்கள் சார்ந்த அவரது கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கவேண்டுமென்ற ஆவல் ஒருபக்கம். தம் மண்ணிலிருந்தே வெளிக்கிளம்பும் இம்முளைக்கு ஆவியுயிர்த்து நீரும் இலையுதிர்த்து உரமும் தரும் பெருமரமாய் ஐயா தெரிய அவரிடம் சென்று "ஐயா" என்றார்.

"நீயெல்லாம் ஒரு மனிசனெண்டு பென்(பேனா) பிடிக்க வெளிகிட்டுத்தா என?" என்கின்ற வார்த்தைகள் தீச்சரமாய் இறங்க மனப்புண்கள் காலக்கீறல்களாய் தகிக்க "மதில்மேல்" இருந்தது தீர்க்கமான பக்கமாய் இறங்கி கால்கள் பரப்பி நேராய் நின்றது.

2000 ஆம் அண்டில் அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப்போட்டியில் முதுபெரும் ஐயாவும் கதையெழுதினார் மனிசனெண்டு பென்(பேனா) பிடிக்க வெளிக்கிட்டவரும் கதையெழுதினார். ஒரு மனிசனெண்டு பென்(பேனா) பிடிக்க வெளிக்கிட்டவர் இரண்டாம் இடம். அக்காலத்தில் நீங்களும் எழுதலாம் என்று சொல்வோர் யாரும் இருக்கவில்லை. எழுத்தும் இலக்கியமும் பல்கலைக் கழகங்களிற்குள்ளும் பேராசிரியர்களிடத்தும் சிறைப்பட்டுப்போயிருந்த காலத்தில் கடாட்சம் தனது எழுதுகோலை குனிய வைத்தவர். இலக்கியத்துக்கும் சாதாரணனுக்கும் பாலமிடப்பாடுபட்ட அத்தனை அனுமார்களோடும் அணிலாய்ப் புரண்டவர்.

எழுத்தாளனாய் ஆகவேண்டும் என்கின்ற எண்ணத்தின்பால் அதன் புகழ்போதையின் மீதான ஈர்ப்பினால் எழுத்தாளரானோரைப் பார்க்கிலும் வாழ்வின் வலிகளால், வலியோனின் ஒடுக்குமுறைகளினால், வார்த்தைகளையும் கருத்துக்களையும் கட்டிப்போட்ட வன்மங்களால் எழுத்தாளனானவனின் எழுத்துக்களை, படைப்புக்களை காலம் காத்து வந்திருக்கிறது. நமது மண்ணின் படைப்பாளிகள் அநேகர் அவ்வாறான வலிகளிலிருந்தே முளைகொண்டவர்கள். தனது திருமண நான்காம் நாட்சடங்கு நிகழ்வுக்காக தன் துணைவியுடன் நீராடிக்கொண்டிருந்த மணமகனை கருஞ்சப்பாத்துக்கால்கள் கசக்கி கழிவுநீரில் தூக்கி வீசிச்சென்றபோது, அச்சேற்றிலிருந்து எழுந்துவரும் நிராயுதபாணி தரித்துக்கொண்ட ஆயுதம்தான் எழுத்து. தன்மானத்தை தொட்டுப்பார்த்த அடக்குமுறையாளனை எரித்துப்போட விரல்களில் வைத்துக்கொண்ட தீ தான் மதில்மேல் (..இலக்கியம்)

திருக்குறளையும் எம்.ஜி.இராமச்சந்திரனையும் பெரிதும் நேசிக்கின்ற தேவகடாட்சம் "நான் பெரிய எழுத்தாளனோ, அதிகம் படித்த பட்டதாரியோ அல்ல. நல்ல வாசிப்புப் பழக்கம் இருந்தாலும் நான் அதிகம் கற்றுக்கொண்டது இந்த சமூகத்திடமிருந்துதான். எனவே நான் பெற்றுக்கொண்டதை இந்த சமூகத்திற்கு திருப்பிக்கொடுப்பது எனது கடப்பாடாகும்" என்பார். அவ்வாறாயின் பெற்றதைக் கொடுத்தாரா என்ற வினா எழுவது எவ்வகையிலும் தவிர்க்கமுடியாததாகிறது.

அவரது முதல் சிறுகதைத்தொகுதியான "காலக்கீறல்கள்" (1996) விற்ற பணம் அத்தனையையும் மட்டக்களப்பு கல்லடியிலமைந்துள்ள தரிசனம் விழிப்புலனற்றோர் இல்லத்திற்கு நன்கொடையாக வழங்கியிருந்தார். அவரது இரண்டாவது சிறுகதைத்தொகுதியான குமுறல்கள் (1998) மற்றும் அதைத்தொடர்ந்து இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் வெளியான குருதிமண் (2000) என்பவற்றினூடாக கிடைத்த பணத்தினை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியமாக தாபித்து இன்றுவரை பாதிக்கப்பட்ட, கல்வியுதவி தேவைப்படுகின்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவியளிக்கும் நிறுவனமாக இயங்கிவருவதைக்காணலாம்.

புகழ் வெளிச்சத்திற்குத் தலைநீட்டி வளர்ந்து நிற்கும் மலைநாட்டுக் கமுகும் ஒளவையின் மூதுரைத் தெங்கும் காலக் கணக்குப்பிள்ளையின் கணக்குப்புத்தகத்தில் தவறாது பதியப்பட்டுவிடும் என்பதற்கு நாம் கடந்துவந்த பாதையெங்கும் சாட்சிகளைப் பார்க்கலாம். தனிமனித பலவீனங்களால் விளையும் தவறுகளை முகத்துக்குநேரே தாட்சண்ணியமின்றி விமர்சிக்கும் ஒருவனாக முதுகுக்குப்பின்னே திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்களின் நற்பண்புகளைப்பேசும் அத்தனை தகுதியுமுடையவனாக..

மதில்மேல் தொடங்கியது இமயத்திலும் ஏறட்டும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமை கொண்ட தேவா

ஜனாப் எம்.எஸ்.அமானுல்லா
மூதூர், திருகோணமலை.

மல்லிகைத்தீவுப் பிரதேசத்தை நான் என்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

அதன் இலக்கியச்சுவை கொண்ட பெயர், நடுவீதிக்கூடாக நடந்து செல்லும்போது செந்நெல் கதிர்கள் தலையாட்டி வரவேற்று சாமரம் வீசிக்கொண்டிருப்பது. எழிலும் அழகும். வசீகரம் கொண்ட நிலப்பிராந்தியமாக மனதை ஒழுங்குபடுத்தும் மண்வாசனை கொண்ட புராதனப் பூமி அது. LB5அல்லை குடியேற்றத்திட்டம் அமுல்படுத்தப்பட்ட போது 1954 இல் எங்களுக்கும் காணி கிடைத்தது. வயல் காணி 03 ஏக்கர், ஒரு வீடு, 1 ஏக்கர் மேட்டுக்காணியும் கிடைத்தன. இதனால் மல்லிகைத்தீவோடு நிலத்தொடுகை ஏற்பட்டு மக்கள் நெருக்கமானார்கள்.

எங்கள் தந்தையார் விவசாயம் செய்தார். ஒற்றை மாட்டு வண்டியின் உதவியுடன் சிறிய அளவில் நெல் வியாபாரமும் செய்து வந்தார். இதனால் அவருக்கு நிறைய நண்பர்கள் கிடைத்தார்கள். எனக்கும் என் வயது நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களின் அந்நியோன்னியம் எனக்கு கிடைத்த பெரும்பாக்கியமாகும். மல்லிகைத்தீவு மண்ணும் மக்களும் என்னை வெகுவாகக் கவர்ந்தார்கள், அவர்களின் எளிமையான வாழ்க்கை முறை - வஞ்சகமற்ற சினேகிதம் பிறருக்கு தாராளமாக உதவும் மனப்பாங்கு - விருந்தோம்பல் குணம் - இவற்றால் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் அவர்களை நிறையவே பிடித்துப்போனது.

எனது இளவயது நண்பர்கள் இப்போதும் என்னைக் கண்டால் புன்னகைத்து செல்வார்கள். இதைவிட அவர்களுடனான நெருக்கம் 1982 இல் ஆண்டளவில் அதிகரித்தது. அப்போது இருந்த சூழலில் மூதூர் மத்திய கல்லூரியில் உயர்தர பாடங்கள் சிறப்பாக கற்பிக்கப்பட்டு வந்தன. இதனால் அண்மித்த பல கிராமங்களில் இருந்து பல மாணவ மாணவிகள் உயர்கல்வி பெற இங்கு வரத்தொடங்கினர். மூதூர் மத்திய கல்லூரியில் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மூதூர் CTB யில் இருந்து பருவகால போக்குவத்துச் சீட்டுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வந்தன. இதனால் வெளியூர் மாணவர்களுடனான எனது நெருக்கம் அதிகரித்தது. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் சிறப்பாக கல்வி கற்று பல்கலைக்கழக கல்வியையும் பெற்று (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) நல்ல பதவிகளில் அமர்ந்து இருப்பதை காணும்போது எனது மனம் புளகாங்கிதம் அடைகின்றது. அவர்களுள் போக்குவரத்து வசதிகள் குறைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்த பலரை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகளை வழங்கும் பாக்கியம் எனது சக ஆசிரியர்களுக்கும் எனக்கும் கிடைத்தது. அவர்களிற் பலர் இன்றும் நல்ல முறையில் இருப்பதை அவதானிக்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது. நான் மூதூர் MCC, பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் கல்வியை பூரணம் செய்து ஆசிரியராக கடமை ஏற்றுக்கொண்ட போது தான் எனக்கு கனகசபை தேவகடாட்சம் அவர்களை சந்திக்க கிடைத்தது. மல்லிகைத்தீவு மகா வித்தியாலயம், திருகோணமலை பெருந்தெரு விக்கினேஸ்வரா, திருமலை புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவற்றில் கல்வியை முடித்து மூதூர் CTBயில் தேவா அவர்கள் சேவைக்கு அமர்ந்தார். மாணவர்களுக்கான பருவகால சீட்டு பெறச்சென்ற போதுதான் அவருடன் எனக்கு நெருக்கம் கிடைத்தது. அவர் ஒரு நல்ல நண்பர், நல்ல தமிழ் உச்சரிப்பாளர், முன்னால் நிற்பவரை மதித்து, முகமன் கூறி அவர் நம்முடன் உரையாடும் போது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியும் ஏற்படும். நமது தேவைகளை விரைந்து முடித்து தருவதில் அதிக ஆர்வம் காட்டுவார். அப்புறம் அவரை நான் பல இடங்களிலும் பல கூட்டங்களிலும் சந்தித்து உரையாடி இருக்கிறேன். நல்ல பேச்சாளர். தான் சொல்ல வந்த கருத்துக்களை தெளிவாகக் கூறி முடிப்பார். இலக்கிய அறிவும் மொழியாட்சியும் அவரது சிறப்பம்சமாகும். இவற்றால் எனக்கு அவரை மிகப்பிடித்துப்போனது.

கடந்த சில வருடங்களாக நமது பிரதேசத்தில் நிலவி வந்த நிலமைகளை நாம் நன்றாக அறிந்து இருக்கின்றோம். வறுமை, கல்வி, தொழிலின்மை, வாழ்வாதாரங்கள், தொடர்பாடல்கள் என்பன தொடர்பாக நாம் பாதிக்கப்பட்டு இருந்தோம். வறுமை அதிகரித்துக்கொண்டே இருந்தது. கல்வியை பூரணமாக பெற்றுக்கொள்வதில் மாணவர்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்தார்கள். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு பல தொண்டு நிறுவனங்கள், தனி மனிதர்கள் மிகுந்த கவனம் செலுத்தி உழைத்து வந்தார்கள். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தொடர்புபட்டன. நானும் பொறுப்பான பணிகளில் ஈடுபட்டேன். இந்த வகையில் சகோதரர் தேவாவுடன் அறிமுகமும் சீரான தொடர்புகளும் கிடைத்தன. அவருடைய புத்தக வெளியீடு ஒன்றுக்கு சென்றகாலை ஒரு வித்தியாசத்தைக் கண்டேன். சிறுகதைத்தொகுதி அது. மண்டபத்திலேயே பிரதிகள் விற்பனை ஆகிக்கொண்டு இருந்தது. திரு.க.தேவகடாட்சம் அவர்களால் எழுதப்பட்ட சிறுகதைத்தொகுதி அது. அவர் தனது சொந்தச் செலவிலேயே அச்சிட்டு வெளியீட்டு இருந்தார்.

சமூகம் தந்திருந்தவர்கள் நூலை மிகுந்த விருப்பத்துடன் பெற்றுச்சென்றனர். முதல் வீச்சிலேயே புத்தகங்கள் அனைத்தும் விற்றுத்தீர்த்து விட்டன. ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேல் நிதி சேர்ந்தது. அவ்வளவு நிதியையும் தேவா அவர்கள் வறிய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக சபையிலேயே வழங்கிச் சென்றார். அவர் செய்ததை நான் பார்த்து வியந்து நின்றேன். அதன் பின்னர் நான் அவர் மீது கொண்டிருந்த நல்லெண்ணம் வெகுவாக உயர்ந்து சென்றது. இவ்வாறான செயற்பாடுகளை அவர் நண்பர்கள் சிலரின் உதவியுடன் தொடர்ந்து செய்து வருவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். பள்ளம் நோக்கிப்பாயும் வெள்ளம் போல வறுமை சார்ந்த இடங்களை நோக்கி அவர்களின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. மிகவும் வறுமையை கண்டறிவதிலும் அந்த இடங்களுக்கு உதவிகள் சென்றடைவதை உறுதி செய்வதிலும் அவர்கள் சீரான திட்டங்களோடு செயற்பட்டனர். வறிய மாணவர்கள் கல்விபெற உதவுதல் வாழ்வாதாரங்களை வழங்குதல், சிறந்த கல்வி அடைவுகளை பாராட்டி பரிசுகள் வழங்குதல், கல்விக்கான கருத்தரங்குகளை நடத்துதல் என்பன அவர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் பணிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் வழங்கும் செயற்றிறன் மிக்க உதவிகள் அவற்றின் பெறுபேறுகள் என்பன நல்ல அறுவடையைத் தந்துள்ளன என்பதை அறிந்து மகிழ்வது பெரும் குணங்களில் ஒன்றாகும். வழியில் சந்திக்கின்ற வறுமைக்கோடுகள், மாற்றுத்திறனாளிகள் என்பவற்றை, அவர் வெறுமனே பார்த்து கடந்து சென்றது கிடையாது. அவர்கள் சமூகத்தளத்தில் நம்பிக்கையுள்ள பிரஜைகளாக வாழ்வதற்கு வேண்டிய வாழ்வாதாரங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை வழங்கி ஆர்வம் ஊட்டுவார். அவருடன் எனக்கு கூடுதலான நெருக்கம் ஏற்பட்டது இலக்கிய பங்களிப்புக்கள் ஊடாகவே. அவரது ஆக்க இலக்கிய முயற்சிகளை நான் பாராட்டுவது உண்டு. அவர் கணிசமான அளவில் புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். எழுதுபவர்களை ஊக்குவிப்பார். அரிய நூல்கள் சிலவற்றை அவர் எனக்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

கடந்த மாதம் அவர் எழுதிய சிறுகதை மஞ்சரியில் வெளியாகி பரிசு பெற்றது. ஏறத்தாழ 1000 சொற்களுக்குள் அடங்கிய அந்த சிறுகதை வாழ்வியலின் பல பண்புகளை இலக்கிய மணத்துடன் உள்வாங்கி இருந்தது. வெளிமாவட்டமொன்றில் வைத்தியத்தேவைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் சந்திக்கின்ற நோய்த்தாக்கம் வறுமை கல்விகற்க முனைகின்ற சிறுவர்கள் இருவர் சந்திக்கும் இடர்பாடுகள் என்பனவற்றை வெகு துல்லியமாக வெளிப்படுத்தி இருந்தார். கடைசிப்பந்தியை வாசித்த போது ஏற்பட்ட மனவேதனை இன்னமும் என்னை வருத்திக்கொண்டிருக்கின்றது. இன்னமும் கொஞ்சம் நேரம் ஒதுக்கி ஆக்க இலக்கியத்துறையில் முயற்சிப்பாரேயானால் காத்திரமான பல படைப்புக்களை அவரால் தர முடியும் என்பது எனது பணிவான அபிப்பிராயமாகும். அவர் தனது அரச பணியில் அமர்ந்த காலை மிகுந்த நேசத்துடனும் அர்ப்பணிப்புடனும் நடந்து கொள்வார். CTB யில் பணியாளராகவும், கிராமசேவை அலுவலராகவும் இறுதியில் புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பாளராகவும் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் பணிபுரிந்தார். தனது சேவைக்காலத்தில் மக்களை மையப்படுத்திய வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார். அவர் பணியாற்றிய எல்லாக் காலங்களிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமை புரிவார். இன்றும் அவருடைய சேவைகளை பாராட்டிப்பேசுபவர்கள் இருக்கிறார்கள். கடந்த வருடம் எனது வீட்டில் ஒரு மாதத்தில் மூன்று மரணங்கள் நிகழ்ந்தன. எனது காலில் அறுவைச் சிகிச்சை ஒன்று செய்ததன் காரணமாக நடக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டது.

எனது வீட்டிற்கு முதலில் வந்தவர்களுள் அவரும் ஒருவர் நிலைமைகளை நன்கு புரிந்து கொண்ட அவர் வெளிநாட்டு செயற்கை கால்களைக் கொண்டு வந்தார். திருகோணமலையில் இருந்து உணவுகள் கொண்டு வந்து தருவார். அவர் எனக்கும் எனது குடும்பத்திற்கும் செய்த உதவிகளை விரிவஞ்சித் தவிர்த்துக்கொள்கின்றேன். நானும் ஏனைய நண்பர்களும் அவரை பூரணமாக நேசிப்பதற்கு முழு முதற்காரணம் அவரது மனிதாபிமானம் நிறைந்த அணுகுமுறைகளாகும். நல்ல வார்த்தைகள், பிரச்சினைகளை புறந்தள்ளி விட்டு கொஞ்சுகின்ற நேசம் அவரை ஒரு பூரணமான மனிதனாக அடையாளம் காட்டி நின்றன. அவரது அன்பும் மனிதாபிமானமிக்க செயற்பாடுகளும் சகலருக்கும் அன்பு பொழியும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழனின் சில நினைவுப் பதிவுகள்

திரு. கதிர்காமத்தம்பி குருநாதன்
ஓய்வுநிலை கிழக்கு மாகாண காணி ஆணையாளர்
மட்டக்களப்பு.

இந்துமா சமுத்திர இயற்கையன்னை எழில்பரப்பில்
இலங்கிடு திருமலை மண்ணில் வளம்மிக்க மல்லிகைத்தீவில்
சீர்பெறு சிவன்கோயில் மற்றும் அகஸ்த்தியர் பதியிதென விளங்கு குறைவிலா
சொல்லெழில், பொழில், நல்நெல்மணிபொழில் நானில நன்னீருற்று திருப்பதிகளோ
நிறைவளர்
முத்துக்குமார் கனகசபை
கணபதிப்பிள்ளை தங்கரெட்ணம் தம்பதியர்
நல்வாழ்தனில் கண்நிறை மணியாக தனித்தொருவனாய் வந்துதித்த
இறைமகன் தேவகடாட்சம் இவன்பிறந்த நன்னாள் முதலாய்
எக்குறையும் நேராது நல்கடாட்சம்
பெற்ற ஆணிவேரே

முறையோடு பெற்ற கலையனைத்தும் சிறந்து விளங்கி
புனித சூசையப்பர் கல்லூரிதனிலும்
செப்பிடவோர் மாணவனாய் ஆசிரியருளம்
நிறைந்தான்

பெற்றோர் துயர் துடைத்துத்தினம் ஆறுதல் கூறினின்று
அளவிலாத் திறமைகளால்
உலகமே புகழ எழுத்துலகில் அதியுயர்ந்து நின்றவனே.

"ஈன்று புறம் தருதல் தாயற்கு கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே"
என புறநானூற்றில் வரும் பாடல் வரிக்கமைய
சமூக வாழ்க்கையில் குடும்பம்,
குடும்பத்தின் கடமை, தாய் தந்தையரின் கடமை,
பிள்ளைகளின் கடமை, சமூக கடமை
குறிப்பாக எழுத்துலகில் நீர் ஆற்றிய கடமை
காலத்தால் அழியாதது.

உலகமுள்ளவரை நின்று நிலைத்திருக்கும்.
வாழ்க வளமுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்துறைக் கலைஞர், வித்தகர் கனகசபை தேவகடாட்சம் என்னும் பல்துறைசார் ஆளுமை

**திரு. வி.குணபாலா**
**சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**

திரு. கனகசபை தேவகடாட்சம் அவர்கள் ஒரு பல்துறைக்கலைஞராவார். 1953ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 12ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் எழில்மிகு தலைநகராம் திருகோணமலை மாவட்டத்தின் நீர்வளமும் நிலவளமும் மிகுந்த இயற்கையெழில் மிகுமல்லிகைத்தீவில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மல்லிகைத்தீவு மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை தி/புனித சூசையப்பர் கல்லூரியிலும் கற்றார். ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தரான இவர், அரச உத்தியோகத்தராக பணியாற்றிய காலத்தின் பெரும்பகுதி நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலமாகும். இடர்மிகுந்த அக்காலத்திலும் தனது அரச பணிக்காலத்தில் பல சமூகப்பணிகளையும், சமயப்பணிகளையும் துணிச்சலுடன் வினைத்திறனுடன் மேற்கொண்டவர். தனது பணிக்காலத்தில் தான் கண்டு கேட்டு அனுபவித்தவற்றையும் தனது இலக்கிய வடிவில் ஆவணப்படுத்துவதற்கு முற்பட்டார்.

தான் வாழ்ந்த காலத்தில் உள்வாங்கிய அனுபவங்களையும் அதன் விளைவான உணர்வுகளையும், ஆதங்கத்தையும் சிறுகதையாகவும், கவிதையாகவும், கட்டுரையாகவும், பத்திஎழுத்துக்களாகவும், விமர்சனமாகவும் எழுதினார். இவை அன்றைய வார வெளியீடுகளிலும், தினசரி பத்திரிகைகளிலும் வெளிவந்து வாசகரின் வாசிப்பு ஆவலைத்தூண்டுவனவாக திகழ்ந்தன. இவரது எழுத்துக்களின் வீரியம் மற்றும் யதார்த்ததன்மை என்பவற்றை கருத்தில் கொண்டு தினமுரசு, வீரகேசரி, சரிநிகர், போன்ற பத்திரிகைகள் இவரது ஆக்கங்களுக்கு இடம்கொடுத்தன. அக்காலத்தில் பல காத்திரமான வாசகர்களின் கதாநாயக எழுத்தாளராக திரு.கனகசபை தேவகடாட்சம் அவர்கள் திகழ்ந்தார்.

குருதிமண் என்ற இவரது நூல் திருகோணமலை நகரத்தில் போர் உக்கிரதாண்டவம் ஆடிய காலத்தில் நடைபெற்ற ஒரு உண்மைச்சம்பவத்தை அடிப்படையாக கொண்டது. ஒரு பெண் போராளியின் தற்கொடையை எம் கண்முன் காட்டிச்சென்றது. வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2006ஆம் ஆண்டு காலத்திற்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் மற்றும் கலை இலக்கியவாதிகளுக்காக செயற்படுத்திய ஆக்க இலக்கிய பயிற்சிப்பட்டறைகளின் போது திரு.தேவகடாட்சம் அவர்கள் வளவாளராக பங்குபற்றி காத்திரமான தன்பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.மஜீத் அவர்களின் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்த இவர், அவர் நினைவாக கவிதை நூலொன்றையும் வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறைக் கலைஞரான தேவகடாட்சம் அவர்கள் பிரதேச ரீதியாக, மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் பங்குபற்றி விருதுகள் பலவற்றையும் பெற்றவராவார். இலக்கியத் துறையின் மூலம் தனக்கு கிடைக்கும் அனைத்து உதவிகளையும், நூல் விற்பனையால் வரும் வருவாயையும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக பயன்படுத்தினார். "திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியம்" என்ற பெயரில் நிதியத்தை உருவாக்கி அதன் மூலம் பெற்றோரை இழந்த பல மாணவர்கள் தமது கல்வியை தொடர்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்தார்.

திரு.கனகசபை தேவகடாட்சம் அவர்கள் பல வருடங்களாக கலை இலக்கியத்துறைக்கு வழங்கிய அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு மற்றும் ஆற்றிய சேவையை பாராட்டியும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2019ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நடத்திய தமிழ் இலக்கிய பெருவிழாவில் கிழக்கு மாகாணத்தின் உயர்விருதான "வித்தகர் விருது" வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைஞர்கள் வாழும் வரலாறுகள் ஆகும். கடந்த காலத்தில் வரலாற்று சாட்சிகளாக விளங்கும் இவர்கள் வாழும் பொழுதே கௌரவிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமானதாகும். இத்தகைய வரலாற்று கடமையை செவ்வனே ஆற்றுகின்ற விழாக்குழுவினர்க்கும் குறிப்பாக வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார் அவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளும் தேவகடாட்சம் ஐயாவும்

**மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார்**
**தலைவர்**
**சம்பூர் தமிழ்க்கலாமன்றம்**

*"தாமின்புறுவது உலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்."* *(குறள் - 399)*

திருக்குறளின் இவ்வரிகள் தான் திருவாளர் தேவகடாட்சம் அவர்களை எனக்கு அக்கடி நினைவூட்டியது. அதுமட்டுமல்லாமல் அவரது உயர்ந்த உள்ளத்தைப் பிரதிமைப்படுத்தியதும் இவ்வரிகளேயாகும்.

சம்பூரில் நடைபெற்ற "அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்" என்னும் என்னுடைய நூல் வெளியீட்டின் போது (12.10.2015) பணத்தை உள்ளே அடக்கி, அவரது உயர்ந்த குணத்தை அடக்க வழியில்லாது காகித உறையின் மேற்பரப்பில் அவரால் எழுதப்பட்ட வைரவரிகளே இவை. இதைக் கண்டதும் மகிழ்ந்தேன். இவ்வாறு திருவள்ளுவர் பெருமானின் குறள்களை அடிக்கடி உச்சரித்து வாழுகின்ற ஒருவர், நட்புரிமையாகக் கிடைத்ததை எண்ணிப் பூரிப்படைந்தேன். இதன் பின்னர் அவருடனான உடையாடல்கள் நேரடியாகவும், தொலைபேசி வழியாகவும் தொடர்ந்தன. இவை இலக்கியக் கூட்டங்கள் நடைபெறும் இடங்களிலும், அவரது உவர்மலை வீட்டிலும் மணிக்கணக்கில் பல ஆண்டுகளாகத் தொடர்கின்றன.

உரையாடல்கள் இலக்கியம், வரலாறு, திருக்குறளின் சிறப்புகள், எம்.ஜி.ஆர், கண்ணதாசனின் பாடல் வரிகள், பாடகர் ரி.எம்.எஸ், உலக அரசியல், நாட்டுநடப்புகள் எனப் பலவாறாகத் தொடர்ந்தன. இவரது பாணியில் கூறுவதானால் "காத்தான் பூத்தான் கதைகள்" போலில்லாது கருத்தாழம் மிக்கதாகவே உரையாடல்கள் அமைந்தன. எந்த விடயத்தைக் கதைத்தாலும் அச்சம்பவத்துக்கேற்றாற் போல திருக்குறளின் வரிகளைத் தொட்டுக்காட்டித் தெளிவுபடுத்தி, நயந்து சொல்லும் ஆற்றல் தற்காலத்தில் இவருக்கேயுரிய சிறப்பாகும். அன்பு, ஊடலும் கூடலுமான வாழ்வியல், அறம், அரசியல் சார்ந்த குறள் வரிகளே இவர் அடிக்கடி வெளிப்படுத்துவனவாகும். அதிலும் குறிப்பாக அறம் சார்ந்தவைகளைக் கூறலாம். அறம் சார்ந்தே தான் வாழ்வதாகக் கூறுவது, இவரது எதிர்காலப் பாதையைத் தெளிவாகக் காட்டியது. இதுவரை காலமும் தமிழினம், தமிழ் மொழி என வாழ்ந்ததன் காரணமாக தாங்கள் அடைந்த துன்ப துயரங்களை இவரது பிள்ளைகள் இன்றும் கவலையாகக் கூறுவர்.

எமது தமிழ்க்கலாமன்றம் கடந்த காலங்களில் சம்பூரில் நடாத்திய முத்தமிழ் விழாக்களிலும், சைவப் பண்பாட்டு நிகழ்வுகளிலும் சிறப்புக்குரிய அழைப்பு விருந்தினராகவும், சாதாரண அழைப்பு விருந்தினராகவும் தவறாது கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியுள்ளார். தேவையான ஆலோசனைகளையும் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியுமுள்ளார். அவை என்னுடைய பாதையை மிகவும் இலகுவாக்கித் தந்திருந்தது என்று கூறுவதில் பெருமை கொள்கின்றேன்.

2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 06,07,08 ஆகிய மூன்று நாட்களும் முறையே இயல், இசை, நாடக விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு "முத்தமிழ் விழா - 2018" என்னும் மாபெரும் நிகழ்வு சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தால் நடாத்தப்பட்டது. கிராமத்தின் பிரதான வீதியின் இருமருங்கிலும் நிறைகுட வரவேற்புடன், மேளதாளங்கள் முழங்க, தமிழன்னை ஊர்வலமாக சம்பூர் பண்பாட்டு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டு கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இவ்விழாவில் கலந்து கொண்ட எழுத்தாளர் க. தேவகடாட்சம் அவர்கள் பல்துறை வித்தகரான "அமரர் மா. கணபதிப்பிள்ளை அரங்கு" எனப் பெயர் சூட்டப்பட்ட அரங்கில் இடம்பெற்ற முதலாம் நாள் நிகழ்வின் போது "குறள் சிறப்பின் ஒரு துளி" என்னும் தலைப்பில் உரையாற்றியிருந்தமை சிறப்பாகவிருந்தது.

இவ்வுரையானது அவ்விழாவின் போது வெளியிடப்பட்ட முத்தமிழ் விழா சிறப்பு மலரில் இடம்பெற்றிருந்தது. இவ் விழாமலரில் திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்கள், கவிஞர்கள், கல்வியலாளர்கள் எனப்பலரின் ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுரையில் இவர் குறிப்பிடுவதாவது!
"மானிட சிறப்பான வாழ்விற்கு வழிகாட்டிகளாக, ஒரு சுருக்கத் தொகுப்பாக தமிழ்ப்புலவன் எமக்கருளியதே திருக்குறள் ஆகும். இதில் சொல்லப்படாதவை என்று எதுவுமே இல்லை எனலாம். இதில் பொருள் சார்ந்து குற்றம் இருக்காது எனத் திடமாய் நம்புகின்றேன். நல்வாழ்வின் விழுமியங்களே முழுமையாக இருக்கும். இத்தனை சுருக்கமாகவும் இறுக்கமாகவும் யாராலும் வள்ளுவனைப் போல் கூறிவிட முடியாது" என்று இவர் கூறுவதிலிருந்து, அவர் திருக்குறள் மேல் கொண்ட மதிப்பீட்டையும் மரியாதையையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

அடுத்து 2020 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 07,08,09 ஆகிய மூன்று நாட்கள் சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தினரால் நடாத்தப்பட்ட மூன்றாவது "முத்தமிழ் விழா – 2020" இன்போது வெளியிடப்பட்ட முத்தமிழ் விழா சிறப்பு மலரில் முழுமையாக கொட்டியாபுரப்பற்று இலக்கியவாதிகளின் ஆக்கங்கள் வெளிவந்திருந்தன. அவற்றுள் திரு. க. தேவகடாட்சம் அவர்களின் "குறள் சமுத்திரத்தில் இருந்து ஒரு துளி- அறம் பற்றிக் குறள் கூறுவதென்ன?" என்னும் தலைப்பிலான ஆக்கம் உள்ளடங்கியிருந்தது. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு "அமரர்.கோ. திரவியராஜா அரங்கு" எனப் பெயர் சூட்டப்பட்ட அரங்கில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு திருக்குறள் வரிகளோடு வாழ்ந்து தன்னைச் செதுக்கி வருகின்ற மூத்த எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சம் அவர்களின் இலக்கியப்பணி மகத்தானது. காலத்தால் போற்றப்படக்கூடியது.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் சார்ந்த இலக்கியப்பணியில் நண்பர் கனகசபை தேவகடாட்சம்

**ஜனாப் கே.எம். அமீர்டீன்**
**மூதூர், திருகோணமலை**

1992களின் இறுதிப் பகுதியில் வெளியான தினமுரசுப் பத்திரிகையானது தமிழ் -முஸ்லிம் வாசகர் மத்தியில் ஒரு ஜனரஞ்சப் பத்திரிகையாக வலம் வந்தது என்றால், அதனை யாரும் மாறுத்துரைக்க மாட்டார்கள். அதற்கு காரணம், அப்பத்திரிகை சுமந்து வந்த அனைத்து விடயங்களும் சுவையும் சுவாரஷ்யமும் கலந்து சமகால நிலைமைகளை (update) வாசகர் கண்முன் விரியச் செய்தமையாகும்.

இதில் குறிப்பாக புதிய எழுத்தாளார்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில் இப்பத்திரிகையின் பணி மிகப் பெரிதாகும். அவ்வாறு அறிமுகம் செய்யப்பட்டவர்களில் மிக முதன்மையானவர்தான் நண்பர்-எழுத்தாளர் திரு.கனகசபை தேவகடாட்சம். மூதூர் மண் காலத்துக்குக் காலம் பல எழுத்தாளார்களையும், இலக்கியவாதிகளையும் எமக்கு(த்)ள் பிரசவித்துள்ளது. உமர் நெய்னாப் புலவர், வ.அ.இராசரத்தினம், எம்.எஸ். அமானுல்லா, ஏ.எஸ். உபைதுல்லா, கலாநிதி கே.எம்.எம்.இக்பால், எம்.எம்.அனஸ், மூதூர் முஹைதீன் என அடுக்கிக் கொண்டே போகலாம். அந்த வகையிலே மல்லிகைத்தீவுக் கிராமத்தின் வாரிசாகிய திருவாளர் தேவகடாட்சம் தினமுரசுப் பத்திரிகையினால் செதுக்கப் பட்ட இலக்கியவாதி என்றால் மிகையாகாது.

நாடறிந்த எழுந்தாளர் திரு.வ.அ. இராசரத்தினம் அவர்களின் பெரும்பாலான கதைகளில், கதைக்களமாக மூதூர் பிரதேசம் நமது மணக்கண் முன் காட்சியளிக்கும். வெருகலம்பதி, மகாவலி நதி என அது பரந்து கிடப்பதை வாசகர் உணர்வார். ஆனால் திரு கனகசபை தேவகடாட்சம் அவர்களின் கதைகளில் நாம் வாழும் கதாபாத்திரங்கள் அவர்களின் இயற்பெயருடன் உலாவருவது மிகவும் சிறப்பம்சமாகும். மூதூர் - திருமலை படகோட்டியாக செயற்பட்ட திரு.தெய்வேந்திரம், தி/இந்துக்கல்லூரியின் அதிபர் திரு.தண்டாயுதபாணி, 1996களில் கொலை செய்யப்பட்ட கிருஷாந்தி போன்ற பாத்திரங்களை உதாரணமாக கொள்ளலாம். எனக்குத் தெரிந்தவகையில் இவரால் மூன்று நூல்கள் (இலங்கையிலும், இந்தியாவிலும்) வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் "காலக்கீறல்கள்" எனும் நூலுக்கு விமர்சன உரை நிகழ்த்திய அனுபவம் எனக்குண்டு.

பொதுவாகவே எழுத்தாளர்கள் தமது இலக்கியத்தினூடாக தாம் வாழ்ந்த காலப் பகுதியின் சமூக, கலாச்சார வாழ்வியல் பழங்கங்களையும் அவர்கள் சந்தித்த, முகம் கொடுத்த பிரச்சினைகளையும் மக்கள் பார்வைக்கு விருந்தாக்கி, அவற்றை அடுத்த சந்ததிக்கு ஆவணமாக்குகின்ற பணியினை செய்து முடிப்பதில் திருப்தி காண்பார்கள். அதன் காரணமாகவே இலக்கியம் காலத்தின் கண்ணாடி என நோக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் எமது நண்பர் இவற்றுக்கு அப்பால் பெரும் இலக்கினை நோக்கி பயணிப்பது பலரும் அறியாத ஓர் உண்மையாகும்.

ஆம், தனது நூல் வெளியீட்டினூடாக திரட்டப்படும் நிதியினை கட்புலன் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிதிக்காக தொடர்ந்து செலவிட்டு வருவதுடன், வருடா வருடம் 450 மாணவர்களுக்கு அன்னதானமும் வழங்குகின்றமை போற்றப்பட வேண்டிய விடயமாகும்.

அந்த வகையிலே, நண்பர் திரு.க.தேவகடாசம் அவர்களின் இலக்கியப் பணியானது, மண்வாசனை கலந்து, மகாவலி ஆற்றினைப் போல் நீண்டு செழிக்க வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்ற அதே நேரம், இப்பணியானது அவரால் மட்டுமின்றி ஏனையவர்களினாலும் முன்னெடுத்துச் செல்லப்படுமாக இருந்தால் அதுவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நமது சமூகத்திற்கு செய்யக் கூடிய பெரும் பணியாகும் என்பது எனது கருத்தாகும்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட தேவகடாட்சம்...

**ஜனாப் பசீர் - மூதூர்**
**திருகோணமலை.**

மூதூர் மல்லிகைத்தீவை பிறப்பிடமாக கொண்ட தேவகடாட்சம் அவர்கள் அமரர்களான முத்துகுமார் கனகசபை அவர்களுக்கும் தங்கரெட்ணம் அவர்களுக்கும் 12-10-1953 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஆரம்ப கல்வியை மல்லிகைத்தீவு வித்தியாலயத்திலும் பின்னர் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியிலும் அதன் பின்பு கொழும்பு பொரளை வெஸ்லி கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

அதன் பின்பு 1970-1977 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூதூர்த் தொகுதி பாரளுமன்ற உறுப்பினரும், தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சரும் திருகோணமலை மாவட்ட அரசியல் அதிகாரியுமான ஜனாப். மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜித் அவர்களோடு மிகவும் நெருக்கமான முறையில் அவரோடு சேர்ந்து அரசியலில் இணைந்தார். இவருக்கு 1976 ஆம் ஆண்டு இலங்கை போக்குவரத்து சபையின் மூதூர் பகுதியின் சாலை / வீதிப் பரிசோதகராக நியமனம் கிடைக்கப்பெற்றது. இலங்கையை ஆட்சி புரிந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் மர்ஹூம் அப்துல் மஜித் அவர்களின் அழைப்பின் பேரில் 1977 முற்பகுதியில் மூதூருக்கு விஜயம் செய்த போது தற்பொழுது மூதூரில் அமைந்துள்ள நீர்த்தாங்கிற்கு அருகாமையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றபோது தேவகடாட்சம் அவர்களுக்கு சிறிது சொற்பொழிவொன்று கிடைக்கப்பெற்றது. அன்றுதான் இளமை துடிப்புமிக்க அவரது ஆவேசமானதும் ஆக்ரோசமானதுமான தமிழ் சொற்பொழிவை நானும் கேட்க நேர்ந்தது. இம்மேடைப் பேச்சைக்கேட்ட பலராலும் இவர் பாராட்டப்பட்டார். இது இவரது இலக்கிய பயணத்திற்கான ஒரு படிக்கல்லாக இருக்கும் என்று ஊகித்திருக்கவில்லை. இன்று விருட்சமாகியிருப்பதையிட்டு நான் மிகவும் பெருமைகொள்கின்றேன்.

எனக்கு 1972 ஆண்டு சாலை வீதி பரிசோதகராக நேர்முகப் பரீட்சையை முடித்துவிட்டு ஒரு மாலை நேரம் மூதூரில் உள்ள நொக்ஸ் சந்தியில் நின்றபோது தேவகடாட்சம் அவர்கள் தனது கடமையை முடித்துவிட்டு வரும் வழியில் என்னைக் கண்டார். என்னிடம் அணுகி, "நேர்முகப் பரீட்சையெல்லாம் முடிந்துவிட்டதா? அப்படி முடியாவிட்டால் வேறு ஏதாவது ஓய்வூதியம் உள்ள தொழிலிற்கு செல்லுங்கள்" என்று சொன்னபோது நான் மனதிற்குள் நினைத்தேன். இவருக்கு நான் இந்த பதவிக்கு வர இருப்பது விருப்பமில்லையென்று. அவரது தூர சிந்தனையை தற்போது நான் உணர்கின்றேன். ஏனெனில் இன்றுவரை ஓய்வூதியம் கிடைக்காமல் வாழ்ந்து வருகின்றேன். இதன் வேதனையானது, ஒவ்வொரு நாளும் 'முள்ளினால் நெஞ்சு குத்தப்படுவது' போலிருக்கின்றது.

எனக்கு 1979 ஆம் ஆண்டு நியமனம் கிடைத்து இலங்கை போக்குவரத்து சபை மூதூர் சாலையில் அவருடன் 08 வருடகாலம் ஒன்றாக பணிபுரிந்துள்ளேன். எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது இருந்த சாலை முகாமையாளர் திரு.லியனகே அவர்கள் 1985 ஆம் ஆண்டு இடம்மாற்றலாகி செல்லும்போது அவருக்கு பிரியாவிடை விருந்துபசாரம் நடைபெற்றது. அவருக்கு நன்றி செலுத்தும் முகமாக சில உத்தியோகத்தர்கள் பிரியாவிடை பேச்சுக்களை வழங்கினர். மேற்படி சாலை முகாமையாளர் சகோதர இனத்தினை (சிங்கள) சேர்ந்தவர். தமிழ் - முஸ்லிம் சார்பாக தேவகடாட்சம் அவர்களை உரையாற்ற கேட்டுக்கொள்ளப்பட்டது. இவர் ஆங்கில மொழியிலே மிகவும் புலமையுடன் பேசியிருந்தார். அத்துடன் இவர் சிங்களத்தில் மிகவும் சரளமாகப் பேசக்கூடியவர். அன்றும் இவரது இலக்கிய படிக்கல் ஒன்றை அனைவரும் காணக்கூடியதாகவிருந்தது.

இவர் 1984.09.12 ஆந்திகதி தம்பலகாமத்தை சேர்ந்த தனலட்சுமி என்ற பெண்ணை திருமணம் முடித்து 2 ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையும் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று 8 பேரப்பிள்ளைகள் கண்டு திருகோணமலை உவர்மலையில் தனது மகளுடன் ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தராக வாழ்ந்து வருகிறார்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு தன்னால் இயன்றளவு அமர்களான அவரது தந்தையான கனகசபை அவர்களுடனும் அவரது உற்ற நண்பரான வசந்தகுமார் அவர்களுடனும் சேர்ந்து பொதுப்பணியில் ஈடுபட்டார், இவரது பொதுப்பணி கராணமாக மூதூர் வெருகல்முகத்துவாரத்திற்கு கிராம உத்தியோகத்தராக 1987 ஆம் ஆண்டு நியமனம் கிடைக்கப்பெற்று தனது பணியினை சிறப்பாக செய்து வந்தார். எந்தவிதமான உதவியையும் யார் கொடுத்தாலும் பெற்றுக் கொள்ளமாட்டார். எங்கு அநீதி நடக்கின்றதோ பின்விளைவுகளை நினைக்காமல் துணிந்து குரல் கொடுப்பார். இதற்கு உதாரணமாக, நானும் அவரும் எங்கள் வேலையை முடித்து விட்டு வரும் போது தற்போது பிரதேச சபை அமைத்துள்ள இடத்தில் இந்திய இராணுவத்தின் அமைதி காக்கும் படையினரின் சோதனைச் சாவடி ஒன்று இருந்தது. எங்கள் இருவரையும் அழைத்து தேசிய அடையாள அட்டையை காண்பிக்க சொன்ன போது காண்பித்த பின்னர், காண்பிக்கச் சொன்ன இந்திய இராணுவத்தின் சீக்கிய இராணுவர் இவரைப் பார்த்து "நீர் விடுதலை புலிகளின் தலைவராக இருக்கின்றாய் போல் தெரிகின்றது" என்று சொன்னதும் சற்றும் பயமில்லாமல் ஆங்கில மொழியில் அவரோடு வாக்குவாதப்பட்டதை நேரில் நான் கண்டேன்.

மேற்படி இவரது துணிவுகள் எல்லாம் மர்ஹூம் அப்துல் மஜீத் அவரோடு வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட மனத்தைரியமும் துணிவும் தான் இவருக்கு உறுதுணையாக இருந்தது எனச் சொல்லலாம். காலப்போக்கில் முன்னாள் முதலமைச்சராக இருந்த நஜீப் அப்துல் மஜீத்தோடு கொண்ட பற்றுதல் காரணமாக அவரது கூட்டுறவு அமைச்சில் ஒருங்கிணைப்பாளராக சுமார் 4 வருட காலமாக பணி செய்தபின்னர் அவரின் உதவியுடன் சிறிது நாட்கள் ஜேர்மன், பிரான்ஸ் என சென்று பின்னர் சுவிட்ஸலாந்து நாட்டில் 5 வருடகாலம் அகதி அந்தஸ்தோடு வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சாதாரண நிலை உருவானதன் பின் நாடு திரும்பி தனது பொதுப்பணியில் ஈடுபட்டார். திருக்கோணமலை மாவட்டத்தில் குறிப்பாக மூதூரில் உள்ள அநேகமான ஏழை மக்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் இன்றுவரை துணிமணிகள், புத்தகங்கள் போன்றவற்றை அன்பளிப்பு செய்து கொண்டு வருகின்றார். அத்தோடு மட்டுமல்லாது, பல்கலைக்கழகம் செல்லும் மாணவ மாணவிகளுக்கும் தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றார். இதற்கு உதாரணமாக கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெருகல்முகத்துவாரத்தில் அமைந்துள்ள துவாராக மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற 8 மாணவ மாணவிகளுக்கு பல்கலைக்கழகம் செல்ல அனுமதி கிடைத்தபோது ஒழுங்கு செய்யப்பட்ட விழாவுக்கு நானும் ஒருவனாக சென்றிருந்தேன். விழா முடிந்து வரும்போது இவருக்கு எதிர்பாராத விதமான மயக்கநிலை வந்தபோது ஒரு மாணவியினால் தாங்கி பிடிக்கப்பட்டார். அது பாரதூரமான மயக்கமாகத் தெரியவில்லை. இறைவன் உதவியினால் அவர் அன்று காப்பாற்றப்பட்டார்.

இந்த வேலையில் ஒரு பாடலை நினைவு கூர விரும்புகின்றேன், "செய்த தருமம் தலை காக்கும் தக்க சமயத்தில் உயிர் காக்கும்"

இதன் பின்னர் பொலநறுவை வைத்தியசாலையிலும் பின்னர் அநுராதபுர வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றபோது அங்கு இவரை பரிசோதித்த வைத்தியர்களால் இவரது மார்பில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. சிகிச்சையின் போது நெஞ்சில் பொருத்தப்பட்ட அக்கருவியிற்கு குறைந்தது 20 இலட்சமாவது செலவு செய்திருக்க வேண்டும். ஆனால் இறைவனின் உதவியால் ஒரு சதமேனும் செலவு செய்யாமல் அறுவை சிகிச்சை செய்து இப்போது சுகதேகியாக வாழ்ந்து வருகிறார். மேற்சொன்ன பாடலில் இன்னொரு வரியையும் ஞாபகமூட்ட நினைக்கின்றேன், "அள்ளிக் கொடுத்து வாழ்பவர் நெஞ்சில் ஆனந்த பூந்தோப்பு, வாழ்வில் நல்லவர் என்றும் கெடுவதில்லை இது நான்கு மறைத்தீர்ப்பு"

தமிழனாக பிறந்த தமிழ் மகனே என்றும் நீ நீடுழி வாழ்க!

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தின் ஊடாக செப்பனிடப்பட்ட வழித்தடம்...

**திரு. சுப்ரமணியம் கணேசலிங்கம்**
**அதிபர் (ஆரம்பப் பிரிவு)**
**தி/இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி**
**திருகோணமலை.**

எதையும் மிகைப்படுத்தி கூறுவதாக எண்ண வேண்டாம். எந்தவித சிறப்பிக்கும் எண்ணம் அற்று உள்ளதை உள்ளபடி எனது அனுபவத்தின் வாயிலாக கூறவிழைகின்றேன். கனகசபை தேவகடாட்சம் ஐயா அவர்களை வெறுமனே எதேச்சையாகவோ தற்செயலாகவோ சந்திக்கவில்லை. மிகப்பெரிய பெறுமதி மிக்க கல்விப் பணியின் ஊடாக அவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அவரின் தன்னலமற்ற கல்விப்பணியே என்னைக் கவர்வதற்கான பிரதான காரணம். கடந்த யுத்த காலங்களில் ஏற்பட்ட அழிவின் ஊடாக மிக முக்கியமாக தாக்கப்பட்டது கல்விதான் ஆகும். அதற்கு மேலாக ஏழை மாணவர்களும் அடங்குவார்கள். இவர்களுக்கான கல்வி செயற்பாட்டை மேற்கொள்ளும் போது சிறந்த பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு என்னை தெரிவு செய்தார். என்னுடன் சேர்ந்து இயங்குவதற்கு வேறு சிலரையும் தெரிவு செய்தார். நாங்கள் கல்வி சார்ந்த வகுப்புகளை சிறந்த முறையில் நடத்தினோம் என்பது உண்மை. ஆனால் அதனிலும் மேலாக அவரின் செயற்பாட்டில் நாங்கள் கற்றுக் கொண்ட கல்விதான் ஏராளம். குறித்து உரைப்பது என்றால் அவரின் நேரம் தவறாமை, திட்டங்களை ஒழுங்குபடுத்தும் முறை, அவற்றை அமுல்படுத்தும் போது ஏற்படும் இடர்களை தவிர்க்கும் உபாயம், கற்றலை ஒழுங்குபடுத்தும் முறை, எமக்குத் தேவையானவற்றை தேவையான சந்தர்ப்பத்தில் பெற்றுத்தரும் விதம், அத்தோடு இதில் ஏற்படும் பிசகுகளை தற்துணிவோடு நீக்கும் தன்மை செல்லுகின்ற வழிப் பயணத்தை சுவாரசியமாக மாற்றுதலும் மீண்டும் இத்தகைய பணிக்கு செல்லும் ஆர்வத்தை ஏற்படுத்தலும் இவரின் திட்டமிடலில் பிரதான அம்சங்கள் ஆகும். இவ்வாறான அர்ப்பணிப்பு செயற்பாட்டின் ஊடாக கல்விச்செயற்பாட்டில் கலந்து கொள்ளும் நாங்கள் தூய்மையான எண்ணங்களோடு அக்கல்விப் பணியை மேற்கொள்வதற்கு இயல்பாகவே எண்ணம் தோன்றியது. இவருடன் இணைந்து பயணிக்கும் போது பணமோ, பதவியோ, பொருளோ பெரிதாகத் தெரியவில்லை. அதற்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவும் இல்லை.

இலக்கியத்துறையில் தனக்கே உரித்தான பாணியில் சிறுகதை எழுதுவதில் பாண்டித்தியம் உடையவராக காணப்பட்டார். அத்தகைய ஆற்றல் உடைய இவர் தனது முதல் சிறுகதையான 'காலக்கீறல்கள்' நூல் வெளியீட்டின் மூலம் பெறப்பட்ட ரூபாய் 183,000ஐ மட்டக்களப்பில் இயங்கும் கண் பார்வை அற்றவர்களின் நலன் கருதும் தரிசன நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கினார். நான் அறிந்த வகையில் இவருடைய அற ரீதியான சிந்தனைதான் இக்கல்விப் பணியை செய்வதற்கு உதவியது. இவருடைய இத்தகைய நல் குணத்தை அறிந்த நலன் விரும்பிகள் நூறு ரூபா பெறுமதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புத்தகத்திற்கு பத்தாயிரம் ரூபா அளவிலும் வழங்கினர். இவருடைய தர்ம சிந்தனைக்கு கிடைத்த நிதியே இதுவாகும்.

சமூக நலனில் அக்கறை கொண்ட இவர் தொடர் நடவடிக்கையாக 'குமுறல்கள்' நூல் மூலம் பெறப்பட்ட ரூபாய் 136,000 பணத்தையும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக செலவழித்தார். இவருடைய இன்னொரு சிறுகதை இந்தியாவில் இரண்டாவது இலக்கிய பரிசை பெற்றது. இதன் மூலம் பெற்ற பணத்தையும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக செலவழித்தார்.

ஒரு சிறந்த மனிதன் உலகின் அனைத்து உயிர்களுக்கும் சிறந்த நண்பன் ஆவான். என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கமைய எங்கே பின்தங்கிய மாணவர்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று மாணவர் போக்குவரத்துக்காக துவிச்சக்கர வண்டிகளையும் உடைகள், காலணிகள் போன்றவற்றையும் வழங்கிவந்தார். தரம் ஐந்து பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு இவர் தான் முதன் முதலில் துவிச்சக்கர வண்டி வழங்கியதை நான் அறிந்தேன். கல்வித்துறையில் செலவிடப்படும் நிதி வளம், மனிதவள விருத்திக்கான சிறந்த முதலீடாகும். பாடசாலை என்பது மனிதவள அபிவிருத்தியில் முக்கிய பணி நிறைவேற்றும் நிறுவனம் என்ற வகையில் நினைத்து தனது நூல் மூலம் கிடைத்த பணத்தை வீண்விரயம் செய்யாது உரிய மாணவர்களுக்கு பயன்பெறும் வகையில் அந்நிதியை வழங்கினர்.

அவர் கூறும் விடயங்களில் மிக முக்கியமானது கற்பு என்பது தாம்பத்திய உறவில் மட்டும் இல்லை. அன்றாட நடவடிக்கைகளில் நிறைந்துள்ளது. குறிப்பாக இலக்கியத்தில் எவர் கற்பின்றி நடந்து கொள்கிறாரோ அவரை இலக்கியம் தூக்கி எறிந்து விடும். இலக்கியத்தால் தூக்கி எறியப்பட்டால் மீண்டும் எழுந்து வருவது என்பது முடியாத காரியம். ஆகவே இலக்கிய பணிக் கூடாக இவர் கற்போடு செப்பனிட்ட வழித்தடம் இன்று வரை நிலையாக இருந்து இன்னும் காலாகாலத்துக்கும் இப்பணி தொடரும் என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

இந்நூல் ஆக்கியோன் பற்றி இரு வரிகளில் கூறுவதானால் காலத்தால் அழிக்க முடியாத ஒரு வரலாற்று தரவை தந்துள்ளதும் கனசபை தேவகடாட்சம் ஐயா பற்றிய பணி சம்பந்தமான தகவல்களை எதிர்கால சந்ததியினருக்கு தெரியப்படுத்தியதும் ஆகும். மேற்கூறிய சம்பவங்கள் மூலம் ஒரு வடிகாலாக இந்நூல் அமைகின்றது என்பது மகிழ்ச்சிகரமான செய்தியாகும். இதனால் இந்நூலை ஆக்கியோனுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தற்காலத்தில் இவ்வளவு வசதி வாய்ப்புகளோடு பயணங்களை மேற்கொண்டாலும் அக்காலத்தில் கடின பாதையில் மேற்கொண்ட பணிகள் பற்றி நினைத்துப் பார்க்கையில் நம்ப முடியாமல் இருப்பதோடு அக்கால பயணத்தில் ஏற்பட்ட நினைவுகள் மறக்க முடியாத மகிழ்ச்சிகரமானவை ஆகும். இவருடன் இப்பணியில் நீண்ட காலம் பணியாற்றியவன் என்ற அடிப்படையில் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக வன்னி பெருநில பரப்புப்பு, மலைநாடு, மூதூர், மன்னார் போன்ற இடங்களில் இத்தகைய பணியைச் செய்யக் கூடியதாக இருந்தது. முன்னாள் வடக்கு கிழக்கு பிரதம செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்கள் இவருடைய தன்னலமில்லா எண்ணத்தை கருத்தில் கொண்டு தனது வாகனத்தை சாரதியுடன் வழங்கினர். இதன் மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு இவ்வாறான பணிகளை செய்வதற்குச் செல்லக்கூடியதாக இருந்தது. தமது மனைவி பிள்ளைகளையும் இப்பணிக்கு சேர்த்துக்கொண்டார். அவர்களுடைய அர்ப்பணிப்பான சேவையையும் இதன் மூலம் எனக்கு தெரியக் கூடியதாக இருந்தது.

"கற்றவர்கள் எல்லோரும் சிறந்த சேவைகளை வழங்கியதும் இல்லை"
"சிறந்த சேவைகளை வழங்கும் எல்லோரும் பெரிதாக கற்றவர்களும் இல்லை"
அந்த வகையில் உயர்திரு தேவ கடாட்சம் ஐயா அவர்கள் படித்தவர் மட்டுமல்ல சிறந்த சேவைகளைப் புரிந்த மனிதாபிமானம் கொண்ட சிறந்த மனிதரும் அவர் என்பதனைக் கூறிக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

"செயல் புரியும் கடமை மாத்திரம் ஒவ்வொரு மனிதனுடையது. பலனை அளிப்பவர் எல்லாம் வல்ல இறைவன்" என்னும் திடமான நம்பிக்கை எவரிடம் உள்ளதோ அவருடைய செயல்கள் அனைத்தும் வெற்றியை உண்டாக்கும். இத்தகைய சிந்தனைக்கு உரித்தானவர் தான் எமது தேவகடாட்சம் ஐயா!

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக்கீறல்கள் நூல் விமர்சனம்

**மாவை வரோதயன்**
**(திரு.சி.சத்தியகுமாரன், கொழும்பு-5)**

பார்வையற்றோர் கல்வி மேம்பாட்டு நிதிக்காக திரு.கனகசபை தேவகடாட்சம் அவர்களால் எழுதப்பட்டு செ.பிரபாகரன் அவர்களால் வெளியிடப்பட்ட குறுங்கதைகளின் தொகுதி நூல். யுத்த நிகழ்வுகள் கலந்த இன்றைய திருகோணமலைச் சமுதாயச் சூழலில் ஏற்படும் மனிதாபிமான ரீதியிலான பாதிப்புகளை இதயக் கீறல்கள் ஆக்கியிருக்கிறார் எழுத்தாளர் தேவகடாட்சம் அவர்கள். கால வறட்சியில் பட்டுமுறிந்த மரத்தினின்றும், ஏரிக்கரையினின்றும் நீங்கும் கொக்குகள், செக்கல் மாலைப்பொழுது அர்த்தமுள்ள அட்டைப்படம்.

நுழைவாயிலில் ஆசிரியர் அவையடக்கமாகக் கூறும் "உள்ளார்ந்த மனப் பதிவுகளின் வெளிப்பாடாக அமையும் கதைகள்" என்னும் வரிகளோடு தான் தேர்ந்தெடுத்த வடிவம் ஈதென்பதை முன்வைக்கிறார். கதைகள் யாவும் தினமுரசு, சங்கமம் போன்ற வார இதழ்களில் அவ்வப்போது வெளியான சின்னஞ்சிறு கதைகளாகும். மனவியல் உறுத்தல்களை ஆசிரியர் நேரடியாக கதைகளில் திணித்துள்ளார். தலைப்புகளைப் பொறுத்த வரையில் கவிதைத் தலைப்புகள் போல அம்சமானவை. கதைகளைப் பொறுத்த வரையில் "செல்ல வைத்தவர்கள், உடையார்-உடையார், பட்ஜெட், ஒரு பயணம் முடிகிறது" போன்ற கதைகள் பாராட்டும்படியாக அமைக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே நகைச்சுவை உணர்வுகளோடு கலந்த வசனங்களும், சம்பவங்களும் சுவாரஸ்யமாக ஊட்டப்பட்டுள்ளன. கதைகளின் களங்களும், குறுகிய தருணத்தில் மனதைத் தொடும் சம்பவங்களும் வாசிப்பவர் மனதைத் தொடுவதோடு, அந்த திருமலை மண்வாசனையையும் புரிய வைக்கின்றன.

ஆனால் கதைகளில் ஓர் அவசர பிரசவத் தன்மை தெரிகிறது. கதைகளின் அதே உள்ளடக்கத்துடனேயே சில மெருகூட்டல்கள் செய்யப்படுமெனில், அவை மேலும் செழுமைபட இடம் இருக்கிறது. அச்சுப்பதிப்பில் சில தவறுகள் நேர்ந்துள்ளமை கவனிக்கத் தக்கது. ஆனாலும் நூலாசிரியரின் கன்னி முயற்சி முற்றுமுழுதான துணிச்சலான முயற்சியாகும். அத்துடன் நூல் வெளியீட்டின் நோக்கம் வாய்ச்சொல் வீரர்களைப் பிரமிக்க வைக்கும் செயல்வீரத்தின் வெற்றிப்படியாகும். முன்னோடித்தன்மை வாய்ந்ததும் கூட. விமர்சன ரீதியில் ஆய்வுக்கு உள்ளாக்குவதை விட, ஒரு பிரதேச மண்ணின் இதய வடுக்களை ஆசிரியர் கதையைப் படிப்பவர்களிடம் எடுத்துச் செல்லும் விதம், நோக்கம் பாராட்டத் தக்கவை. பட்டெனப் படித்துப் புரியக்கூடிய சின்னஞ்சிறு கதைகள் தாம். இவை தினம் தினம் மாறும் காலமாற்றத்தில் ஒரு சான்று நூலாக அமையும் என்பதில் ஐயம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுறல்கள் சிறுகதைத் தொகுதியை நயந்த தாமரைத்தீவான்

கவிஞரேறு திரு. இராசேந்திரம்
(தாமரைத்தீவான்)
திருகோணமலை.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்னும் பாரதி கவிமொழியுடன் பாதிக்கப்பட்ட மாணவர் கல்வி நிதிக்காக, திருமலை-உதயன் பதிப்பகத்தால் அருள்வரதன், மாவை வரோதயன், நஜீப் அப்துல் மஜீத் (பா.உ), குலேந்திரன், கோணேஸ்வரன், வாழ்த்துகளுடன் தந்தை மு.கனகசபை படையலாக வெளியிடப்பட்ட க.தேவகடாட்சத்தின் இரண்டாம் சிறுகதைத் தொகுதியான குமுறல்களில் *31* கதைகளுள் காவலரன் கண்டு வெறுப்புடன் மீளும் டாக்டர், பொருள் வாங்க சந்தி சென்றோர் பிணமான கதை, தெருப்பிள்ளையார் குண்டால் சிதறிய கதை, அரிசிப் பொதியை இராணுவ அதிகாரியிடமிருந்து பெறாது சென்றவர் கதை இவையே போதும்! குமுறல்களைப் பதம் பார்க்க!

எல்லாமே சமகால சிந்தனைகள். நிகழ்வுச் சம்பவங்கள். சூழல் பாதிப்பின் கருத்து வெளிப்பாடுகள். யதார்த்தபூர்வமானவை. திருமலை மாவட்ட மக்களுக்கு இத்தகைய விடுதலை உணர்வு இருப்பது ஒன்றும் புதுமையல்ல.

இது ஒரு தொடர்கதைக் காலமல்ல! ஹைக்கூ - குறுங்கவிதை, ஒருபக்க - சிறுகதைகளின் காலம்! அப்படியாயின் பலருக்கும் பயில நேரமிருக்கும். காருண்யம் போன்ற கதைகள் நெஞ்சை விட்டு அகலா! குமுறல்களும் போர்க்கால ஆவணமே. அதிலும் ஏதிலிகள் கல்வி மேம்பாட்டிற்குதவிய பெருமையும் இதன் தரத்தைக் கூட்டும். மேலும் பணிதொடர ஆசிகள்.

(நோர்வே சர்வதேச தமிழர்
*1999.* இல-4)

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக

**கனகசபை-தேவகடாட்சத்தின்..........**

**குமுறல்கள்** சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா

காலம்: 23.08.1998 ஞாயிறு மாலை 4.00 மணி
இடம்: ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி - திருக்கோணமலை
தலைமை: திரு.கா.சிவபாலன் (சட்டத்தரணி)

நிகழ்வுகள்

- வரவேற்புரை: திரு.ச.சற்குணசிங்கம் (சமாதான நீதவான்) செயலாளர் - கி.அ.சங்கம், பள்ளத்தோட்டம், திருக்கோணமலை
- தலைமையுரை: திரு.கா.சிவபாலன்
- வெளியீடும், வெளியீட்டுரையும்: திரு.சி.தண்டாயுதபாணி அதிபர் - கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
- அறிமுக உரை: திரு.ச.அருளானந்தம் நிபுணத்துவ ஆலோசகர் - கல்வி அமைச்சு (வ.கி.மா.)
- அறிமுக உரை: ஜனாப் அமிர்தீன் கே. முகமட் மக்கள் வங்கி, திருக்கோணமலை.
- பதிலுரை: நூலாசிரியர் கனகசபை-தேவகடாட்சம்
- நன்றியுரை: திரு.ஒ.குலேந்திரன் உதவிக் கல்விப் பணிப்பாளர் (வ.கி.மா.)

**சிறப்புப் பிரதிகள் பெற்று ஆதரவு தருக!**

இவ்வண்ணம்
*கிராம அபிவிருத்திச் சங்கம் - பள்ளத்தோட்டம்,
திருக்கோணமலை
(விழா ஏற்பாட்டாளர்கள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குருதிமண்" சிறுகதைத் தொகுதி நூல் விமர்சனத்திலிருந்து

**காத்தான்குடி அனு**

தமிழ் மக்களின் இனப்பிரச்சினை வளர்ச்சி பெறத்தொடங்கிய பிற்பாடு ஈழத்தமிழ் இலக்கியத் தளத்திலும் பல மாற்றங்கள் தோன்றலாயின. குறிப்பாக 1980 ஆம் ஆண்டின் பின்னர் தகுதியானவர்களால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புகளிலும் உன்னதமான பல உள்ளீடுகளைக் கண்டுகொள்ள முடிகிறது. தமிழ்மக்கள் மீதான அடக்குமுறைகளின் பாதிப்புகள், இனவாதம் மேலிட்ட அரசியலால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டது என்பன போன்ற அவலங்களைக் கடந்த இருபது ஆண்டுகளில் வெளிவந்த இலக்கியப் படைப்புகளில் தரிசிக்கலாம்.

இலக்கியம் என்பது மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது. நிகழ்கால யதார்த்தத்தையும், சூழ்நிலைச் சந்திப்புகளையும் சித்தரித்துக் காட்டுவது என்பதற்கமையவே ஈழத்துப் படைப்புகளும் வளர்ச்சியின் பால் சென்று கொண்டிருக்கின்றன. இவ்வகையினைச் சார்ந்த இலக்கியப் படைப்பாக அண்மையில் வெளிவந்திருக்கின்றது கனகசபை தேவகடாட்சம் எழுதிய "குருதிமண்" என்னும் இருபது சிறுகதைகளின் தொகுப்பு.

அண்மைக்காலச் சிறுகதைப் படைப்புகளில் பிரகாசமாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவரே தேவகடாட்சம். மனிதாபிமானம் - நன்றியுணர்வுகளைப் பிரவாகிக்கும் இலக்கியங்களை அவர் தருகின்ற போதிலும், தான் வாழும் இனத்தின் - சமூகத்தின் விடுதலைக் குரலாகவும் அவரது படைப்புக்கள் பேசி நிற்கின்றன. குருதிமண் தொகுதியில் அனேகமான கதைகள் இனப்பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களைப் பளிச்சிடுகின்றன. குறிப்பாக ஏமாற்று அரசியல் மூலம் ஒரு தனித்துவ இனம் பல்வேறு அழிவுகளைக் காணுவதை அக்கதைகள் கடுமையாகச் சாடுகின்றன.


இலங்கையில் சமாதானம் என்பதும், அதன் பெயரில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளும் ஒரு ஏமாற்றே என்பதை கனகசபை தேவகடாட்சத்தின் "மகனுக்கு" சிறுகதை அம்பலப்படுத்திக் காட்டுகிறது. கதையில் உரையாடல்கள் இல்லாத போதும், சொல்ல வந்த செய்தியை அவர் வழவழாப்பண்ணாமல் பளிச் என்று சொல்லியிருக்கிறார். பொதுவாக நோக்குமிடத்து கனகசபை தேவகடாட்சம் எந்தவகையில் அநீதி உண்டாகினாலும், அதைப் பொறுக்க முடியாத நிலையில், அநீதியை எதிர்த்துப் போராட தனது கதைகளை ஆயுதமாகப் பயன்படுத்துகிறார் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது.


சிறுகதைகள் உணர்வுபூர்வமாக அமைய வேண்டுமாயின் உரையாடல்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஆனால் இவ்வுண்மையை குருதிமண் கதையில் காணமுடியவில்லை. இத்தகைய நிலை பழங்கால மன்னர்களின் கதையை சிறுவர்களுக்குப் பொழுதுபோக்காகக் கூறுவது போன்ற சாயலைக் காட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கதையை நகர்த்துவதற்காகக் கையாண்டிருக்கும் வசனப் பயன்பாடுகள் இறுக்கமான வகையில் (சில கதைகளில் மட்டும்) அமைந்திருப்பதும் கதைக்குச் சில பின்னடைவுகளைத் தருகின்றன. ஒரு சிறுகதை எழுத்தாளராகப் பரிணமிக்கின்ற கனகசபை தேவகடாட்சம் குருதிமண் தொகுதி மூலம் பல நல்ல கதைகளைத் தந்திருக்கின்றார். இருந்தும் கதைசொல்லும் பாங்கு, கதையின் ஓட்டம், முடிவுகளை யதார்த்தமாக உணர்த்தும் தன்மை என்பவற்றில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். (இடி - இலக்கியசாகரம், செப்டெம்பர், 23-29, 2001)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மணப்பரிசு" நூல் அறிமுகம்

**மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார்**
**சம்பூர்**

கனகசபை தேவகடாட்சம் ஒரு நாடறிந்த எழுத்தாளர். தனது தாய் மண்ணிலிருந்து புலம்பெயர்க்கப்பட்டு 14 வருடங்கள் கடந்து மீண்டும் இலங்கைக்கு வந்த பின்னர், வெளியிடப்பட்ட நூல் இது எனத் தனது முன்னுரையில் குறிப்பிடுவது தாய் மண்ணின் மீதிருந்த அவரின் ஏக்கத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஒரு திருமண விழாவின் இறுதியில் இனிப்புப் பலகாரம் அல்லது அலங்காரப் பொருட்களை விழாவில் கலந்து கொண்டோருக்கு வழங்குவது அனேகரின் பொதுவான செயலாகும். ஆனால் முற்றிலும் மாறாக தன்னுடைய அன்பு மகள் துர்க்காயனி மருமகன் யயந்தன் ஆகிய இருவரின் இருமண இணைவின் திருமணப்பரிசாக 16-09-2015 அன்று "மணப்பரிசு" என்னும் நூலை வெளியிட்டு இவ்வுலகினருக்குள்ளே பெருமை கொண்டார் எழுத்தாளர் திரு.க.தேவகடாட்சம் அவர்கள்.

இந்நூலினுள்ளே இந்துமத திருமணச்சடங்குப் பண்பாட்டுத் தொகுப்பு, குளக்கோட்டனின் நிருவாகச் செயற்பாட்டின் சில பகுதிகள் என்னும் கட்டுரைகளை திரு.பொ.ஜெயஸ்கரன் அவர்களும், திருஞானசம்பந்தர் கண்ட திருகோணமலை, ANTIQUITY OF KONESWARAM என்னும் ஆங்கிலக் கட்டுரை, சர்வோதயத் திருமணத்தில் தமிழ்மறைக் கழகத்தலைவர் திரு.கா.பொ. இரத்தினம் அவர்கள் ஆற்றிய உரை (காந்திப் பெரியார்-இராசநாயகி அவர்களின் மணவிழாவின் போது) போன்றவற்றை திருகோணமலையின் மூதறிஞர் திரு.வே.வரதசுந்தரம் அவர்களும், செந்தமிழ்ப்புலவர் திருவள்ளுவர் அதனோடு தமிழ் மூதாட்டி ஔவையார் காட்டிய விருந்தோம்பல் சிறப்புகள், திருமூலர் கூறிய 'வாழ்க்கைக் கணக்கு', திருக்கோணேஸ்வர ஆலய வரலாற்றுச் சுருக்கம், சில சைவசமயக் குறிப்புகள், 'இலங்கையில் தமிழர் சிறுபான்மையினரா?' போன்ற கட்டுரைகளை நூலாசிரியர் திரு.க.தேவகடாட்சம் அவர்களும் எழுதியுள்ளார்.

அந்த வகையில் மணமக்களும், மணவிழாக் காண்போரும் வாசித்தறிந்து இன்புற வேண்டியும், அதன்படி ஒழுகுதலுமே அறவாழ்க்கை என்று காட்டும் "மணப்பரிசு" நூல் சிறப்புடைத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றிப்பரிசுகளும், மதிப்பளிப்பும்

1. *1997 - திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சாகித்திய விழா (சிறுகதை - 3வது இடம்)*
2. *1999 – அரச திணைக்களப் பணியாளர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான சிறுகதைப்போட்டி (2வது இடம்)*
3. *2000 - இந்தியா, பாரத ஸ்டேட் பாங்கு நடாத்திய சிறந்த தமிழ் நூல் பரிசு (குருதிமண் சிறுகதை – 2வது இடம்)*
4. *2000 - திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சாகித்திய விழா (சிறுகதை - 1வது இடம்)*
5. *2000 – " கவிதை உறவு வருக -2000 " நினைவுச்சின்னம் இந்தியாவில் வைத்து வழங்கப்பட்டது.*
6. *2002 - ஈழத்தமிழ்ச்சங்கம், விக்டோறியா, அவுஸ்திரேலியா நடாத்திய அனைத்துலக ரீதியிலான சிறுகதைப் போட்டி. (2வது இடம்)*
7. *2003 - தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை நடாத்திய சிறுகதைப் போட்டி. (2வது இடம்)*
8. *2006-2007 - யாழ் இலக்கிய வட்டத்தின் "கனகசெந்தி கதாவிருது" (சிறுகதை – "பிணங்கள் விற்பனைக்குண்டு")*
9. *சென்னையில் நடைபெற்ற "பி.பி.ஸ்ரீநிவாஸ் பாடகருக்கான போட்டி" யில் பரிசும் சான்றிதழும் கிடைத்தது.*
10. *2015 - "மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீத்" 28 ஆவது நினைவுதின வைபவ விருது நினைவுச்சின்னம் (இலக்கியம், சமூகமேம்பாட்டுக்காக) வழங்கப்பட்டது.*
11. *2018 - சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தினால் நடாத்தப்பட்ட முத்தமிழ் விழாவின் போது ஆற்றிய இலக்கியப் பணிக்காக நினைவுச்சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.*

**விருதுகள்**

1. *2019 - "வித்தகர் விருது" (இலக்கியத்துறை) -கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.*
2. *2022 - "இலங்கேசன் விருது" (சமூகசேவைக்காக) - இராவணசேனை, திருகோணமலை.*
3. *2023 – கலைமாமணி விருது" (கலை இலக்கியப் பணிக்காக) – சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்தூக்கார் செய் நன்றியில் என் நிறைவு!

'என் காலடியை இலக்கிய சோலைக்குள் தூக்கி வைத்த மறைந்த என் அன்பு நண்பன் செ. நவசோதிராசாவிற்கு சமர்ப்பணம்.'

எனது இலக்கிய ஆக்கங்கள் அதனூடாக நான் ஆற்றிய பணிகள் சம்பந்தமாக தமது ஆக்கங்களை ஈந்த நல் உள்ளங்களையும், இவற்றை நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என எண்ணிய எமதன்புக்குரிய வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்களையும், என்றும் என்பணியில் ஆர்வத்தோடு பங்களிப்புகள் புரிந்துவரும் அனைவரையும் நன்றியுடன் மனதில் பதிப்பதில் இன்பம் காணுகிறேன்.

இந் நூல் என் இலக்கிய பயணத்தில் நான் கடந்து வந்த கரடுமுரடான பாதையை திரும்பிப்பார்க்க வைக்கின்றது.

"காலம் நம்மை விட்டு விட்டு நடப்பதில்லையே!
காதல் பாசம் தாய்மை நம்மை மறப்பதில்லையே!
என்றான் ஒரு கவிஞன்.

இந்த 'காலம்' என்பதற்கு ஒரு மகோன்னத தன்மை உண்டு! தான் நகரும் போது எம்மையும் இறுக அணைத்துக் கொண்டு தன்னோடு கொண்டு செல்லும். இந்த இலக்கியப் பாதையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழில் எந்த வித குறித்துரைக்கக் கூடிய தகைமைகள் எதுவுமின்றி இன்று வரை நடை பயின்று வருகிறேன் என்றால் அது இறை அருள் இன்றி வேறில்லை.

இப் பாதையை இலகுவாக கடந்து வரவில்லை!
எத்தனை சறுக்கல்கள்!
எத்தனை அவமானங்கள்!
எத்தனை இடர்பாடுகள்!

இவற்றில் கூறமுடியாதவை பல உண்டு! அத்தனையையும் தாண்டி காலை முன்வைத்து வருகிறேன். அதற்கு என் அறிவை தாண்டி அறமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இத்தனைக்கும் மத்தியில்,
என் அன்புக்குரிய, மதிப்பு மிகு வைத்திய கலாநிதி அ. ஸதீஸ்குமார் அவர்கள் என்னை சந்தித்த போது எனது இலக்கிய பணியும் அதனூடாக நான் ஆற்றும் செயல்களையும் நூல் வடிவில் கொண்டு வர இருப்பதாக கூறினார். அதற்கு முதலில் நான் சம்மதம் தெரிவிக்கவில்லை. இதற்கான முத்தாய்ப்பை எழுத்தாளரும் ஊடகவியலாளருமாகிய திரு.சற்சிவானந்தம் வைத்திருந்தார். அதையும் நன்றியுடன் நோக்கியிருந்தாலும் கிடப்பில் போட்டுவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்புமிகு சதீஸ்குமாரும், எழுத்தாளர் சச்சியும் ஒரே கருத்தும் பட கூறினார்கள்! 'உங்களுக்காக இல்லா விட்டாலும், எதிர் காலத்தினருக்கு உங்களின் இலக்கிய ஆளுமைகளுக்கு ஊடாக நீங்கள் ஆற்றிய கல்விப்பணிபற்றி கூறப்படவேண்டும். இது எம்பகுதி இலக்கியப் பரப்புக்குள் ஆவணமாக்கப்படல் வேண்டும் என கூறினர்.

இதனை செயல் வடிவத்திற்கு கொண்டு வந்தவர் மதிப்புமிகு வைத்தியகலாநிதி அ.ஸதீஸ்குமார் அவர்களே! உடல் காக்கும் பணியில் இருக்கும் இவருக்கு எப்படியான சுமை கொண்ட பணி இருக்கும் என்பதை கூறத்தேவையில்லை! இதற்கிடையே எனது இலக்கிய பரப்புகளுக்குள்ளும் என்னை அறிந்தவரையிலும் உள்ளவர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களின் ஆக்கங்களை பெறுவதில் அவர் நோக்கிய சிரமங்கள் சொல்லில் அடங்காதவை என்பது நன்கு அறிவேன்.

இத்தனைக்கும் இந்நூல் ஆக்கத்திற்கு நான் எந்தவகையிலும் கருவூலமானவனுமல்ல, தூண்டி விட்டவனுமல்ல! தானாகவே எதுவித பயன் நோக்காது இந்நூல் ஆக்கத்திற்கு முழுமையாக நின்று உழைத்த வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்களை எனது மரணபரியந்தமும், என் பெயர் கூறிவாழும் வரைக்கும் என் குடும்பத்தாரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பது அறம் சார்ந்த நீதியாகும் என்பதை மனதில் கொள்கிறேன்.

"பயன் தூக்கார் செய்த உதவி
நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது"

- *குறள் 103*

நன்றியுடன்
கனகசபை – தேவகடாட்சம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் எது?

– குறளில் ஒரு துளி!

மனிதன் புரியும் அனைத்து நல்ல காரியங்களையும் ஒட்டு மொத்தமாக 'அறம்' என்றும் 'அறவழி' என்றும் கூறுகின்றோம். அதுவும் தவறில்லை. இருப்பினும் அறமென்று நோக்குகின்ற அனைத்து காரியங்களிலும் மேலான எதுவும் உண்டென்றால் அது 'மனத்தூய்மையுள் அடக்கம்' என்கிறது வள்ளுவம். மற்றவை யாவும் வெறும் ஆடம்பரமும், வெளிவேடமும் என்று குறள் கூறுகின்றது.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள் 34)

இறைவனை அறவாழி அல்லது அறக்கடல் என்கிறார்கள். அதேவேளை மனதில் மாசில்லாது இருப்பதே எல்லா அறமுமாகும்.

அறம் என்றால் என்ன?
மனத் தூய்மை என்றால் என்ன?
'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' எனக்கூறிய வள்ளுவன், 'அறம் என்பது யாது?' என்பதையும் கூறிவிடுகிறார்.

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்

எனக்கூறுகிறார்.

அறத்தை நேசிப்பவர் பொறாமைப்படமாட்டார்கள்.
அவா அற்றால் வீடு பேறெய்தலாம் என குறள் 163இல் கூறுகிறார்.
இதுவே சைவநெறியும் கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org